# STR FILMS

## Golden Jubilee

1962 - 2012
50 STR
STR FILMS
GOLDEN JUBILEE

# பொன்விழா

## சிறப்பு மலர்

1962 - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STR Films

## Golden Jubilee

### Special Souvenir

1962 - 2012

STR FILMS
GOLDEN JUBILEE

## பொன்விழா

### சிறப்பு மலர்

**STR Films**
D4, Government Flats,
Bambalapitiya, Colombo - 4
Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60.290 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. திருமதி S. தியாகராஜா சரஸ்வதி
தம்பதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணங்கள்

*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடி(ப்)
போதொடு நீர் சுமந்தேத்தி(ப்) புகுவாரவர் பின் புகுவேன்
யாதுஞ்சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடுங்களிறுவருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம்கண்டறியாதன கண்டேன்.

## திருவாசகம்

சிந்தனை நின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின் றிருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனை செந்தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

தந்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்(டு)
அத்திலங்(கு) ஒருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல(கு) அளிக்கும்நின் பெருமை
பித்தனென்(று) ஒருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன் புருவம் ஆனார்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை


14/05/2018

## அருளாசிச் செய்தி

ராஜா ரசிகர்களுக்கு,

யாழ்ப்பாண சமூகத்தின் தேவைகளில் ஒன்றான திரை அரங்கின் மூலம் பல நல்ல செய்திகளைத் தந்த ராஜா தியேட்டர் இன்று தனது 50வது ஆண்டை அடைந்து இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். (S.T.R. Films) என எல்லோராலும் அழைக்கப்படும் இந் நிறுவனம் அன்றைய சமூகத்தின் நல்ல சிந்தனைகளைத் தருகின்ற சினிமாத் திரைகளூடாக பலருடைய வாழ்க்கையைப் பலமுள்ளதாக ஆக்கியமை அனைவரும் நன்கு அறிந்தவை. இதனுடைய இயக்குநர் திரு. தியாகராஜா அவர்களின் விடாமுயற்சியும், அயராத உழைப்பும் இந் நிறுவனத்தினுடைய வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்தன. இப்பணியினூடாக வரும் வருமானத்தை அறப்பணி ஆக்குகின்ற பெருமை இவரைச் சார்ந்தது. இதனாலேயே இவருக்கு ஆதீன குரு முதல்வர் "திருப்பணித்தவமணி" எனும் பட்டம் சூட்டிப் பெருமைப்படுத்தியுள்ளார். பல ஆலயங்கள், பொது மண்டபங்கள், பொதுப்பணி எனப் பலவற்றிற்கும் உதவுகின்ற மனப்பாங்கைக் கொண்டுள்ளார். ஆதீன வளர்ச்சியிலும் பல பணிகளை ஊக்குவித்துச் சிறப்புச் செய்தவர்.

எங்கள் குருநாதரின் சமாதிக் கோவிலை முன்நின்று செய்தவரும் ஆதீனத்துடன் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை உறுதுணையாகச் செயற்படுத்தியவரும் இவரே.

யாழ். நகரில் பல திரையரங்குகள் இருந்தாலும், அன்றைய காலத்தில் எல்லோருடைய மனதில் நிலைத்து நிற்பது ராஜா தியேட்டர் ஆகும். தமிழகத்தில் வெளிவரும் திரைப்படங்களை உடனுக்குடன் யாழ் மக்களுக்கு வழங்குகின்ற சிறப்பு இந் நிறுவனத்தைச் சார்ந்தது. இவற்றிற்கெல்லாம் இயக்குநரான திரு. தியாகராஜா அவர்களுடைய நேரான பார்வையும், சீரான உடையும், எடுத்த விடயத்தைச் செவ்வனே ஆற்றும் செயல்திறனும், எல்லோரிடம் இனிமையாகவே பேசும் மனச் சுபாவமும் கொண்டவர் திரு. தியாகராஜா அவர்கள். இவருடைய பணிதொடர்ந்து பல்லாண்டு காலம் நற்பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு,

[signature]

STR FILMS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)


தலைவர்:
வி. கயிலாசபிள்ளை
தொலைபேசி: 2575566 (இல்லம்)
தொலைநகல்: 2575472
மின்னஞ்சல்:
chairman@manithaneyam.org

பொதுச் செயலாளர்:
கந்தையா நீலகண்டன்
தொலைபேசி: 2580807 (இல்லம்)
2371100 (அலுவலகம்)
தொலைநகல்: 2371111
மின்னஞ்சல்: neela@mnlaw.lk

பொருளாளர்:
வே. கந்தசாமி
தொலைபேசி: 2586620 (இல்லம்)
மின்னஞ்சல்:
vkandasmi@gmail.com


"எஸ். ரி. ஆர்" என்ற மூன்று ஆங்கில எழுத்துக்களுக்கு ஒரு மகிமையை ஏற்படுத்திய பெருமைமிக்க மனிதர்தான் திரு. எஸ். தியாகராஜா.

இந்நாட்டுத் தமிழ் மக்களின் வரலாற்றுடன் பின்னிப்பிணைந்தது எஸ். ரி. ஆரின் வாழ்க்கை.

பலர் வர்த்தகத்துறையில் தங்களின் சம்பாத்தியத்தால் செல்வம் திரட்டி சொகுசான வாழ்வைத்தங்களுக்கும் தங்களின் வாரிசுகளுக்கும் அமைப்பதில் திருப்திகாண்கின்ற இன்றைய நிலையில், ஒரு சிலரே தானும் வாழ வேண்டும் தன் இனமும் வாழ்ந்து உயரவேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடன் தொண்டாற்றுகின்றனர். போற்றப்படவேண்டிய அச்சிலரில் ஒருவராக திரு. எஸ். ரி. ஆர் கடந்த ஐம்பது வருடங்களில் முன்வரிசையில் இருந்திருக்கின்றார் என்றால் மிகையாகாது.

தமிழ் நாட்டுச் சினிமா உலகுடன் நல்ல நட்புறவை ஏற்படுத்தி அந்த உறவை வளர்த்து இந்நாட்டின் தமிழ்ச் சினிமா இரசிகர்களின் ரசிகத்தாகத்தை தணித்ததும் மட்டுமல்லாமல் வடகிழக்கில் சினிமா தியேட்டர்களை மிகவும் இக்கட்டானநிலையிலும் தொடர்ந்து பேணித் துணிவுடன் செயற்பட்டார்.

தமிழரசுத்தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம், தமிழ்காங்கிரஸ் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் முதலிய பெரியோர்களின் இறுதி ஊர்வலங்களை ஒளிப்பதிவு செய்து வரலாற்று நாயகர்களின் பெருமைக்கு மெருகூட்டியிருந்தார்.

அரசியலிலும் அமைதியாகப் பலபணிகள் ஆற்றியிருக்கிறார். 1994 இல் தமிழ்தேசிய கூட்டமைப்பாக தமிழ் அரசியற்கட்சிகளை இணைப்பதில் இரவும் பகலுமாக அவருடன் இணைந்து பணியாற்றிய சமயம் அவரின் தமிழின உணர்வையும் எங்கள் மக்களின் நலனுக்காக அவர் துடித்துக் கொண்டிருந்த சிறப்பையும் சிறியேன் அறிந்தேன்.

திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச்சபை அறங்காவலர் சபையிலும் அன்பர் எஸ். ரி. ஆருடன் இணைந்து பணியாற்றுகின்ற பாக்கியத்தையும் ஆண்டவன் தந்திருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கும் மேலாக அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவையிலும் ஈழத்துத்திருநெறி மன்றம், யோகர் சுவாமி அறநிதியம் ஆகிய சமய நிறுவனங்கள் மூலமாக நீண்டகாலமாக எங்களுடன் இணைந்து சேவையாற்றுகின்ற உத்தமர் அவர். அவர் நல்ல உள்ளமிக்கவராக அமைதியாக செய்கின்ற ஆன்மீக சமூகநலப் பணிகள் பலபல, அவற்றின் பட்டியல் இந்தச் செய்தியில் அடங்காது.

"எஸ். ரி. ஆர்" காந்தசக்திமிக்க மந்திரம் போன்றேயிருக்கின்றது. அந்த நாமம் என்றும் எமது தமிழ் சைவமக்களின் உதடுகளில் தவழும். இப்போது பொன்விழாக்காணும் எஸ். ரி. ஆர் நிறுவனமே எஸ். ரி. ஆர் ஐயா என்ற ஓர் உத்தமர் என்றாலும் மிகையாகாது.

அவரும் அவரின் குடும்பமும், நிறுவனமும் மேலும் சிறப்புற ஆண்டவனருள் வேண்டி பிரார்த்தித்து நிறைவுகாண்கிறோம்.

*இங்ஙனம்*
*இறைபணியில்*

**கந்தையா நீலகண்டன்**
*பொதுச் செயலாளர்*
*அகில இலங்கை இந்து மாமன்றம்*

24.05.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழாவாழ்த்து

எஸ். ரி. ஆர் நிறுவனம் தனது பொன்விழாவை 04.07.2012 திகதியன்று கொண்டாடவுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எஸ். ரி. ஆர் என அன்பாக அழைக்கப்பெறும் இந்த நிறுவனத்தின் உரிமையாளர் சி. தியாகராசா அவர்கள் எனது நீண்டகால நண்பர். உழைப்பால் உயர்ந்தவர். தனது தொழிலில் முன்னேற்றம் கண்டவர். சமூகசேவையிலும் அரசியலிலும் ஆன்மீகத்திலும் ஈடுபாடுமிக்கவர்.

இளமைக்காலத்தில் இலங்கையில் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியில் இணைந்து உழைத்தவர். வாலிபமுன்னணிநடாத்திய ஊர்வலங்களில் தமிழரசுச் சின்னம் பொறித்த காந்திகுல்லா அணிந்து ஊர்வலங்களுக்குத் தலைமைதாங்கிச் செல்வார்.

யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினராக இருந்து பலசமூகப் பணிகள் செய்தவர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாண நகரில் ராஜா தியேட்டர் என்ற படமாளிகையுடன் ஆரம்பிக்கப்பெற்ற இந்த நிறுவனம் பின்னர் மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய நகரங்களில் படமாளிகைகளை ஆரம்பித்து நடத்தி வருகின்றது. இந்தவளர்ச்சிக்கு நிறுவன உரிமையாளர் அவர்களின் கடின உழைப்பும் விடாமுயற்சியுமே காரணமாகும்.

எஸ். ரி. ஆர் நிறுவன உரிமையாளர் தமிழ்நாடு சென்று நல்லபடங்களைத் தெரிவு செய்து இறக்குமதி செய்து வருவார். இதனால் எம். ஜி. இராமச்சந்திரன், சிவாஜி கணேசன் போன்ற அன்றைய முன்னணி நடிகர்களினதும் ஏ. வி. மெய்யப்பன் செட்டியார், ஜெமினி, வாசன் போன்ற பிரபல தயாரிப்பாளர்களினதும் அன்பிற்கும் நட்பிற்கும் பாத்திரமானார்.

ஆன்மிகத்தில் அதிகபற்றுடையவர். பலசமய ஸ்தாபனங்களில் உறுப்பினராக இருந்து பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபை உறுப்பினராகவும் உள்ளார். திருக்கேதீச்சர ஆலய அறங்காவலர் சபையிலிருந்து நற்பணியாற்றி வருகின்றார். சபாரத்தினசுவாமிகள் தொண்டர் சபைத் தலைவராகச் செயற்பட்டு தற்போது ஆலய வளாகத்தில் யாத்திரிகள் தங்குமடம் ஒன்றைக் கட்டிநிறைவு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன் கோவிலின் தெற்குப் பக்கமாக அமைந்துள்ள கதிரேசன் கோயில் அறங்காவலர் சபை பொருளாளராகப் பணியாற்றியதுடன் தற்போது அக்கோயிலின் தலைமைப் பொறுப்பை ஏற்று, கோயிற் திருப்பணிகளைச் செய்து 11. 09. 2010 திகதி அன்று கோயிலின் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றியுள்ளார்.

சி. தியாகராசா அவர்கள் தனதுதொழில் மூலம் கிடைக்கும் வருவாயின் பெரும்பகுதியை சமய சமூகப்பணிகளுக்காகச் செலவு செய்துவருகிறார். பல ஆலயத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணிகளுக்கு நிதியுதவி அளித்துவருகிறார். சைவபரிபாலனசபையினரால் சிதம்பரத்தில் கட்டப்பட்டபுண்ணியநாச்சிமடத்திற்குப் பண உதவி செய்துள்ளார்.

பெரும் புகழுடனும் சீரும் சிறப்புடனும் வாழும் சி. தியாகராசா அவர்களின் பணிகளிற்கெல்லாம் உறுதுணையாக அவருடைய துணைவியார் செயற்பட்டுவருகின்றார்.

எண்பத்திரண்டுவயதிலும் அரசியலிலும் சமுதாயசமயப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திவாழ்வதை மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துவதுடன் அந்த ஸ்தாபனத்தின் பொன்விழாச்சிறப்புற வாழ்த்துகின்றேன்.

*'சிவநெறிப்புரவலர்,'*
**த. சண்முகலிங்கம்**
*தலைவர், சைவபரிபாலன சபை*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I had a dream

I had a dream. I wanted to have a cinema of my own one day. I did not tell it to anybody because it would have been an impossible thing considering my humble beginnings. I believed in the saying "If there is a will there is a way". It was a child hood dream. In due course as I reached adolescence the seed began to germinate. I loved music and all allied arts.

Having no place of my own to start a business I thought of an improvised cool bar under the shade of a tree with only a hawker's hand cart. This enabled me to avoid any objection from the Municipal Council because it was not illegal to sell things under a tree since there was no permanent construction. Since the tree was at the main bus stand I had no difficulty in attracting customers. As I had no money for capital outlay I asked a person who was selling oranges to supply me with bag full of oranges daily for which the payment was done at the end of the day after my sales. With the money I earned in this manner it was possible for me to employ an assistant to handle the sales. I thanked my lucky stars because it was a very profitable small scale enterprise. I started life as an entrepreneur in this manner when I was very young without borrowing from any individual or institution.

I began to realize that I had a special skill which I thought of using by starting a tiny canteen in the premises of a cinema owned by someone else. Since my dream was to have a cinema of my own it was my good luck to study the cinema industry. In my child hood I had gone to India which enabled me to study the intricacies of the most popular industry at that time which was the cinema. In my home town I got hold of a magnifying glass and some rejected films from cinemas and the projection was on a wall. For a few cents it was possible for anybody to watch a film in this manner.  This is how I was catapulted into an industry that was still then the monopoly of a highly organized film magnet in Colombo. One thing led to another. I must thank everybody who patronize my enterprise and my dream was now being realized.

**S. Thiagarajah (STR)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව இலங்கைத் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனம்.
THE NATIONAL FILM CORPORATION OF SRI LANKA
(incorporated under Act. No. 47 of 1971)

# Message from the Chairman - National Film Corporation of Sri Lanka

It is a great pleasure for me to make this note on STR films at the time of they are celebrating their 50th Golden Jubilee of this venture.

STR has a long standing goodwill for maintaining many theatres in the North and East region of Sri Lanka. Even during the hard time the war was in operation STR managed to continue their service in their own.

STR is continuing their much more share especially to import of Tamil films to fulfill the requirement of Tamil speaking people.

I highly appreciate their service in both ways.

I wish STR films to continue with better service for many more years.

**Ashoka Serasinghe**
*Chairman*
*National Film Corporation of Sri Lanka*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A MESSAGE OF FELICITATION

**I** am indeed honored and privileged to send this message at a time Mr. S. Thiyagarajah (STR) to his peers colleagues and friends, when he is about to celebrate the Golden Jubilee commemorating the establishment of his worthy film theatre company-STR Films-in 1962.

I was fortunate enough to come to know STR in 1978 (Thirty Years Ago) when I was appointed Government Agent Jaffna District. It was really through performing arts that I had the first instance of coming to know him. Tacitly, I found STR to be a very sober person of a quiet disposition. To this date I have been associated with him and his work.

He is dedicated to the arts and very committed too. Continuously he gave his patronage to theatre and cinema. His company, the STR Films, has become a brand name in the North and East.

In fact I got close to him in my friendship through his patronage to the cultural work I had to organize in Jaffna as the Government Agent. Though we had his cinema screen beginning with only one cinema in Jaffna, his qualities of courage, business acumen, steadfastness and relentlessness made him open four cinemas in Trincomalee, Vavunia, and Batticaloa. He did not stop at that. He also gave his time and patronage profusely and in abundance to such religious establishment as Thiruketheeswaram Temple as senior member of the Board of Trustees, and as President Srimath Sabaratna Swamigal Thondar Sabai, Eelathu Thiruneri Thamil Mandram, Jaffna Kathir Velayutha Swami Kovil, and member of Colombo Tamil Sangam.

STR is very devoted to his family, kindhearted, and well meaning. I consider him as an example of a very devoted Hindu with an unblemished character. I wish STR good luck and good health. May Lord Ganesh shower His Blessings on STR and his beloved family.

**Lionel Fernando**
*(Ex. Government Agent, Jaffna)*

*Kotte*
*25.06.2012*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A MESSAGE OF FELICITATION

Mr. Thiyagarajah started his STR films in 1962. This year his organization celebrates half a century of successful existence. Mr. Thiyagarajah, popularly called STR, is an unassuming, simple, hardworking individual. I might say he is lucky too. God has been kind and considerate to him throughout his progressive development. He started with a single Cinema Theatre in Jaffna and in due course expanded his business of exhibiting movies to include many areas of the Northern and Eastern Provinces. Presently STR Films owns five Cinemas in Jaffna, Trincomalee, Vavunia and Batticaloa.

Interest in Music and Drama has been the hall - mark of STR from early days. He organizes even now many recitals and concerts at his Jaffna residence every first Sunday of the month to give relaxation and happiness and to encourage all interested in Music. He gets down famous artistes for this purpose. He never misses the annual Music Festival in Chennai during December every year.

A part from his entertainment business, STR has taken very keen interest in the affairs of many Hindu religious organisations. He is a Senior member of the Board of Trustees of the ancient Thirukeetheeswaram Temple. He is President of Srimath Sabaratna Swamigal Thondar Sabai, of Ealathu Thiruneri Thamil Manram and also of Jaffna Kathir Velayutha Swami Temple. He is also an active member of Colombo Thamil Sangam.

I wish him well. May his STR Films grow strength to strength.

Justice **C.V. Wigneswaran**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs


| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂක / பணிப்பாளர் / Director | 2552643 | ෆැක්ස් / தொலைநகல் / Fax | 2552825 | ඊමේල් / மின் அஞ்சல் / E-Mail | hindudir@yahoo.com |
| පොදු / பொது / General | 2552641 | | | වෙබ් අඩවිය / இணையதளம் / Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය / எனது இல. / My No. | | ඔබේ අංකය / உமது இல. / Your No. | | දිනය / திகதி / Date | 19-06-2012 |


# இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப்

# பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

'STR Films' தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடும் பொன் விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களில் தனது கிளைகளைப் பரப்பி தமிழ் மக்களுக்கு ஆறுதலைத்தேடித்தரும் தண்நிழலாக 'STR Films' நிறுவனம் விளங்கிவருகின்றது.

தென் இந்தியாவிலிருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க திரைப்படங்கள், பக்திரசம் சொட்டும் திரைப்படங்கள் என பலவகையான திரைத் தயாரிப்புகளை இலங்கைக்குத் தருவித்து காட்சிப்படுத்துவதில் இன்று வரை மக்கள் மனங்கவர்ந்த முன்னணி நிறுவனமாகத் திகழ்ந்துவருகின்றது. வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் இந் நிறுவனத்தின் வருமானத்தில் பெரும்பங்கு ஆலயப்பணிகளுக்கும் பொதுச் சேவைகளுக்கும் வழங்கப்படுவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

இந் நிறுவனத்தின் ஸ்தாபகரான திரு. எஸ். தியாகராஜா அவர்கள் பல ஆலயங்களுக்கு மணிக்கோபுரங்களை நிறுவியதோடு திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் அறங்காவலர் சபையின் மூத்த உறுப்பினராக இருந்து ஆலயத்தில் ஆறுமுகசாமி அமைப்பதற்கும் நிதியுதவி வழங்கியுள்ளார்.

முன்னாள் மாநகர சபை உறுப்பினரான திரு S.T.R அவர்கள் ஸ்ரீ சபாரட்ண சுவாமிகள் தொண்டர் சபைத் தலைவராக இருந்து பல சமய விழாக்களையும் குருபூசைகளையும் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து வருங்காலங்களிலும் திரு. S.T.R அவர்களதும் அவரது நிறுவனத்தினதும் பணிகள் சேவைகள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என வாழ்த்துவதோடு பொன் விழாக் காணும் STR Films நிறுவனம் மேலும் பல மாவட்டங்களுக்கு விஸ்தீரணம் பெறவேண்டும் என எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

*நன்றி*
*வணக்கம்*

சாந்தி நாவுக்கரசன்
*பணிப்பாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
Colombo Tamil Sangam Society Ltd.
மெய்ப்பொருள் காண்பதறிவு
Reg No. 73

# வாழ்த்துச்செய்தி

**உள்ளூர்ப் பழுத்த பயன்மரம் – எஸ். ரீ. ஆர் பிலிம்ஸ்**

எஸ். ரீ. ஆர் எனும் முதலெழுத்துக்களால் ஈழத்தமிழர் மத்தியில் நன்கு அறியப்பட்டவர் திரு. எஸ். தியாகராஜா அவர்கள். எஸ். ரீ. ஆர் பிலிம்ஸ் என்பது அவரால் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வரும் திரைப்பட விநியோக நிறுவனம். அந்நிறுவனத்தின் கீழ் திரையரங்குகளும் இயங்குகின்றன. இவை ஈழத்தமிழ் உலகின் பிராந்தியங்கள் யாவுக்கும் பயன்தரத்தக்க வகையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய பிரதான நகரங்களில் இயங்குகின்றன. ஈழத்தின் தமிழ்ப்பகுதி முழுவதையும் தழுவும் வகையிலான அவர்தம் தொழில் முயற்சி, தமிழ்த் தேசியத்தின் பால் அவருக்குள்ள தளராத உறுதிப்பாட்டை உணர்த்துவது. அத்தகைய ஒரு பற்றுறுதியின் காரணமாகவே அவர் அரசியலிலும் ஈடுபட்டார். யாழ்ப்பாணமாநகரசபை உறுப்பினராக விளங்கிச் சமூகத்தொண்டாற்றினார். தமிழ்ச்சமூதாயத்தில் அவருக்குள்ள கரிசனையைவிட மேலானது தமிழ் இலக்கியத்தின் மேலும், கலைகளின் மேலுமான அவரது கரிசனை. ஒருகாலத்தில், தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் எந்தத் துறை சார்ந்த கலைஞராயினும், பிரமுகராயினும் எஸ். ரீ. ஆர் அவர்களின் தொடர்பில்லாமல் வந்தது கிடையாது. வந்து, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் விளங்கும் அவரது கவின்மிகு இல்லத்தில் கால் மிதியாது, கைநனையாது சென்றது கிடையாது. அது போலவே இலங்கையில் இயங்கிய கலை இலக்கிய அமைப்பு எதுவும் எஸ். ரீ. ஆர். அவர்களின் உதவியின்றி ஒத்துழைப்பு இன்றி இயங்கியது கிடையாது. கொழும்புத் தமிழ்ச் சங்கமும் அதற்கு விதிவிலக்கல்ல. சில வருடங்களுக்கு முன் அவரது அனுசரணையோடு கொழும்புத் தமிழ்ச் சங்கம் வெற்றிகரமாக நடாத்திய தொல்காப்பியர் மாநாடு தமிழன்பர் எல்லார் நெஞ்சிலும் இன்றும் நிறைந்துள்ளது.

'ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு.' (215)

தாழ்விலாச் செல்வரான எஸ். ரீ. ஆர் அவர்களின் இளமைக்காலக் கலைக்கனவின் நலம் மிகு நனவாக அமைந்து நாட்டவர்க்கெல்லாம் நன்மை பயக்கும் தொழில்நிறுவனமான எஸ். ரீ. ஆர் பிலிம்ஸ் நிறுவப்பெற்று 50 ஆண்டுகள் நிறைவுறுகின்றமை தமிழ் நெஞ்சங் களையும் நிறைவிப்பதாகும். ஏனெனில் அந்நிறுவனத்தின் இலாபம் தமிழ்ச் சமுதாயத்திலும் நன்கு சுவறியுள்ளது. எஸ். ரீ. ஆர் பிலிம்ஸ் என்றும் நின்றும் நிலைத்து நின்று நன்றே வளர்வதாக!

'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான்கண்படின்.' (216)

மு. கதிர்காமநாதன்
*தலைவர்,*
*கொழும்பு தமிழ்ச் சங்கம்.*
2012.05.03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்தே தான் உழைத்திட்ட தக்கோன் வாழ்க!

மங்கலமாய் அருள் நிறைய மகிமை சேர
மாண்புடையோர் உளம் மகிழ்ந்து வாழ்த்துக்கூற
நன்கலமாய் சமுதாயப் பணியில் ஓங்கி
நானிலத்தோர் போற்றிடவே பெருமை கொண்டு
பங்கமற எஸ். ரி. ஆர் நிறுவனத்தை
பலர் போற்ற நிர்வகித்து பாரில் ஓங்கி
பொங்கு புகழ் பொலிந்திடவே புவியில் இன்று
பொன்விழாவும் கண்டனராம் புகழோர் வாழி!

போரில்லா யாழ்ப்பாணப் புவியில் அன்று
பொன்னெனவே திகழ்ந்தமிழ்ச் செல்வர் தம்முள்
வீறோடு புகழ் படைத்து வேந்தர் என்ன
விளங்கிய நற் பெரியவர் தாம் எஸ். ரி. ஆராம்
ஊரோடு ஒன்றித்தான் உயர் அறங்கள்
ஒப்பின்றி பலர் வியக்கச் செய்ததாலே
பேரோடும் புகழோடும் பெருமை சேர
பெருமையுற வாழ்ந்தவர் தாம் எஸ். ரி. ஆராம்

யாழ்ப்பாண மக்கள் எலாம் கலையிலூறி
ஞாலமெலாம் விளைகின்ற பெருமை காண
வீழாத பெருமையுடன் ராஜா என்னும்
வீறான சினிமாவின் தியேட்டர் ஓங்க
காலாக நின்று பெரும் காட்சியெல்லாம்
கண்டு தமிழ் மக்கள் மனம் உவகை கூற
மாளாது உழைத்த மகன் மண்ணில் இன்று
மாண்புடனே நிறுவனத்தின் விழவுங் கண்டான்.

தமிழ் நாட்டின் முதல்வர் எனும் பெருமை கொண்ட
தனித்த பெரும் நடிகரவர் எம். ஜி. ஆரை
அமிழ்தான நட்பதனால் அழைத்து வந்து
அந்நாளில் யாழ் மண்ணை மிதிக்கச் செய்தார்.
நிமிர்வான கலைஞர் பலர் தம்மை இங்கு
நிகரில்லாப் பெருமையுடன் அழைத்தே வந்து
தமிழ் ஆறாய் நம் மண்ணில் பாய்வதற்கு
தனித்தே தான் உழைத்திட்ட தக்கோன் வாழ்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலார் பலரும் தான் அன்போடிந்த
அரிய பெரும் மனிதர் தமின் இல்லந்தேடி
நிரையினிலே வந்ததனை மறக்கலாமோ?
நேர் நின்று அவர்க்கு வழிகாட்டித் தன்னை
மறைத்து வெளி உலகிற்கு பெருமையெல்லாம்
வந்தவர்க்கு ஆக்கித்தான் நிமிர்ந்து நின்ற
விரையாகி மலர்க்குத்தான் பெருமை சேர்க்கும்
வேந்தன் இவன் பெருமையினை மறக்கலாமோ?

ஆலயங்கள் பல அமைத்தான் அறங்கள் செய்தான்
அற்புதமாய்க் கலை வளர்த்தான் அவனியெங்கும்
ஈழமதன் பெருமை சொல நிமிர்ந்து நின்றான்
இயலாத பல பேர்க்கு வாழ்வு தந்தான்
ஆழமுடன் சிவனடியை நினைந்து, நல்ல
அற்புதமாம் மடமமைத்த அடியார் உள்ளம்
நீள நினைந்திடவேதான் நின்றான் இன்றும்
நிகரில்லாப் பெருமனிதன் வாழி வாழி!

அந்நாளில் யாழ் மண்ணில் கம்பன் தன்னை
அரிய பெரும் முயற்சியெலாம் செய்து நாங்கள்
முன்னேற்ற நினைக்கையிலே அன்பால் எங்கள்
முதுகெலும்பாய் நின்று பெருந் துணைகள் செய்தான்
கண்ணாகப் பின்னாளில் கழகங்காத்து
கைபிடித்து எப்போதும் துணையாய் வந்தான்
அன்னாரின் எஸ். ரி. ஆர் நிறுவனந் தான்
ஐம்பதினைத் தொட்டதுவாம் அகமகிழ்ந்தோம்.

பொன்னான பெருமனிதன் தியாகராஜா
புகழ் பொலிந்து மென்மேலும் வாழி வாழி!
கண்ணாக அவன் வளர்த்த அரிய நல்ல
களங்கமில்லா நிறுவனமும் வாழி வாழி!
மென்மேலும் அவன் அறங்கள் வாழி வாழி!
மேன்மையுற அவன் குடும்பம் வாழி வாழி!
கண்ணார்ந்த நெற்றியுடைக்கடவுள் தன்னின்
கால் தொட்டு வாழ்த்துகிறோம் வாழி வாழி!

கம்பவாரிதி இ. ஜெயராஜ்

STR FILMS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழாக்கண்டு பொலிக!

தமிழ் மொழியிலே எண்ணிக்கை என்பது பொருளமைதிகொண்ட மந்திரம் போன்றது. எண்ணிக்கைகள் மனிதனுடைய வாழ்வில் வலுவைச்சேர்க்கும் என்பது முன்னோர் நம்பிக்கை.

"கடபையாதி சங்க்யை" என்பது மிக நுண்மையாக எண்ணிக்கையின் பலனைக் கூறும் ஒரு முறையாகும். சான்றாக "18" என்ற எண்ணை "ஜய" என்று குறிப்பார்கள். அதற்கு 'வெற்றி' என்ற பொருள் மறைவாக அமைந்துள்ளது. இதுபோல 25 ஆண்டுகளை வெள்ளி என்றும் 50, 60, 75, 80, 100 முதலிய ஆண்டுகளைப் பொன், மணி, பவளம், முத்து, சதாபிஷேகம் என்றும் மக்கள் தங்கள் வாழ்நாட்களைக் கொண்டாடி மகிழ்கின்றனர். தமிழைப் போலவே ஆங்கில எழுத்துக்களுக்கும் எண்ணிக்கை உண்டு. இன்று கூட எண்கணிதத்தில் நம்பிக்கை மிக்கவர்கள், தங்கள் பெயரிலுள்ள ஆங்கில எழுத்துக்களைக் கூட்டியும், குறைத்தும் அமைத்துக் கொள்வதைப் பார்க்கிறோம்.

அதுபோல இன்று எம்மிடையே நடமாடும் சான்றோனாகத் திகழ்பவர். எஸ்–ரி–ஆர் என்ற மூன்றெழுத்துத் தாரகத்தை முன்பெயராகக்கொண்ட திரு. எஸ். தியாகராஜா அவர்கள். பெயரிலேயே தியாகத்தை தாங்கி நிற்கும் அவரது வாழ்க்கையும் கடுமையான மேடு, பள்ளங்களைத் தாண்டி, தொண்டினாலும், உழைப்பாலும், விடா முயற்சியாலும் உயர்ந்தது.

பொன்மனச் செம்மல்" என்று வாரியார் சுவாமிகளால் வாழ்த்துப் பெற்றவர். தமிழக முன்னாள் முதலமைச்சரும் பிரபல நடிகருமான அமரர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள். எம். ஜி. ஆர் என்றும் அந்த மந்திரச் சக்தியுடன் நெருங்கிய நட்புரிமை பூண்டவர் நமது எஸ். ரி. ஆர் அவர்கள்.

இளமையிலேயே திரைப்படத்துறையில் காலூன்றி, எதிர்ப்பட்ட தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி மேலே மேலே உயர்ந்தவர், திரு. எஸ். தியாகராஜா அவர்கள். அது மட்டுமல்லாமல் சிறந்த பண்பாளர். அன்பு, அருள், கொடை இவற்றின் கொள்கலன். இசை ஆர்வலர்; சிறந்த சைவச் சான்றோர்.

இத்தகு பண்பாளர் "எஸ் – ரி – ஆர் பிலிம்ஸ்" என்ற மூன்றெழுத்து நிறுவனத்தை 1962இல் நிறுவி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற இடங்களில் திரையரங்குகளை அமைத்து நூறு நாட்களுக்கும் மேலாகத் திரைப்படங்களை வெளியிட்ட சாதனையாளர்.

"எஸ் – ரி – ஆர் பிலிம்ஸ்" பலப்பல சாதனைகளைச் செய்து ஐம்பதாண்டுகளைப் பூர்த்தி செய்து 2012இல் பொன்விழாக் கொண்டாடுவது போற்றுதற்குரிய நிகழ்வாகும். இதுபோன்று பற்பல வெற்றிகளையும், நோயற்ற வாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும் மூன்றெழுத்தில் முத்திரை பதித்த இந்த மூதறிவாளருக்கு வழங்க, நான் நாளும் பரவும் அம்பிகையின் மலர்ப் பாதங்களைப் பணிந்து வாழ்த்துகிறேன்.

"நலமே நிறைக!"

*அன்புடன்,*

வசந்தா வைத்தியநாதன்.

22.05.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

திரைப்பட விநியோகத்துறையில் தொழில் அதிபராக, சொந்த முயற்சியினால் உழைத்து முன்னேறிய திரு. எஸ். தியாகராஜா அவர்களின் ஐம்பதாவது வருட சேவைப் பூர்த்தியை ஒட்டி எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு எஸ். தியாகராஜா ஆரம்பித்த எஸ். ரி. ஆர் பிலிம்ஸ் ஸ்தாபனம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் திரைப்பட விநியோகத் துறையில் தனித்துவமான இடத்தைப் பெற்று விளங்குகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பத்தில் திரைப்படத் தொழிலில் பிரவேசித்த திரு. தியாகராஜா, பின்னர் ராஜா தியேட்டரை ஸ்தாபித்தார். திரைப்படங்களை விநியோகஸ்தர்களிடமிருந்து பெறுவதில் ஆரம்பத்தில் சிரமங்களை எதிர்நோக்கிய அவர் தாமே சொந்தமாக திரைப்பட விநியோகத் துறையில் இறங்கினார். எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் என்ற திரைப்பட விநியோக நிறுவனத்தை ஆரம்பித்தார். அதன் மூலம் இந்தியாவிலிருந்து திரைப்படங்களை இறக்குமதி செய்து வடக்கு கிழக்கு மாகாணங்களை மையமாக வைத்து விநியோகம் செய்யத் தொடங்கினார். அத்துடன் வடக்குகிழக்கு மாகாணங்களில் இதற்கெனத் தாமே தியேட்டர்களை சொந்தமாக நிறுவி, திரைப்படத்துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கி வந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ராஜா தியேட்டர், வவுனியாவில் வசந்தி தியேட்டர், மட்டக்களப்பில் சாந்தி தியேட்டர், திருகோணமலையில் சரஸ்வதி தியேட்டர், மன்னாரில் நாதன் தியேட்டர் என்று சொந்தமாக தியேட்டர் வலைப்பின்னல் அமைப்பை ஏற்படுத்தி வடக்கு கிழக்கில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி திரைப்படத்துறை விநியோகத் துறையில் புரட்சியை ஏற்படுத்தி வரலாற்றுச் சாதனை புரிந்து இன்று ஒரு தூணாக விளங்குகின்றார். எமது சமூகத்தின் தொழில், சமய மற்றும் சமூகம் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வந்துள்ள பண்பாளரும் நேர்மையாளருமான பெரியார் எஸ். தியாகராஜாவின் சேவை வடக்கு கிழக்கு மக்களுக்குத் தொடர்ந்தும் கிடைக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

தந்தை செல்வநாயகம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியில் ஆரம்ப கால முதல் உறுப்பினராகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிராந்திய பொருளாளராகவும், தற்போதைய தமிழரசுக் கட்சியின் பொருளாளராகவும், முன்நாள் மாநகரசபை உறுப்பினராகவும், யாழ். பிரதேச சபைத் தலைவராகவும், சமய சமூக வேலைகளைச் செய்பவராகவும் மிகுந்த தமிழ் பற்று உடையவராகவும் வாழ்பவர்.

இரா. சம்பந்தன்,
*பாராளுமன்ற உறுப்பினர்,*
*திருக்கோணமலை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

# 'எஸ். ரி. ஆர்' எனும் தியாகராசா மாண்புடை மனிதனை வாழ்த்தி நிற்கின்றோம்

ஒரு சாதாரண மனிதன், தான் அர்ப்பணித்த, கடும் உழைப்பால் உயர்ந்த மனிதனாக மக்கள் மனதில் பதியப்பெற்ற ஒரு வரலாற்றை ஐம்பது ஆண்டுகளில் கொண்டாடும் போது நாமும் இணைந்து வாழும்போது வாழ்த்தி மகிழ்கின்றோம்.

திரு. தியாகராசா (எஸ். ரி. ஆர்) அண்ணர் தான் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு சினிமாத் துறையில் மனம் வைத்துக் காலடி வைத்து ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் மனம் வைத்த இத்தொழிலில் இறங்குவதற்கு 'எம். ஜி. ஆர்', அவர்களும் அவர் நடித்த சினிமாப்படங்களும் காரணமாயமைந்தன. "எஸ். ரி. ஆர் பிலிம்ஸ்" என்ற பெயரில் படிப்படியாக, நிதானமாக பல போட்டிகள் மத்தியில் தான் எண்ணிய தொழிலில் முனேற்றமடைந்த ஒரு உதாரண மனிதனாக 'எஸ். ரி. ஆர்' அண்ணர் விளங்குகிறார்.

இன்று யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய தமிழ்த் தேசத்துப் பட்டினங்களில் அவரின் சினிமாப் படமாளிகைகள் எழுந்து நிற்கின்றன.

'எஸ். ரி. ஆர்' அண்ணர் சிறந்த, நிறைந்த ஆன்மீக ஈடுபாட்டாளர். அவரின் திருப்பணிகள் இன்றும் திருக்கேதீஸ்வரத்தில் நிறைவேறி வருகின்றன. தென்னிந்தியக் கடலோரத்தில் திருச்செந்தூர் முருகனிடம் ஆழமான மன நிறைவுற்ற பக்தி கொண்டவர். அதுபோலக் குடும்ப வாழ்விலும் பல்லாண்டு தன் நிறைவு பெற்று வாழ்பவர்.

சைவ, சமூக மற்றும் மனிதாபிமானப் பணிகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு தன் உழைப்பில் வாரி வழங்கி மன நிறைவு கொள்பவர். மக்களுடன் மனம்நோகாமல், பண்புடன் பழகி மனிதர்களின் அன்புக்கும் பாசத்துக்கும், ஈர்ப்புங் கொண்ட மாண்புடை மனிதர். எத்தனையோ இடர்களை வாழ்விலும், தொழில் துறையிலும் சந்தித்த பொழுதும் அவற்றை வெற்றி கொண்டு எழுந்து நிற்பவர்.

எப்பொழுதும் அமைதியும், சாந்தமும், சமாதானமுமாய் மகிழ்ந்து வாழும் அவர் மனையாள் இதற்கெல்லாம் துணை நின்று 'எஸ். ரி. ஆர்' அண்ணர் உயர்வுக்கு உதவி உள்ளம் மகிழ்ந்து வாழ்கின்றார். அவரையும் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டி நிற்கின்றேன். அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சில் வெல்லும் சொல்லிருக்கும், அர்த்தமிருக்கும். இனிய தமிழில் அழகாய்ப் பேசும் ஆற்றல் கொண்டவர்.

தமிழ்த் தேச மக்கள் வாழ்விலும் அரசியலிலும் தந்தை செல்வாவுடன் இளம் வயதிலிருந்தே பழகிக் கொள்கைப் பிடிப்பாளனாய், இலட்சியப்பற்றாளனாய், தமிழரசே தன் வழியென்று திடசங்கற்பமாய் வாழ்ந்து வருகிறார். தமிழரசுக்கட்சியின், தமிழர் விடுதலைக் கூட்டணியின், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பொருளாளராய் விளங்கி மிகுந்த தலைமைத்துவப் பண்புகளுடன் திகழ்கின்றார்.

யாழ். மாநகரசபையின் உறுப்பினராய்ப் பணியாற்றியவர். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களிலெல்லாம் துணிச்சலுடன் பங்கு கொண்டு தமிழினத்தின் விடுதலைக்காகத்தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து வருபவர்.

தான் தொட்ட துறைகளிலெல்லாம் வெற்றி பெற்ற தொழிலதிபராய் உதாரண மனிதராய் சாதனை செய்து விளங்கி வரும் பெருந்தகை "எஸ். ரி. ஆர் அண்ணரை" இப் பொன்விழா நாளிலும் என்றும் நலமுடன் வாழ வாழ்த்தி நின்று மகிழ்கின்றோம்.

மாவை. சேனாதிராசா பா. உ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணி
# දෙමළ එක්සත් විමුක්ති පෙරමුණ
# TAMIL UNITED LIBERATION FRONT

Tel/Fax : (+94) 21 222 3631
(+94) 21 320 7500
Mobile : (+94) 777890171

'Thanthai Selva Akam',
57/48, Stanley Road,
Jaffna, Sri Lanka.


31-05-2012

எஸ். ரி. ஆர் என்ற மூன்றெழுத்து ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்குமேல் சினிமாத்துறையில் கொடிகட்டிப்பறந்துகொண்டிருக்கிறது. அந்தப் பெருமைக்குரியவர் யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கின் உரிமையாளர் திரு. எஸ். தியாகராஜா அவர்களே!

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் திரையரங்குகளைத் திறம்பட நடத்தியவர். தன் விடா முயற்சியினால் படிப்படியாக முன்னேறி எஸ். ரி. ஆர் பிலிம்ஸ் (STR Films) என்ற ஸ்தாபனத்தை உருவாக்கி சினிமாத்துறையில் பிரபலங்களுடன் முட்டிமோதி தரம்மிக்க பல திரைப்படங்களின் விநியோகஸ்தராக இன்றுவரை திகழ்கின்றார்.

1998 ஆண்டுகளில் மூடப்பட்டிருந்த ராஜா திரையரங்கை மீள இயங்கவைக்க அவர்பட்ட கஷ்டங்கள் – மிரட்டல்கள் அத்தனையையும் எதிர்த்து வெற்றிகரமாக மீண்டும் அவற்றை இயங்கவைத்து தன் முயற்சியில் வெற்றி கண்டவர். மிகுந்த இறைபக்தி கொண்டவர். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற பழமொழி இவரது வாழ்க்கைக்கு சத்தியமான சான்றாகிறது.

அரசியலில் தந்தை செல்வா தமிழினத்தின் ஒற்றுமைக்கு சகல கட்சிகளையும் இணைத்து புதியதொரு கட்சியாக தமிழர் விடுதலைக்கூட்டணியை ஆரம்பித்தபோது எம்முடன் தோளோடுதோள் நின்று அரும்பணியாற்றியவர். யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அங்கத்தவராக தெரிவாகி அரிய பலசேவைகளை மக்களுக்கு ஆற்றியவர். கூட்டணியின் உருவாக்கம் இன்றைய இளைஞர்களுக்குத் தெரியாவிட்டாலும் பழையவர்கள் இன்றும் நன்றியுடன் நினைவு கூருவர்.

1977ல் தந்தை செல்வா அமரத்துவமடைந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இறுதி ஊர்வலத்தை ஒரு வரலாற்று நிகழ்வாக படம்பிடித்து இன்றும் அதைப் பதிவுசெய்து வைத்த பெருமைக்குரியவர். இன்று தமிழினத்திற்கு தந்தை செல்வா விட்டுச்சென்ற பொக்கிஷமாக என்னைப் பொறுத்தவரை நான் நினைவு கொள்வது அவரால் தோற்றுவிக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியும் – இறுதி வரை அவர்மீது போர்த்து கௌரவிக்கப்பட்ட உதயசூரியன் கொடியையுமே! இதற்குச் சாட்சி திரு. எஸ். ரி. ஆர் அவர்களின் தந்தை செல்வா பற்றிய வரலாற்று ஆவணமே என்பதைத் தெரிவித்து அவரது சமய சமூகப் பணிகள் மேன்மேலும் தொடர திடமான தேகாரோக்கியத்தைப் பெற்று நலமுடன் வாழப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

ஒப்பம்

வீ. ஆனந்தசங்கரி,
*செயலாளர் நாயகம்,*
*தமிழர் விடுதலைக் கூட்டணி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STR FILMS

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

# பொன்விழா காணும் எஸ். ரி. ஆர்

எஸ். ரி. ஆர் நிறுவனம் மூன்று எழுத்துக்கலையானது. இந்த மூன்று தமிழில் மிக முக்கியத்துவம் பெற்ற இலக்கமாகும். தமிழ், இயல், இசை, நாடகம் என மூன்று கனிமா, பலா, வாழை என மூன்று பிரம்மா விஸ்ணு உருத்திரன் என கடவுளர் மூவர். சேர சோழ பாண்டியர் என முடியுடை வேந்தரும் மூவரே.

இந்த வரிசையில் எஸ். ரி. ஆர் நிறுவனமும் பெருமை பெறுகின்றது. அரை நூற்றாண்டை கடந்து நிற்கின்றது என்பதால் நானும் பெருமைப்படுகிறேன். அது பொன் விழா காணும் பூரிப்பில் நாமும் பூரிப்படைகின்றோம். எந்த ஒரு விடயமாயினும் அத்திபாரம் பலம்மிக்கதாக அமைய வேண்டும். அப்போதுதான் அது உறுதியாக என்றும் நிலைத்திருக்கும்.

எஸ். ரி. ஆர் நிறுவனத்தின் அத்திபாரமும் பலமாக இடப்பட்டுள்ளது. அதனால்தான் அது சூறாவளி. சுனாமி கொடிய யுத்தம் என பல அனர்த்தங்களைக்கடந்தும் சிதையாமல், சின்னாபின்னமாகாமல் தலை நிமிர்ந்து நிற்கிறது. தமிழ் அன்னை போல் சீர்மையுடன் திகழ்கிறது.

இன்று சினிமா மக்கள் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்து விட்டது. மக்களின் பிரதான பொழுதுபோக்கே திரைதான். எனவே இத் திரையுடன் மக்களை இணைத்த இந்நிறுவனம் திரைப்படங்களை இறக்குமதி செய்வது போன்ற செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்தியுள்ளது.

தமிழன் என்ற வகையில் நாம் இது பற்றி பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது. திரைப்பணியில் அரை நூற்றாண்டு நிலைத்திருப்பது போலவே அது தமிழ்த் தேசியத்திலும் அகலக்கால் பதித்துள்ளது. அதனால் தமிழ்த் தேசியம் உறுதி பெற்றுள்ளது. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இசைத் தந்தை என்றோற்றான் தொல் எனும் சொல் என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய் மொழிக்கு அமைய இந்த நிறுவனத்தின் தாபகர் இலக்கணமாகவுள்ளார். நிறுவனமும் அவரைச் சார்ந்தோரும் நோய் நொடியின்றி நீண்ட நாள் இன்புற்று வாழ பிரார்த்திக்கின்றேன். எஸ். ரி. ஆர் நிறுவனம் மாபெரும் விருட்சமாகி மாபெரும் கிளை பரப்பி சினிமாக்கலைக்கும் தமிழ்க்கும் பாரிய தொண்டாற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

*68, புகையிரத நிலைய வீதி*
*மட்டக்களப்பு*

பொன் செல்வராசா
*பாராளுமன்ற உறுப்பினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்
# புகழ் என்றும் நிலைத்திருக்கும்

தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுப் பொருளீட்டிப் புகழ் பெற்றோர் பலர். இவர்களில் சினிமாத்துறையில் தாம் கொண்டிருந்த ஈடுபாட்டினால் பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுத்துச் சளைக்காது இன்றும் கொடிகட்டிப் பறக்கும் முன்னணி வணிகப் பெருமக்களில் நாம் எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் எஸ். ரி. ஆர் அவர்களும் ஒருவர் என்பது சொல்லித் தெரிவதில்லை.

சினிமாத் துறையில் இளமைக்காலத்தில் தாம் கொண்டிருந்த ஈடுபாட்டினால் சினிமாப் படங்களை இந்தியாவிலிருந்து தருவித்து ஈழத்துத் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அளிக்க வேண்டுமென்பது இவரது வேணவாவாக இருந்தது. ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் மக்களின் பொழுது போக்கும் சாதனமாகச் சினிமா மட்டுமே விளங்கியது. இன்றுபோல் தொலைக்காட்சி அன்று பிரபல்யம் அடைந்திருக்கவில்லை. அக்காலப் படங்களில் இப்போது இருப்பதுபோல் ஆபாசக் காட்சிகளில்லை. நல்ல பொருள் பொதிந்த செய்திகள் மக்களின் ரசனைக்காக வெளிவந்தன. சுருங்கக் கூறின் நிஜ வாழ்க்கையின் இன்பதுன்பங்களைப் படம் பிடித்துக் காட்டும் அறிவுச் சாதனங்களாகவே சினிமாத்துறை விளங்கியது.

இருந்தும் சினிமாத்துறையுங் கூட ஒரு சிலரின் ஏகபோக உரிமையாக இருந்ததால் இத்தகைய பெரிய முதலாளிகளுடன் போட்டி போடுவது இளம் எஸ். ரி. ஆர் அவர்களுக்குப் பெருஞ் சவாலாகியது.

ஈழத்திலும் இத்துறையில் பிரபல்யமானவர்களின் ஒத்தாசையும் அனுசரணையும் இன்றி இத்துறையில் முன்னேறுவது என்பது பெருஞ் சவாலாக அமைந்தது. இத்தகைய சவால்களில் ஆளும் அரசின் முக்கியஸ்தர்களைத் தக்கவாறு அணுகி ஆவன செய்தலும் அமைந்தது. இவை எல்லாம் மிகப் பெரும் சவால்களாக விளங்கியதை 1959 இல் ராஜா தியேட்டரின் நிருமாணப் பணிகள் ஆரம்பித்து ஒப் பேற்றி வைக்கப்பட்டும் கூட 1962 இல் தான் இத் தியேட்டரில் முதல் முதலாக ஒரு படத்தினை இவர்களால் திரையிட முடிந்தது என்பது எடுத்துக்காட்டுகிறது. இப்படத்தின் பெயர் தான் "பெண்ணே நீ வாழ்க" என்பதாகும் இத்துறையில் இவர்கள் துரித முன்னேற்றமடைவதற்குத் தமிழகத்திலுள்ள இத்துறை சார்ந்த முக்கியஸ்தர்களுடன் இவர்கள் கொண்டிருந்த ஈடுபாடும் ஒரு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. குறிப்பாக மக்கள் திலகம் எம். ஜி. ஆரிடம் இவர்கள் கொண்டிருந்த நட்பு இத்துறை சார்ந்த வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்திருந்தது.

எம். ஜி. ஆர் அவர்கள் ஒரு தமிழ்த் தேசியவாதி. தந்தை 'செல்வா' மீது அளவு கடந்த அன்பும் மரியாதையும் கொண்டவர். தலைவர்களாக இரும்பு மனிதர் நாகநாதன், தலைவர் அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புக்கும் அரவணைப்புக்கும் பாத்திரமானவர். தமிழரசுக் கட்சியின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாளராக விளங்கும் இவர்கள் பெயரளவில் மட்டும் பொருளாளராக இருக்கவில்லை. வேண்டிய வேண்டிய நேரங்களில் எல்லாம் நிதி உதவி அளித்துக் கட்சிக்குக் கைகொடுத்தவர். பின்னர் உதயமான தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் முக்கிய பங்காற்றியவர். இவ்வாறு தமிழ்த் தேசியத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டினால் தமிழர் தாயகமாகிய வட கிழக்கு மாகாணங்களில் தியேட்டர்களைக் கட்டுவதில் முனைப்புடன் செயற்பட்டார். இப்பணியில் கூட இவர் சந்தித்த சவால்கள் பல. யாழ்ப்பாணத்தில் ராஜா தியேட்டருடன் இரண்டு தியேட்டர்களும், வவுனியாவில் வசந்தி, திருகோணமலையில் சரஸ்வதி, மட்டக்களப்பில் சாந்தி ஆகியன எஸ். ரி. ஆர் அவர்களின் தமிழ்த் தேசியத்தின் ஈடுபாட்டுக்கும் தமிழ் மீது இவருக்குள்ள பற்றுதலுக்கும் சிறந்த உதாரணங்களாகும். இறு சினிமாப் படங்களின் ஏக விநியோகஸ்தராகத் தேசிய கூட்டுத்தாபனம் விளங்குகிறது. எஸ். ரி. ஆர் பிலிம்ஸ் இன்று எல்லாமாக 25 தியேட்டர்களில் காட்சிப்படுத்தப்படுவதானது அன்னாரின் கடின உழைப்புக்கும் விடா முயற்ச்சிக்கும் சிறந்த உரைக் கல்லாக அமைகிறது.

இன்றைய உலகு தானும் தனது குடும்பமும் வாழ்ந்தால் போதும் என்ற சித்தாந்தத்திலும், பொருளைத்தேடி அலைவதிலுமே மிகப் பெரிய கண்ணும் கருத்துமாகத் திகழ்கிறது. எஸ். ரி. ஆர் அவர்கள் தமது குடும்பத்தை வளப்படுத்திய அதே நேரத்தில் தமது பணிகளைக் குடும்பத்துக்கு அப்பால் சமூகத்திற்கும் விரிவு படுத்தியவர். லௌகீகத்தில் மட்டும் நம்பிக்கை வைத்திருக்கவில்லை. வாழ்க்கை என்பது லௌகீகமும் ஆத்மீகமும் இணைந்ததே என்பது இவரது கோட்பாடாகும்.. தம்மை அணுகியவர்களுக்கு வேண்டிய நேரத்தில் வேண்டிய உதவிகளை நல்கியவர் தமிழ், இசை ஆகிய துறைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டவர் இவற்றின் வளர்ச்சி நிதி உதவி அளிப்பவர். ஆலய நிர்மானப் பணிகள் பலவற்றுக்கு உதவி செய்து வருபவர் மட்டுமன்றி இன்றும் பல ஆலயங்களில் ஆயுட்காலச் சபை உறுப்பினராக இருந்து அவற்றின் வளர்ச்சிக்கு உதவி அளித்து வருபவர். விசேடமாக, திருக்கேதீஸ்வர ஆலயப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு இன்றும் அங்கு ஒரு விடுதியை அமைப்பதில் ஈடுபட்டுள்ளார்.

ஒரு நிறுவனத்தை அமைப்பது மிகச்சிரமம். பல்வேறு சவால்கள் மத்தியில் தாம் ஏற்றிய விளக்காகிய அந்நிறுவனத்தைக் கண்ணை இமைக்காப்பது போல் காத்து அதனை வளர்த்தெடுப்பது கடும்பணி நமது கண்முன்னே பல நிறுவனங்கள் தோன்றி அழிந்ததை கண்டுள்ளோம். இருந்தும் ஐம்பது ஆண்டுகளாகச் சளைக்காது இந்நிறுவனத்தை வளர்த்தெடுத்த பெரும் சாதனையாளர் எஸ். ரி. ஆர் என்றால் மிகையாகாது. இத்தகைய சாதனையாளரைப் போற்றுவதும், நிறுவனம் நீடூழி வாழ வேண்டுமென வாழ்த்துவதும் நமது பணியே.

பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லையா இராஜதுரை



அன்பு நெஞ்சர் திரு. எஸ். டி. ஆர் பழகுவதற்கு இனியவர், பண்பாளர், ஆன்மீகம், கலை, அரசியல் ஆகிய துறைகளில் மிகுந்த ஈடுபாடு உடையவர். அவர் நிதியால் அழகு பெற்ற திருக்கோயில்கள் ஏராளம். கலையுலகில் அவர் ஒரு கலங்கரை விளக்கம். அரசியலில் சத்தியம் தவறாத உத்தமர்.

இலங்கையில் அவரைத் தெரியாதவர்கள் இல்லை. தமிழகத்தில் மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., நடிகர் திலகம் சிவாஜி முதலான முன்னணி நட்சத்திரங்களின் நெருங்கிய நண்பர்.

இலங்கையில் சினிமாத் துறையில் இமயங்களானவர்களுடன் ஈடுகொடுத்து சினிமாப் படங்களை இறக்குமதி செய்து வெற்றி கண்ட சாதனையாளர்.

"இல்லை" என்று சென்றவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் அள்ளிக் கொடுத்த வள்ளல் அவர். வட கிழக்கு மாகாணங்களில் பல சினிமாப் படமாளிகைகளை உருவாக்கிய சாதனையாளர்.

எல்லோருக்கும் இனியவர். தமிழ் தந்தை செல்வாவின் அன்பினைப் பெற்றவர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக என் உடன் பிறவா சகோதரர் போல் என்னோடு பழகுபவர். அன்பு கொண்டவர். பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் திரு அருளினால் அவர் மென்மேலும் சீரும் சிறப்பும் பெற்று வாழப் பிரார்த்திக்கின்றேன்.

அவர் குடும்பம் சீரோடும் சிறப்போடும் வாழ பகவானைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க வழமோடு, வழர்க சீரோடு!

*அன்பன்,*

செல்லையா இராஜதுரை

செல்லையா இராஜதுரை

*முன்னாள் மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்ற உறுப்பினர்*
*முன்னாள் மட்டக்களப்பு முதல் மாநகர முதல்வர்,*
*முன்னாள் பிரதேச அபிவிருத்தி இந்து சமய இந்து கலாசார, தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர்*
*முன்னாள் மலேசியாவிற்கான இலங்கைத் தூதுவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறோம்

எஸ். ரி. ஆர் – இந்த மூன்று எழுத்து இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவில், தமிழ் நாட்டிலும் எல்லோரும் தெரிந்த பெயர். இன்றைக்கும் இந்தப் பெயர் அழியா வரம் பெற்று விளங்குகின்றது.

எஸ். ரி. ஆர் ஒரு அமைதியான, சாந்தமான, பண்புள்ள மனிதர். அவருக்கு எதிரிகளே இல்லை. அன்னாரது ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையே அவரை இன்று வரை காத்து நிற்கிறது. எத்தனையோ தான தர்மங்கள், அன்ன தானங்கள் அவரது வாழ் நாளில் இற்றை வரை செய்து கொண்டே இருக்கின்றார். அதன் காரணமாக அவருக்கு வந்த சோதனைகளைத் தாங்கி மீண்டுள்ளார். அவருக்குப் புகழ் சேர்த்துக் கொடுத்த படங்கள் இன்றுவரை யாழ்ப்பாணம், வவுனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு எல்லா இடமும் விமரிசையாக திரை அரங்குகளில் ஓடுகின்றன.

"எண்ணிய – எண்ணியாங் கெய்துவர்<br>
எண்ணியர் திண்ணியராகப் பெறின்"

என்றார் உலகப் பெயர் பெற்ற வள்ளுவப் பெருந்தகை. அந்தத் திண்ணிய மனம் கொண்டவர்தான் எங்கள் எஸ். ரி. ஆர். அவர்கள்.

எஸ். ரி. ஆர் அவர்களுக்கு நெருங்கிய நண்பராக இருந்தார் இன்னொரு மூன்று எழுத்து நண்பர். அவர் வேறு யாருமில்லை – தமிழக முதல்வராக இருந்த எம். ஜி. ஆர். அவர்கள். அதன் காரணமாக வெளிவருகின்ற புதுப் படங்களெல்லாம் இலங்கைத் தமிழரது கண்களுக்கும் விருந்தாகின.

இன்றைக்கு ஐம்பது வருடங்கள் பூர்த்தியாகி, பொன் விழாக் கொண்டாடி மகிழ்கின்றோம். வரும் நான்காம் திகதி யூலை மாதம் அவரது பட உலகிற்கு ஐம்பது வருடங்கள் பூர்த்தியாகின்றது. அறுபத்திரண்டாம் ஆண்டு யூலை மாதம் நான்காம் திகதி ஆரம்பித்து, இன்றைக்குப் பொன் விழாவைக் காணும் இந்த நன்னாளில் என்னிடமும் ஒரு வாழ்த்துச் செய்தி தரும் படி கேட்டிருந்தார். இந்த நேரத்தில் என் கணவரையும் நான் நினைத்துப் பார்க்கின்றேன். இந்த விழாவில் அவர் பங்கு பற்றி இருந்தால் தன் கம்பீரமான குரலில் இந்த நல்ல மனிதரையும் அவரது குடும்பத்தையும் அவர்களது நற்பணியையும் வாழ்த்தி இருப்பார். நானும் என் கணவரோடு வாழ்த்தி மகிழ்ந்திருப்பேன். இன்று அவருடைய ஆசிதான் இந்த வாழ்த்துச் செய்தியை எழுதி அனுப்பும் போது என்னைச் செயல்பட வைக்கின்றது.

எஸ். ரி. ஆர் அவர்கள் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொள்ளும்போது அறுபத்திரண்டாம் ஆண்டு நாளை நினைவு கூர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் என் கணவரும் அந்த நாள் பல்கணியில் இருந்து படம் பார்த்ததை ஞாபகப்படுத்தினார். ஒரு உன்னதமான மனிதரது முதல் முயற்சியில் நாமும் பங்கு கொண்டது எனது மனதில் ஒரு சந்தோஷத்தை ஏற்படுத்தியது. எனது கணவருக்கு வேலைகளெல்லாம் முடித்து விட்டு இரண்டாவது ஷோ பார்க்க எமக்காக நேரத்தை ஒதுக்குவது ஒரு கடமையாக நினைப்பார்.

என் கணவர் எஸ். ரி. ஆர் மீது மிகுந்த அன்பு கலந்த மரியாதையும் பாசமும் வைத்திருந்தார். நானும் அவர்களது குடும்பத்தில் மிகவும் பாசம் உள்ளவளாகத்தான் இற்றைவரை இருக்கின்றேன்.

இதை நிறைவு செய்வதற்கு முன்பு அன்னாருக்குத் துணைவியாக அவரது இல்லத்தைச் சிறப்புச் செய்து கொண்டிருப்பவரை வாழ்த்துவதும் என்னுடைய கடமை ஆகும். அந்த அன்புச் சகோதரி இல்லற விளக்கை ஏற்றி வைத்து ஒளி கொடுத்துக் கொண்டிருக்கிறார். இதைத் தான் ஔவைப் பாட்டி,

*"இல்லாள் அகத்திருக்க*
*இல்லாத தொன்றில்லை"*

எனக் கூறி வைத்தார். அவரது பிள்ளைகளையும் நல்ல பண்புள்ளவர்களாக கல்வி அறிவில் சிறந்தவர்களாக வளர்த்து அவர்களது வாழ்க்கையைச் சிறப்பித்தார்கள்.

எங்கள் பிள்ளைகளும் எஸ். ரி. ஆர் மாமாவை மறக்கவில்லை. இந்த நன் நாளில் அமிர்தலிங்கக் குடும்பம் என்ற நல்ல எண்ணத்துடன் மேன் மேலும் அன்னாரது நற் பணிகள் வாழ இறைவன் அருளை வேண்டி வாழ்ததுகிறோம். வாழ்க அன்னாரின் முயற்சிகள்.

திருமதி அமிர்தலிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றத்தின்

# வாழ்த்து மடல்

**STR** என்று வழங்கப்படும் S. தியாகராசா அவர்கள் S.T.R. பிலிம்ஸ் தொடங்கி ஐம்பது ஆண்டுகள் நிறைவடைவதனையொட்டி அந்த நிறுவனத்தினால் வெளியிடப்படவிருக்கும் மலருக்கு திருநெறித்தமிழ் மன்றத்தின் சார்பாக வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். மேற்படி ஸ்தாபனம் திரைப்படங்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து விநியோகித்து வருகின்றது. பலகாலமாக இந்த ஸ்தாபனம் திரைப்படங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும், திரையிடும் உரிமையைக் கொண்டிருக்கின்றது. மேற்படி திரைப்படங்களை இறக்குமதி செய்து யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள STR பிலிம்ஸ் ஸ்தாபனத்துக்குச் சொந்தமான சினிமாப்பட மாளிகைகளில் திரையிட்டு வருகின்றது பொது மக்கள் தரமான படங்களை குறைந்த கட்டணங்களில் பார்த்து ரசிக்கக் கூடியதாகவிருந்தது.

அடுத்து S.T.R. பிலிம்ஸ் ஸ்தாபனத்தின் அதிபர், அனைவராலும் S.T.R. ஐயா என அன்பாக அழைக்கப்படும் S. தியாகராசா அவர்களைப் பற்றியும் கூறாமலிருக்க முடியாது. STR ஐயா பல சமய, சமூக தொண்டு ஸ்தாபனங்களிலும் சேர்ந்து சேவை புரிந்து கொண்டு வருகிறார். உதாரணமாக யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணையில் செந்தில் ஆண்டவன் கோவிலை மிக அற்புதமாக புனருத்தாபனம் செய்து நல்ல உயரமான முருகன் சிலையை இந்தியாவிலிருந்து வரவழைத்து பிரதிஸ்டை செய்து தனது சொந்தச் செலவில் இருபெரும் மகாகும்பாபிசேக விழாவையும் நடாத்திய பெரும் பேற்றைப் பெற்றார். அத்தோடு திருவாசக சபாரத்தின சுவாமிகள் மடத்தைதிருக்கேதீச்சரத்தில் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் சபையின் தலைவராக இருந்து நிறுவியுள்ளார். திருக்கேதீஸ்வரத்தில் கலை, கலாச்சாரம், சமயப் பிரசங்கம், கல்யாணம் ஆகியனவற்றையெல்லாம் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் திரையரங்க பாணியில் மிகப் பிரமாண்டமான, யாத்திரிகள் மடத்தை S.T.R யாத்திரிகர் மடம் என்ற பெயரில் அமைத்துள்ளார். மேலும் திருக்கேதீச்சர திருப்பணிச் சபையிலும் பல காலமாக இருந்து தொண்டாற்றி வருகிறார். அதேபோன்று ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றத்தின் தலைவராக ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு மேலாக இருந்து சேவையாற்றி வருகிறார்.

அடியேனும் மேற்படி மன்றத்தின் செயலாளராக அவரோடு சேர்ந்து பணியாற்றக் கூடிய வாய்ப்புக் கிடைத்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன். மேலும் மேற்படி மன்றத்தின் பணியில் அவர் அடியேனுக்கு மிகவும் உதவி ஒத்தாசையா இருந்து வருகிறார்.

மேற்படி S.T.R பிலிம்ஸ் ஸ்தாபனம் பொதுமக்களுக்கு மென்மேலும் நல்ல தரமான சமூக சீர்திருத்த திரைப்படங்களை திரையிட அவர் வாழ்த்தி வணங்கிவரும் கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சர நாதனை வந்தித்து விடைபெறுகின்றேன்.

நன்றி

சிவகுரு கணேசன்
*செயலாளர்*
*ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

ஸ்ரீ. ரி. ஆர் பிலிம்ஸ் (S.T.R. Films) என்ற ஸ்தாபனம் தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவை எட்டியுள்ளது என்று நினைக்கும்பொழுது மகிழ்ச்சியாக இருக்கின்றது. கடந்த மூன்று தசாப்தங்களாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிலவிய அசாதாரண நிலையிலும் நிலைத்து நின்றதென்றால் அதன் அதிபர் எஸ். தியாகராசா (S. T.R) அவர்களையே சாரும். இதன் தலைவர் சினிமாத்துறையில் ஈடுபாடு கொண்டமையால் அடிக்கடி இந்தியாவிற்குச் சென்று அங்குள்ள இயக்குனர்கள், பிரபல நடிகர்கள் ஆகியோரைச் சந்தித்து சினிமாத்துறை இலங்கையிலும் வளர்ச்சிபெற ஆவன செய்து வெற்றி கண்டார். தனது ஸ்தாபனத்தின் நிமித்தம் இந்தியா சென்றமையால் அங்குள்ள பல திவ்ய சேத்திரங்களையும் ஆதீனங்களையும் தரிசித்து அங்குள்ள ஆன்மீகத் தலைவர்களின் ஆசிகளைப் பெற்றுள்ளார். எஸ். ரி. ஆர் ஐயாவின் பணி சினிமாத்துறையோடு நின்றுவிடவில்லை. அவர் தன்னை சமூக, சமயப் பணிகளிலும் ஈடுபடுத்திக் கொண்டார். ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமிகள், சபாரத்தின சுவாமிகள் (திருவாசக சுவாமிகள்) கந்தையா சுவாமிகள் (குடைச் சுவாமி) காயத்திரி முருகேசு சுவாமிகள், மகாதேவா சுவாமி போன்ற மகான்களின் சகவாசத்தினால் அவர்களின் நல்லாசிகளைப் பெற்றவர். இப்பொழுதும் கொழும்பில் ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றத்தின் தலைவராகவும், சபாரத்தின சுவாமிகள் சபையின் தலைவராகவும், இருந்து அவற்றை வழிநடத்தி வருகின்றார். சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியம் நடாத்துகின்ற ஆயிலிய பூசையிலும் தவறாது கலந்து கொள்கின்ற ஒரு நலன் விரும்பியாக இருக்கின்றார். அத்தோடு திருக்கேதீஸ்வர ஆலயத்தின் முன்னேற்ற நடவடிக்கைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். அங்கு தனது சொந்தச் செலவில் ஒரு மடம் ஸ்தாபித்து வருகின்றதோடு சபாரத்தின சுவாமிகளின் பெயரில் ஒரு மடம் கட்டி முடிவுற ஆவன செய்து வருகின்றார்.

எனவே எஸ். ரி. ஆர் பிலிம்ஸ் பொன் விழாக் காணும் இவ்வேளையில் சினிமாத்துறை மேலும் வளர்ச்சியடைந்து அதன் தலைவராக இருக்கின்ற எஸ். ரி. ஆர். ஐயா அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து சினிமாத்துறையோடு தனது சமூக, சமயப் பணிகளையும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

*39, பெர்னாண்டோ வீதி*
*கொழும்பு – 6*
*25.06.2012*

த. செ. சிவசுப்பிரமணியம்
*செயலாளர்*
*சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

*ஓம் சரவணபவாய நமஹ*

இலங்கையின் வடபால் யாழ்ப்பாணம் மாநகரின் மத்தியில் அனைத்து நெஞ்சங்களையும் கொள்ளை கொண்டு அனைவரையும் ஈற்று விழிக்கும் வண்ணம் பல ஆண்டுகளாக தனித்துவமாகவும், சிறப்பாகவும் அனைவரையும் மகிழ்விக்கும் வண்ணம் வீற்றிருக்கும் ஒரே திரையரங்கு "ராஜா திரையரங்கு" என்பது அனைவரும் அறிந்ததே.

இந்த வகையில் "ராஜா" திரையரங்கானது மிகச் சிறப்பாக தனது (பொன்விழாவை) அதாவது 50வது ஆண்டு நிறைவை ஒரு. விமர்சையாக கொண்டாடும் இந்த வேளையில் அதன் உரிமையாளரும் முன்னேற்றத்துக்காக மிகவும் பாடுபட்டு திரையரங்கை உருவாக்கி அனைத்து தமிழ் மக்களையும் ஆதரவாக்கிய அதன் ஸ்தாபகரும், எமது ஆலய வாழ்நாள் தலைவரும் (ஸ்ரீ செந்தில் கதிர் வேலாயுத சுவாமி) எமது ஆலயத்தின் இரண்டாவது மகாகும்பாபிஷேகத்தை தன்னந்தனியாக புனருத்தாரணம் செய்தவரும் பல ஆலயங்களின் அங்கத்தவரும் நாடு போற்றும் வண்ணம் தனக்கென பெயர் கொண்டு வாழ்ந்து வருபவருமான "திருப்பணி தவமணி" திருவாளர் "S. T. R" என்று பெயர் கொண்ட திரு. S. தியாகராஜா அவர்கள் தனது திரையரங்கை 50 ஆண்டுகள் மட்டும் நில்லாது இன்னும் பல, பல ஆண்டுகள் தனது திரையரங்கை மேன்மைப்படுத்தி பல்லாண்டுகாலம் வாழ எல்லாம் வல்ல கலியுக வரதனாகிய எம்பெருமான் ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருவருள் அவர்கட்டும், அவர் தம் குடும்பத்தவர்களிற்கும் கிடைக்க வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

சுபம்

இப்படிக்கு
சிவஸ்ரீ. கிருஷ்ண நாராயணக் குருக்கள்
*ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில்*
*பிரதிஸ்டா பிரதம குரு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'STR FILMS'

(1962 – 2012)

## தொழில் நிறுவனத்தின் தங்கவிழாவுக்கான

# மனம் நிறைந்த நல்வாழ்த்துகள்

"நல்லவே எண்ணல் வேண்டும்; நல்லவே செய்தல் வேண்டும்" என்று பாடினான் நவயுகக் கவிஞன் மகாகவி சுப்பிரமணிய பாரதி அவ்விலட்சியத்தைத் தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு, "வாழ்வது ஒருமுறை வாழ்த்த வேண்டும் தலைமுறை" என்றும் உள்ள வாழ்க்கை நியதியைத் தாரகமந்திரமாகவுங் கொண்டு திரைப்பட நிறுவனத் தொழிலதிபர் என்னும் தொழிற் சிறப்புடனும், யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும், வவுனியாவிலும், STR FILMS திரைப்படத் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தியும், கொழும்பிலும் திருக்கேதீச்சரத்திலும் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் தொண்டர் சபையை நிறுவித்தாமே அதன் தலைவராகவும் அறப்பணி புரியும் தொழிலதிபர், 'திருப்பணித் தவமணி' STR (எஸ். தியாகராசா) அவர்கள் நிறுவிய STR Films இன் தங்கவிழாவையொட்டி இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

STR ஐயா அவர்களையும், STR Films தொழில் நிறுவனத்தையும், திருக்கேதீச்சரம் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையில் கௌரவ தலைவர் இன்னும் பல நிறுவனங்களின் மாண்புமிகு தலைவர் என்ற முறையில் தமது அறப்பணிகளையும், சமர்ப்பணிகளையும், திருப்பணிகளையும் வெகு கனகச்சிதமாகவும், பக்தி பூர்வமாகவும், பொறுப்புணர்ச்சியுடனும், சேவை நோக்குடனும், தியாகசிந்தையுடனும் நிகழ்த்தியும், நிகழ்த்துவித்தும் வருவதனைத் தமிழ் கூறு நல்லுலகம் நன்கறியும்.

தமிழ் மக்களது சமூக, கலாசாரப் பணிகளில் பேரீடுபாடும், தொடர்பும், பங்களிப்பும் செய்துவரும் STR தலைவர் அவர்கள் 1987 ஆம் ஆண்டு திருக்கேதீச்சரத்தில் அப்போதிருந்த மடத்தில் திருவாசக சுவாமி ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளைச் சந்தித்து ஆசிகள் பெறச் சென்ற அப்பொழுதில் "எனக்குப் பல அன்பர்கள் உள்ளனர் நீங்கள் தான் எனக்குக் கடைசியாகக் கிடைத்த அன்பன்" எனக்கூறி, "என்னையும், மடத்தையும் பாரமெடு" என்றும், 'எனக்குப்பின் திருவாசகத்தைப் பரப்புங்கள் என்றும் கூறியதுடன் 'கோயில் பரிபாலன சபை கோயிலின் தேவைக்காகத் தற்போதைய நிலத்தையும் மடத்தையும் தாங்கள் எடுத்துக்கொண்டு வேறொரு நிலப்பகுதியைத் தந்தாலும் அதில் மடம் அமைத்து இந்து கலாசார நிகழ்வுகளை நடத்த வேண்டும் அதற்கு உறுதுணையாகத் துரைராசா அவர்கள் இருப்பாரெனவும்' சுவாமிகள் கூறியுள்ளதாக STR ஐயா என்னிடமும் குருபூசைத்தினத்தன்று கூறினார். சுவாமியின் தீர்க்கதரிசன வாக்குப் பலித்தது. STR ஐயா அவர்களது பெருமுயற்சியால் கலாசார மண்டபம் அமைக்க நிலமும் வழியும் பிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது இம்மண்டபத்தை அடியேனையே தான் கட்டிமுடித்துத் தந்துதவவேண்டும் என்று' கேட்டுக் கொண்டவர் STR ஐயா. அடியேனின் பேருழைப்பினாலும், பெருமுயற்சியினாலும் தலைவர் STR ஐயாவின் வழிகாட்டலினாலும், சைவாபிமானிகளின் பொருளுதவியினாலும் மண்டப நிர்மாண வேலைகள் நடைபெற்று மண்டபத்தின் கூரை வேலைகள் முடிவுற்று, இன்று தள – நில வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதனை இவ்வரிய சந்தர்ப்பத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மிகவும் பல்பயன்தரும் 'கலாசார மண்டபம்' முழுநிறைவோடு, பரிபூரணத்துவம் பெற்று மக்கள் பயன்படுத்தும் – அடியார்கள் பணிசெய்யும் – நிறுவனமாக மிளிர வேண்டும் என்பதே சபைத் தலைவர் STR ஐயா வினதும், செயலாளரான எனதும் மனவிருப்பமாகும். இப்பணியை என்னிடமே ஒப்படைத்து, "பணஞ் சேர்த்து நீரே கட்டித்தாரும்" என்றார் திருப்பணித் தவமணி STR ஐயா. இப்பெரும் பணி நிறைவேற இத்தருணத்தில் பெருமனதுடனும், ஆவலுடனும் உதவிபுரிந்தும், ஆதரவு நல்கியும், வரும் பரோபகாரிகளும், கொடை வள்ளல்களும், அன்பர்களும் எம்முடன் தொடர்புகொண்டு இப்பணி முழுநிறை வெய்துவதற்கு மேன்மேலும் உதவி நல்குமாறும் அறிவித்தல் தர விரும்புகிறோம். இப் பொதுப்பணியில், சமயப்பணியில் 'அனைவரையும் இணையுமாறு' கேட்டுக் கொள்கிறோம். உங்கள் பேருதவியும், பொருளுதவியும் எம் பணிகளை விரைவுபடுத்த உதவுவதாகும். எனவே STR Films இன் தங்க விழா நிகழ்வுகள் சிறப்புற நடைபெறவும், அவரது திருப்பணிவேலைகள் மேலும் பிரகாசித்து விளங்கவும் வாழ்த்துவதுடன், கௌரவ எஸ். ரி. ஆர் ஐயாவின் திருக்கேதீச்சர கல்யாண மண்டப வேலைகள் சிறப்புற்று நிறைவுறவும், தொண்டர் சபையின் பெரும்பணிகள் வெற்றி பெறவும் திருவருளையும் குருவருளையும் சிந்தித்து வந்தித்து வாழ்த்தி மகிழ்கிறேன்.


'-கலாபூஷணம்'<br>
தம்பு - துரைராசா<br>
*கௌரவ செயலாளர்,*<br>
*ஸ்ரீமத் சபாரத்தினம் தொண்டர் சபை,*<br>
*இல 31A, ஜானகி லேன்,*<br>
*பம்பலப்பிட்டி*<br>
*கொழும்பு*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா வாழ்த்து

ஸ். ரி. ஆர் (S.T.R) பிலிம்ஸ் நிறுவனம் எதிர் வரும் ஜுலை மாதம் 04 ஆம் திகதி நிறைவுடன் தனது பொன் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடவிருக்கின்றது என்ற செய்தியை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் நகரில் ராஜா, வவுனியா நகரில் வசந்தி, திருகோணமலையில் சரஸ்வதி, மட்டுமாநகரில் சாந்தி ஆகிய திரையரங்குகள் சினிமா ரசிகப் பெருமக்களின் அபிலாசைகளை அசாதாரண சூழ்நிலைக் காலங்களிலும் நிறைவு செய்து தனக்கெனத் தனிச் சிறப்பிடத்தைப் பெற்று வளர்ந்து வருகின்றது. மென்மேலும் வளர்ந்து தனது சேவையினைச் செய்ய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மனதார வாழ்த்துகின்றேன்.

இந் நிறுவன உரிமையாளர் திருவாளர் சின்னத்தம்பி தியாகராஜா S.T.R அவர்கள் எனது உள்ளத்தில் என்றும் இருக்கும் நண்பர். பழகியவுடன் அனைவரையும் கவரும் ஒரு வித சக்தி அவரிடமுண்டு. நகைச்சுவையுடன் அதே வேளையில் கருத்தாழத்துடனும் பேசும் ஆற்றலுமுள்ளவர். தெய்வீகக் கலைகளையும், கலைஞர்களையும் மதித்துப் போற்றும் பண்பாளன். யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள அவரது இல்லம் ஒரு கலைக் கூடம் என்றே கூற வேண்டும். இந்தியாவில் இருந்து வரும் கலைஞர்களை அன்புடன வரவேற்று உபசரித்து அவ்வில்லத்தில் இசை, நடனக் கச்சேரிகளை நடத்தி, தான் பெற்ற இன்பத்தை கலாரசிகர்களுடனும் பகிர்ந்து கொள்ளும் பரந்த நோக்கமுடையவர். தமிழகத்திலிருந்து இலங்கை வந்த பழம் பெரும் நடிகர்கள் இவரைச் சந்திக்கத் தவறுவதும் இல்லை. அதே போன்று இறையருள் பெற்ற சமயப் பெரியார்களும்.

சமூக, சமய, சேவை அமைப்புகளில் பொறுப்புள்ள பதவிகள் வகித்துக் குறிப்பிடக் கூடிய பணிகள் ஆற்றி வருபவர். யாழ் செந்தில் கதிர் வேலாயுத சுவாமி ஆலய அறங்காவலர் சபையின் தலைவர், திருக்கேதீஸ்வரம் திருவாசகம் சபாரத்தின சுவாமிகள், தொண்டர் சபைத் தலைவர், கொழும்பு ஈழத்து திருநெறி தமிழ் மன்றத் தலைவர், முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினர், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் நிதியாளர் போன்ற பதவிகளைக் குறிப்பிடலாம்.

ஆலயத் திருப்பணி வேலைகள் நிறைவேற்றும் பாக்கியத்தை இறைவன் இவருக்கு அருளியுள்ளார். திருகோணமலை சிவன் கோவில் மணிக் கோபுரமும் இவரின் திருப்பணியே.

இவருடைய தொண்டுகளுக்கு இவருடைய அன்பு மனைவியார், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என்றும் உறுதுணையாகவிருந்து ஆக்கமளித்து வருபவர்கள்.

S.T.R அவர்களும் அவரது குடும்பத்தவர்களும் நல்ல சுகபலத்துடன் இருந்து சேவையாற்றவும், பொன்விழாக் காணும் S.T.R நிறுவனம் புதுப் பொலிவுடன் மென்மேலும் காத்திரமாக வளர்ந்து சேவையாற்றவும் இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

அன்புடன்

க. துரைரெட்ணசிங்கம்

க. துரைரெட்ணசிங்கம்
*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்*
*தலைவர், இலங்கை தமிழரசுக் கட்சிக் கிளை,*
*திருகோணமலை மாவட்டம்.*

*204/06 லோவர் வீதி,*
*திருகோணமலை.*
*01.06.2012*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STR FILMS

# தொடர் பணி தொடர நல்வாழ்த்துக்கள்

1969இன் நடுப்பகுதி நான் எட்டாம் வகுப்பு பயிலும் 13வயது மாணவன். சினிமா விளம்பரங்களை மேலோட்டமாகப் பார்க்கும் நான், அன்று அதை ஊன்றிக் கவனித்தேன். கல்லடி சாந்தி சினிமா .... ஏசுநாதர்.... இவற்றையெல்லாம் தாண்டி அந்த விளம்பரத்தின் அடியிற் காணப்பட்ட குறிப்பு என்னை எம்பி உந்தியது.

உடனடியாகவே எனது ஒன்றுவிட்ட அண்ணன் "பாசி" யை நாடினேன். விளம்பரத்தைக் காட்டினேன். வரும் ஞாயிறு சாந்தி சினிமாவுக்குச் செல்வதாகத் தீர்மானித்தோம். அம்மாவிடம் அதுபற்றிச் சொல்லி ஆறோ.. ஏழோ... ரூபாய் பெற்றுக்கொண்டதாய் ஞாபகம். இருவருக்குமான "கலரி" நுழைவுச் சீட்டு 60X 2 = ரூபா 120. வந்தாறுமூலையிலிருந்து மட்டக்களப்பு செல்லவும் – திரும்பவும் ... வரும்போது தேனீரும் – பணிசும் சாப்பிடவும் அந்தப் பணம் போதும்... ஏன் மிச்சமும் வரும்.

திட்டமிட்டபடியே மட்டக்களப்புக்கு வந்து, கால்நடையாகக் கல்லடி சாந்தி சினிமாவை அடைகின்றோம். ஏசுநாதர் படம் தொடங்கி இடைவேளை விட்டது. 'என்ன இன்னம் நாம் பார்க்க வந்த படம் வரவில்லையே' என்ற ஆதங்கத்துடன் பாசியைக் கேட்டேன்.

அவன் சினிமா விடயத்தில் நிபுணன், "இடைவேளைக்குப் பிறகுதான் வரும்" என்றான். விளக்குகள் அணைந்தன. நாங்கள் எதற்காக வந்தோமோ அந்த 'அண்ணாவின் இறுதியாத்திரை' தொடங்கியது. அந்த விவரணப் படத்தைப் பார்த்த சோகத்துடனும், அதனைப் பார்க்கக் கிடைத்ததைப் பாக்கியமாய் நினைத்த மன உணர்வுடனும் வீட்டை அடைந்தோம்.

இதன் பின்புதான் "அண்ணாதாசன்" என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதினேன். எனது இதய தெய்வம் அண்ணாவின் இறுதி யாத்திரையை அந்த இளவயதில் பார்த்துப் பதிவுசெய்திட வாய்ப்பு வழங்கிய STR அவர்களுடன் – புணர்ச்சி பழகாமல் உணர்ச்சியாம் நட்பாகிய கிழமைகொண்டு ஓரணியிற் செயற்படும் வாய்ப்புக் கிடைத்தமை பெரும் பேறன்றோ!

அவ்வகையிலே அவரைத் தலைவராகத் கொண்ட STR ஃப்லிம்ஸ் நிறுவனத்தின் பொன்விழா நிகழ்வுக்கு வாழ்த்துரை வழங்க வாய்ப்புக் கிடைத்தமையும் மகிழ்ச்சிக்குரியதே.

அறவழியில் வாழ்ந்து, அறவழியில் பொருள்தேடி, அறவழியில் இன்பம் நுகரும் வள்ளுவ வாழ்வு வாழ்பவர் STR அவர்கள். தென்னிந்தியாவில் கர்நாடக இசைத் தேன் பருகச் சென்ற தேனீ அவர். அவ்வாறு சென்றுவந்த காலங்களிலேதான் – நாடக வடிவில் இருந்து திரைப்பட வடிவுக்கு மாறிய கலையை, அந்தப் புதுக் கோலத்தில் ஈழத்தமிழ் மண்ணில் கொண்டுவந்து கொலுவிருத்த அவர் உளங்கொண்டார். அதற்காக STR ஃப்லிம்ஸ் நிறுவனத்தை நிறுவிச் செயற்படத் தொடங்கினார். வர்த்தகத் துறையில் இயல்பாகவே எழும் போட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளார்த்தமாய்ச் சிலர் கொள்ளும் பொறாமை, அவை தொடர்பான சவால்கள் என்பவற்றுக்கெல்லாம் புறங்கண்டு தனது STR ஃப்லிம்ஸ் நிறுவனத்தை ஐம்பதாம் அகவையில் வைத்துப் பொன்முடி சூட்டுகின்றார். STR அவர்கள்.

தன்னுடைய பெயரில் ராஜா I, ராஜா II, திரையரங்குகளை யாழிலும் – தன் துணைவியார் பெயர் துலங்க சரஸ்வதி திரையரங்கைத் திருமலையிலும் – மகள் வசந்தியின் பெயரைச் சூட்டி வவுனியாவிலும் – அடுத்த மகளின் நாமகரணத்தில் சாந்தியை மட்டக்களப்பு கல்லடியில் நிறுவி தொடக்க காலங்களில் மக்கள் விருப்புத் திரைப்படங்களை நம் தமிழன்பர்கட்டுக் காட்டிக் குதூகலித்தவர் STR அவர்கள்.

இடைக்கால நாட்டுச்சூழல் நிலைமைகளைத் தலைகீழாய் மாற்றிட தமிழீழத்தில் திரையரங்கு நடாத்திய பலர் தம் அரங்குகளை வேறு வியாபார நிறுவனங்களாக மாற்றிவிட்டனர். ஆனால் STR அவர்கள் இழப்புகளினால் துவண்டுவிடாமல் காலத்துக்கேற்ப இசைவாக்கமடைந்ததோடு, தனது ஊழியர்களைக் கைவிட்டுவிடாது அவர்களுக்காகவே படமோட்டி அவர்கள் குடும்பங்களைக் காப்பாற்றி வந்தார். இன்னொரு காலமாற்றம் இப்போது. இதற்கேற்ற நவீன மாற்றங்களுடன் தனது செயற்பாடுகளைத் தொடர்கின்றார் STR அவர்கள். புதிய சவால்களைத் தனது புனிதம் கெடாத பாணியில் கச்சிதமாகக் கையாளக்கூடிய பக்குவம் அவருக்கு என்றைக்கும் உண்டு.

அகவை ஐம்பதில் தடம்பதித்துப் பொன்விழாக்காணும் STR ஃப்லிம்ஸ் நிறுவனம் சீரும் சிறப்பும் பெற்று ஒளிர இறையருள் பொழிவதாக.

# 73, வாவிக்கரை வீதி – 01.
மட்டக்களப்பு.

கி. துரைராசசிங்கம்.
*சட்டத்தரணி.*
*முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.*
*மட்டக்களப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அ.மா.சாமி**
''ராணி'' வார இதழ்
முன்னாள் ஆசிரியர்,
2, பிறை சாலை,
செனாய் நகர்,
சென்னை - 600 030

தொலைப்பேசி : 2626 2479
அலைப்பேசி : 97909 36737
மின்னஞ்சல் : ranisaamy@yahoo.com

நாள்: 25.5.2012

எஸ். தியாகராஜா அவர்கள்,
எஸ். டி. பிலிம்ஸ்
கொழும்பு 04

அன்பு நண்பர் அவர்களுக்கு,

தங்களின் எஸ். டி. பிலிம்ஸ் பொன்விழாக் கொண்டாடுவது அறிந்து மிகவும் மகிழ்ந்தேன்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தாங்கள் தமிழ்க் கலை உலகுக்கு குறிப்பாகத் தமிழ்த்திரையுலகிற்கு ஆற்றி வரும் அரும்பணி போற்றுதலுக்கு உரியது, வாழ்த்துகிறேன்.

பொன்விழாக் காணும் எஸ். டி. பிலிம்ஸ் நூற்றாண்டு விழா கொண்டாட வாழ்த்தி, வாழ்த்துகிறேன். அந்த விழாவில் தாங்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க வாழ்த்துகிறேன்!

அன்புடன்,

(கையொப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K.Sinnathurai J.P
63, Lawerence Road,
Eastham,
London.E6.1-JN,
U.K
Tel: 208 4724945

க.சின்னத்துரை
தமிழரசி,
வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால்,
புத்தூர்.
தொ.பேசி

யாழ் மாவட்டம் உபதலைவர்

இலங்கைத் தமிழ் அரசு கட்சி

ஈழத்தின் வடபால் முத்தென விளங்கும் யாழ்ப்பாண நகரில் கஸ்தூரியார் வீதியில் அமைந்த எனது நண்பரின் சினிமா தியேட்டரின் பெயர் ராஜா தியேட்டராகும்.

இத் தியேட்டர் 50 ஐம்பது ஆண்டுகளைக் கடந்து பல இன்ப துன்பங்களைக் கடந்து புத்துயிர் பெற்றுள்ளது, சிறப்பாகும். ஆலயங்கள், பாடசாலைகள் சன சமூக நிலையங்கள் நிறைவு விழாக்களைக் கொண்டாடுவதுபோல் ராஜா தியேட்டரும் பொன்விழாக் காண்பது எனக்கும் ரசிகர்களுக்கும் மட்டற்ற மகிழ்ச்சியாகும்.

மக்களின் ஒய்வு நேரங்களையும், பொழுதுபோக்கையும் மக்களின் மனம்அறிந்து காலத்துக்கு காலம் ஏற்ற தரமான சினிமாப்படங்களை வெளியிட்டும் திரைப்படுத்தியும் மக்கள் இன்புற்றிருக்க ராஜா தியேட்டர் முன்னிலையில் இருந்ததை நான் அறிவேன்.புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், நடிகர்திலகம் சிவாஜி கணேசன், ஆகிய இருவரின் தரமான படங்களை வெளியிட்டு 100 நாள் வரை வெளியீடு செய்து ஓடியதையும் என்னால் மறக்கமுடியாது. இந்த வகையிலும் எனது நண்பர் S.T.R. மக்கள் மனங்களை வென்றவர்.

எம். ஜி. ஆரின் படவெளியீட்டுக்கு எமது புத்தூர் கிராமத்து இளைஞர்கள் தியேட்டர் முன்பாக சோடனை செய்தும் 50 அடி உயர M.G.R. படத்தைக் கட்டவுட்போட்டும் விளம்பரங்களை தாமே முன்னின்று செய்து தாகசாந்தி செய்ததையும் என்னால் மறக்கமுடியாது. S.T.R எனது நண்பர் மட்டுமல்ல யாழ் ரசிகர்களின் மனங்களை வென்ற வல்லவர், நல்லவர், அவர்.

பொழுது போக்கு என்பது மனித வாழ்வில் முக்கிய இடம் பிடிக்கின்றது.

ஒரு மனிதன் தன்னை ஆறுதல்படுத்த சிறிது நேரமாவது ஆலயங்களுக்கு செல்கின்றார்கள் பலர் கினிமா தியேட்டர்களுக்குச் செல்கின்றார்கள். மக்கள் மனங்கள் இன்புற்றிருக்க சினிமா முக்கிய இடம் பிடிக்கின்றது.

முன்பு சினிமாத் தியேட்டர் ஒன்றை நானும் பல நண்பர்களுடன் சேர்ந்து ஆரம்பித்துள்ளேன் அந்த வகையில் தியேட்டரின் நிர்வாகத்தை எனது நண்பர் மனம் கோணாது சிறப்பாக நடாத்தி 50 ஆண்டு பொன்விழாக்காண்பது சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய தமிழ் நாட்டில் சினிமாவில் நடித்து மக்கள் மனங்களை வென்ற M.G.R அவர்கள் தமிழ் நாட்டின் முதலைமைச்சராக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். அவரை ஒரு வல்லவர் எனது நண்பர் S.T.R

ராஜா தியேட்டர் மக்கள் மனங்களை வசப்படுத்தி முன்னிலையில் நிற்பதையும் நான் அறிவேன்.

இன்றைய இந்நாளில் 50 ஆண்டுகள் பொன்விழா கொண்டாடும் ராஜா தியேட்டர் மேலும் பல நல்ல படங்களை வெளியிட்டு மக்கள் மனங்களில் இடம்பிடித்து S.T.R அவர்களின் விடாமுயற்சி வெற்றிபெற வாழ்த்துகின்றேன். S.T.R. அவர்கள் நூறாண்டு வாழவும். அவரது ராஜா தியேட்டர் நூறாண்டும் கடந்து மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என S.T.R. அவர்களுக்கு "சேவாதிலகம்" என்னும் பட்டமும் சூட்டி வாழ்த்துகிறேன். எனது நல்லாசிகள் உரித்தாகுக.

அன்புடன்


*இலங்கைத் தமிழரசுக்கட்சி*
*யாழ் மாவட்டத்தின்*
உப தலைவர் 2012ல்

க. சின்னத்துரை (தமிழரசு)
*"தமிழருசி வாசம்"*
*வன்னியசிங்கம் வீதி*
*ஆரவங்கால்*
*புத்தூர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "என்றும் அழியாத இனிய நட்பு"



முதலில் S.T.R. பிலிம்ஸ் பொன் விழாவிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது நீண்டகால நண்பரும், அரசியல் தோழருமான எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் உரிமையாளர் தியாகராசா அவர்கள் தமிழ் முஸ்லீம் உறவுக்கு இலக்கணமாக முஸ்லீம் மக்களோடு மிக நெருக்கமான உறவையும், தொடர்பையும் கொண்டிருந்தார்.

யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் மிக நெருக்கமான அயலவராக வாழ்ந்ததன் காரணமாகவும், யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியில் கல்வி கற்றதன் காரணமாகவும் அவர் பெருந்தொகையான முஸ்லீம் நண்பர்களை தன்பால் பெற்றிருந்தார். இவ்வாறு நெருக்கமான தொடர்பின் காரணமாக அநேகமான முஸ்லீம்களது சகல நிகழ்வுகளிலும் அவர் பிரசன்னமாகவிருப்பார்.

திரு. தியாகராசா அவர்கள் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் சகலருடனும் நட்பு ரீதியாகவும், எளிமையாகவும் பழகக் கூடிய இனிய நண்பராக இருந்தார்.

1978ம் ஆண்டில் யாழ் மாநகர சபை உறுப்பினர்களாக நானும், திரு. தியாகராசா அவர்களும் ஒரே சந்தர்ப்பத்தில் மாநகரசபை உறுப்பினர்களாக இருந்த காலத்தில் இருந்து எமது நட்பு இன்றுவரை தொடர்வதை நான் பெருமையாகக் கருதுகின்றேன்.

உயரிய நட்பும், தூய்மையான அன்பும் கொண்ட இனிய நண்பரான திரு. தியாகராசா அவர்கள் முஸ்லீம்களுக்காக பலதடவைகள் குரல் கொடுத்துள்ளார். 1990 ஆம் ஆண்டில் முஸ்லீம்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் யாழ். பெரிய கடை வீதியிலுள்ள முஸ்லீம்களது மாநகரசபைக் கடைகளை கேள்விப்பத்திரம் மூலம் பிறருக்கு வழங்கப்பட முற்பட்டபோது எதிர்த்துக் குரல் கொடுத்தவர் திரு. தியாகராசா அவர்களே! அவர் அச்சந்தர்ப்பத்தில் "முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டுள்ள இவ்வேளையில் அவர்களது கடைகளை கேள்விப் பத்திரம் மூலம் கொடுக்கச் செய்வதானது, பனைமரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதிப்பதற்குச் சமனாகும்" என எம் சமூகத்திற்காக எதிர்ப்புக் குரல் எழுப்பிய உயர்ந்த பண்பாளராவார்.

திரு. தியாகராசா அவர்கள் இன்றும் முஸ்லீம் மக்களால் நேசிக்கப்பட்டு வருகின்றார்.

மேலும், STR பிலிம்ஸ் மேலும் முன்னேறி இவரது பணிகள் நன்றாக நிறைவேற இறைவனை வேண்டி முடிக்கின்றேன்.

*இல. 29, மீறானியா வீதி,*
*கொழும்பு – 12,*
*2012–06–14*

R. R. இமாம்
*சட்டத்தரணி*
*முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Very happy to learn that STR Films is completing 50 years of operations. It only goes to prove the devotion and commitment consistently maintained by your staff members under your deft and sincere leadership. I have personally experience the professional attitude and straight forwardness in the dealings of STR Films, when I was handling the operations of Gemini group companies. I still vividly remember the good words spoken by Shri M. G. Ramachandran about you when you took *Oli Vilakku* from us.

I wish STR Films continued glory, fame and prosperity in the ensuing year too.

With kind regards and respects to everyone there,
Yours sincerely,

**R. Ramamurthy,**
Founder Director, Cyber Society of India, Chennai,
Chairman CSR panel of Federation of Indian Chambers
& Commerce and Industry.
Tamil Nadu, Chennai.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. சின்னத்தம்பி தியாகராஜா அவர்களை 1940ஆம் ஆண்டுகளில் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நான் மாணவனாக இருந்த காலத்திலேயே தெரிந்திருந்தேன். அவரும் அப்போது அங்கே மாணவனாக இருந்தார். அதன்பின் நான் 1950ஆம் ஆண்டு எனது பட்டப்படிப்பை முடித்துவிட்டு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும்போது தினமும் காலையில் யாழ். பஸ் ஸ்ராண்டில் நான் சாவகச்சேரி பஸ்ஸுக்காகக் காத்து நிற்பேன். அப்போது அவர் அங்கு ஒரு கூல் பார் (Cool Bar) வைத்திருந்தார். அப்போது அவர் என்னை அழைத்து "நிற்க வேண்டாம், வந்திரும்" என்று எனக்கு ஒரு ஸ்ரூல் தருவார்.

சில ஆண்டுகளின் பின் அவர் ஒரு சினிமாக் கொட்டகை ஆரம்பித்து அதனை "ராஜா தியேட்டர்" என்ற பெயரில் ஒரு படமாளிகையாகக் கட்டினார். பிற்காலத்தில் திருகோமலை, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா ஆகிய பல இடங்களிலும் தியேட்டர்கள் கட்டியுள்ளார்.

1952 ஆண்டு நான் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆசிரியராக மாறிவந்த பின் அங்கு ஒரு பழைய மாணவர் சங்கத்தை ஆரம்பித்து அதன் செயலாளராக இருந்தேன். அதில் நாங்கள் அடிக்கடி கூடுவோம். அவரை எல்லோரும் "STR" என்றே அன்புடன் அழைப்பார்கள்.

1962இல் அரசாங்கம் பள்ளிக்கூடங்களைக்கையேற்றதும் நான் ஆசிரியத் தொழிலிலிருந்து இளைப்பாறிச் சட்டக்கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்து சட்டத்தரணியாகி 1969இல் யாழ்ப்பாணத்தில் தொழில்புரியும்போது கஸ்தூரியார் வீதியில் ஒரு மாடி வீடு கட்டினேன். அவரும் அதே வீதியில் சில வருடங்களுக்கு முன்பே ஒரு மாடிவீடு கட்டியிருந்தார். இவருடைய மகள் விஜிதாவும் எனது மகள் தயாபரியும் சிறுவயதிலிருந்தே நண்பர்களாக இருக்கிறார்கள்.

இவருக்கும் இசைத்துறையிலும் மிகுந்த ஆர்வம் இருந்தது. 1972இல் நாங்கள் இன்னும் ஆர்வலர்களுடன் இணைந்து யாழ். நுண்கலை மன்றம் (Jaffna Fine Arts Society) என்று ஒரு சங்கத்தை ஆரம்பித்து ஒவ்வொருமாதமும் ஒரு முழுநேர இசைநிகழ்ச்சியை ட்ரிம்மர் மண்டபத்திலும் வருடமொருமுறை வீரசிங்க மண்டபத்தில் நடன, நாடக விழாவையும் நடாத்திவந்தோம். 1983ஆம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தால் இதைத் தொடர்ந்து நடத்த முடியாமற் போய்விட்டது. அதன்பின் இந்தியாவிலிருந்து வந்தசில வித்வான்களின் கச்சேரிகளை இவருடைய வீட்டு மண்டபத்திலேயே நடாத்தினோம்.

யாழ்ப்பாண நகரில் உள்ள கதிரேசன் கோவில் என்றழைக்கப்படும் செந்தில் கதிர்வேலாயுத ஸ்வாமி ஆலயத்தைப் பல வருடங்களாக நடாத்திவரும் தர்மகர்த்தாசபையில் நாங்களிருவரும் இருந்து வருகிறோம். இப்போது இவர் அதன் தலைவராகவும் நான் செயலாளராகவும் இருக்கிறோம். அத்துடன் திருக்கேதீஸ்வர ஆலயத்திலும் இவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

இப்படிப்பட்ட ஒரு பெரியாரின் "எஸ். ரி. ஆர்" நிறுவனத்தின் பொன்விழா மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

W. S. செந்தில்நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ சிவ

"எண்ணியார் எண்ணியாங் கெய்துவர்" இப் பொய்யா மொழியார் தங் கூற்றிற்கு இலக்கணமானவர் பெரியார் எஸ். ரி. ஆர். இளமையில் துடிப்பானவராய் நுண்ணறிவும் ஆற்றலும் கொழுத்தப்பட்டாராய் இருந்தமை இளமைப்பருவம் எடுத்துக் காட்டிற்று. பின்னாள் எஸ். ரி. ஆர் என அழைக்கப்பட்ட செல்லக் குழந்தை தியாகராசா பொருளையோ பணத்தையோ புகழையோ தேடிச் சென்றவர் அல்லர். அவை செஞ்சொற்செல்வரைத் தேடிவந்தவையே.

நாற்பதாண்டுகட்குமேல் இவர் தம் செயல்திறன், நெறிப்பட்ட வாழ்வு, அரிய சேவைகள் பற்றி நன்குணர்ந்தவர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமையடைகின்றேன்.

உயர் நிலையை எட்டிப்பிடித்தும் தான் வந்த வளர்ந்த தடத்தை மறவாத பெருமனங்கொண்ட பேராளன். உயர் வாழ்வு வாழ்ந்துவரும் அன்பர் எப்படி இருந்தேன் இப்போதெப்படி வாழ்கின்றேன் என்பதைத் திரும்பிப் பார்க்கும் செம்மை வளமனம் படைத்த செம்மல். இவ்வொழுக்கசீலம் எல்லோரிடமுங் கைகூடுவதொன்றல்ல.

காலத்தாலாகாதன முயற்சியாலாகுமென்பதற்கெடுத்துக் காட்டாக விளங்குபவர் 'திருப்பணித்தவமணி' எஸ். ரி. ஆர். இவரின் இளமை வாழ்வின் ஆரம்பம் அரும்பாய் முகையாய் மலராய் முகிழ்ந்து மணம் கமழும் நிலையை எய்தியது. இச் செய்தியினை நாளேட்டில் இவர் தம் பேட்டியினால் உணரக்கிட்டுகின்றது.

அன்பிற்குரிய பெரியார் தொழில் சார்பாகத் தாயகம் சென்று திரும்பிவரும் வழியில் புகழ் பூத்த வரலாற்றுப் பெருமைமிகுந்த திருக்கேதீச்சரத் திருத்தலத்திற்கு வருகை தந்தார். இந் நிகழ்வு நாற்பதாண்டுகட்கு முன். அன்றுதொட்டு இன்றுவரை திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் அணுக்கத்தொண்டனாக அடியவனாக அறங்காவற் குழு உறுப்பினனாக அணி செய்வது பெருமைக்குரிய தொன்றாம். ஆலய வளர்ச்சிகாணப் பேராசையுறும் பெருமகன் எஸ். ரி. ஆர்.

திருப்பணித்தவமணியவர்கள் திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் தன் முத்திரை பதிய வேண்டுமென வேணவாக்கொண்டார். அவ் வெண்ணக்கருவின் தொடக்கம் எஸ். ரி. ஆர். எனும் மூன்றெழுத்துடன் எஸ். ரி. ஆர் மணிமண்டபம், திருமணமாளிகை என அமைக்கத்துணிந்து அழகுமிளிர அமைக்கலானார். இம் மாடங்கள் திருக்கேதீச்சரநாதன் தன் அருள்வேண்டிவரும் அடியவர்க்கு மிகுந்த ஆறுதலே.

பெரியார் சிலேடையாகவும் இரட்டுற மொழிதலாகவும் அன்பர்களுடன் அறிஞர்களுடன் உரையாடுவது அலாதியானதொன்றாம். ஒருவர் கூறும் சொல்லை வைத்து அதே கருத்தொத்த சொல்லை மாற்றிக்கூறும் விவேகம் கொண்டதிறனாளர்.

வெளிக்காட்டாத ஆன்மீகவழியில் அதீத நம்பிக்கைகொண்ட ஏந்தல். ஆடம்பரமோ அலங்காரமோவின்றி அமைதியான அகவாழ்வு வாழ ஆசைகொண்டவர்.

பெருமனிதர்களாகப் போற்றப்படுகின்ற அறிஞர் அண்ணா, கர்மவீரர் காமராசர், பொன்மனச் செல்வர் M.G.R; A.V மெய்யப்பச் செட்டியார், தந்தை செல்வா போன்றோரின் அன்புக்குரியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்குவாழ்பவர்
வானுறையுந் தெய்வத்துள்வைக்கப்படும்"
எனும் பொதுமறைப் பொன்மொழி மறவாத புண்ணிய சீலர்.

திரை அரங்கம் + திரைப்படம் பெருந் தனம் படைத்தவர்களாகவும் பெரிய நிறுவன உரிமையாளர்களாகவும் இருந்த சிலோன் தியேட்டர், சினிமாஸ் லிமிட்டேட் போன்ற பணம் படைத்த பெரியார்கள் வாழ்ந்தகாலம்.

இத்துணை பேர் படைத்தபெரியார்கள் நடுவண் போட்டி பொறாமை, காழ்ப்புணர்வு தடம்புரண்ட காலத்தில் ஆரம்பமான திரை அரங்கு நிறுவனர் 'திருப்பணித்தவமணி' சி. தியாகராசா அவர்கள் யாழ் நகரில் பிரபலம் மிகுந்த வீதியருகே ராஜா திரை அரங்கமொன்றை அரிதின் முயன்று உருவாக்கினார். இதனை உருவாக்கத்துணிந்தமை இவர் தம் வல்லமையையும் துணிவையுமே வெளிப்படுத்துகின்றன.

பெரியாரின் துணிவும் விடாமுயற்சியும் மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களிலும் சாந்தி, வசந்திபோன்ற பலதிரை அரங்குகள் உருவாகின. மன்னாரிலும் கூட ஒரு திரை அரங்குருவாக வழிபிறந்தவேளை யுத்தங் குறுக்கிட்டுத் தடைப்பட்டது.

இவர் தனது வளர்ச்சிக்காலத்தில் திரை அரங்கு, திரைப்படத்தோடுமாத்திரம் நின்றுவிடவில்லை. சமூகத்தொண்டு, ஆன்மீகத்தொண்டு அரசியல் போன்ற பல துறைகளிலும் அருந்தொண்டாற்ற முற்பட்டார். அறந்திறம்பாது செயற்பட்டார். யாழ். மாநகர சபை உறுப்பினராக இருந்த வேளை மக்கள் மனங்கவரும் பல பணிகளை ஆற்றிச் சிறப்படைந்தார்.

யுத்தத்தால் சிதைந்த காங்கேசன்துறை வீதியில் அமைந்த ஸ்ரீகதிரேசன் ஆலயத்தை மறுசீரமைத்துப் புதுக்கித் திருக்குடத் திருமுழுக்கு விழாவினை வெகு சிறப்புடன் நிறைவேற்றி வைத்தார்.

இன்பமுந்துன்பமும் இரட்டைக் குழவிகள். இன்பம் தரும் வேளைகளில் பல்வித இடர்பாடுகளும் நிகழ்வது தவிர்க்கொணா தொன்று. இன்பத்தோடுகூடி பலதரப்பட்ட இடர்ப்பாடுகளும் ஏற்பட்டன. இவற்றை யெல்லாம் துச்சமெனத் தூரத்தள்ளி வீரமுடன் வீறு நடை போட்டு வெற்றிகொண்டபெருமை எஸ். ரி. ஆர் அவர்களுக்கே உரித்தானதொன்று.

'இல்லது என் இல்லவள் மாண்பானால் உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை'

இவ்வள்ளுவன்வாய்மொழியே 'திருப்பணித் தவமணி' எஸ். ரி. ஆர் தியாகராசா அவர்களின் உயர்வுகளனைத்திற்கும் தேன்றாத் துணையாக ஊன்றுகோலாக அமைந்ததெனின் சாலப் பெருத்தமுடையதொன்றே.

தமிழ் கூறு நல்லுலகில் இன்றுபோல்
என்றும் பல்வளம் பெற்று பலர்க்கும்
உதவிடும் வற்றாத பொய்கையாய்
வளர வாழ்த்திடுவோம்.

*சிவசேவகன்,*
*சிவப்பித்தன், சித்தாந்தப் புரவலர்,*
புலவர் அ. திருநாவுக்கரசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
FILMS

வி ஜி பி உலகத் தமிழ்ச் சங்கம்
VGP ULAGA TAMIL SANGAM
Regd.No. : 102/93
Founder & President Chevaliar Dr.V.G.Santhosam Chancellor of Peace & Friendship
Vice President V.G.P.Ravidas
General Secretary Siromani V.G.Selvaraj
Joint Secretary V.G.P. Rajadas
Treasurer V.G.S.Rajesh

# இனிய எஸ் . ரி . ஆருக்கு வாழ்த்துக்கள்!

என் இனிய சகோதரர் எஸ். ரி. ஆர் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு. எஸ். தியாகராஜன் அவர்கள் உன்னதமான மாமனிதர். உயர்ந்த குணம் கொண்டவர். இனிய சுபாவமும், எளிமையும் நிறைந்த அருமைச் சகோதரர் எஸ். ரி. ஆர் அவர்கள். ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன் அறிமுகமானவர். நான் கொழும்புக்குச் செல்லும்போது, என்னை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து எல்லா இடங்களையும் சுற்றிக் காட்டினார். அவரின் அன்புத் துணைவியார், அருமைப் பிள்ளைகள் எல்லோரும் என்னைத் தன் குடும்பத்தில் ஒருவராக நினைத்து வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்திலே பல சினிமாத் தியேட்டர்களை ஆரம்பித்து அதன் மூலமாகப் பல தமிழ்ப்படங்களை இறக்குமதி செய்து எல்லாத் தமிழ் மக்களுக்கும் அதைக் காண்பித்து மக்களிடம் நற்பெயரைப் பெற்றிருக்கிறார். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆருக்கு ஒரு நல்ல நண்பராகவும், ஒரு பெரிய அபிமானியாகவும் இருந்திருக்கிறார். எம். ஜி. ஆர். ஜெயலலிதா நடித்த காவல்காரன் சினிமா மூலமாக அவர் எம். ஜி ஆருக்கு அறிமுகமானார். ஐந்து தியேட்டர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு வவுனியா, திருகோணமலை போன்ற இடங்களில் கட்டி அதன்மூலம் பலபேருக்கு வேலைவாய்ப்பும் கொடுத்து வருகின்றார். அவர் தமிழ்பற்றும், தெய்வப்பற்றும், தேசியப்பற்றும் மிக்கவர். குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து செல்லுகின்ற எல்லாக் கலைஞர்களுக்கும் மிகப்பெரிய அளவில் விருந்து கொடுத்து நன்கு உபசரித்து அவர்கள் மனதில் இடம் பிடித்தவர்.

இன்று அவர்கள் சினிமாத் தொழிலுக்கு வந்து 50 ஆண்டுகள் ஆனதைப் பார்க்கும்போது, 50 ஆண்டுகளில் இலங்கையில் நடைபெற்ற பல துன்பங்களிலும் அவர் இறையருளால் பாதுகாக்கப்பட்டு, இன்று அவர் ஓர் உயர்ந்த மனிதராக இருக்கின்றார். நல்ல குடும்பத் தலைவராக இருக்கிறார். அவர் பிள்ளைகள் எல்லோரையும் நன்கு படிக்க வைத்து, உயர்ந்த பணியில் இருக்கின்றார்கள். எஸ். ரி. ஆர் அவர்களும், அவரின் அன்புத் துணைவியார் மற்றும் பிள்ளைகளும் நீடு வாழ்ந்து எல்லாப் பெருமைகளையும் பெறுவதற்கு ஆண்டவரின் இனிய மதுர நாமத்தினால் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

*என்றும் உங்கள் அன்பு சகோதரன்,*

(டாக்டர் வி. ஜி. சந்தோசம்)

வேதாகமம் :–

**நீதிமான்களோ தேவனுக்குமுன்பாக மகிழ்ந்து களிகூர்ந்து, ஆனந்த சந்தோஷமடைவார்கள் (சங்:68:3)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**P. K. Jayakumar**
ESWARI ENTERPRISES
Producers, Distributors and Exporters
Old No. 44/3, New No. 56
Landons Road, Kilpauk, Film
Chennai - 600010
Tamil Nadu
Ph : 044 - 26651010

My Dear Thyagarajah,

It is indeed a very great pleasure to share the remembrance of my association with you, ever since 1962. It was the year of your first step in distribution, and I take the proud privilege of smashing all the stalwarts in the import of Tamil Pictures against a stiff competition with money, popularity, influence and so on.

I realy took it as a challenge to place you before them in a top position with my little contacts, sincere love, affection, determination and succeeded by purchasing "Kavalkaran", the picture of MGR, a great hero at that point of time, produced by Sathy a Movies. This has really given a very big image to Mr. Thyagarajah, and has been recognised by one and all as the top *Tamil Films Importer* with a super hit record of hundred days run followed by many such MGR and other star films.

Today STR Films is celebrating its golded year, a greatest record in the film industry of Sri Lanka. My sincere greetings and best wishes on this happiest occasion and looking forward to be with you at Sri Lanka in the near future.

With my love and affection to your and all your family members.

with Love, **P. K. Jayakumar**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1010/11 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
18.03.2012



அந்த நாளில் படமாளிகை எல்லாம் மிக வசதி படைத்தவர்களிடமும் பெரும் பதவிகளில் இருப்பவர்களிடமுந் தான் இருந்தனர் அவர்களே

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் யாழ்ப்பாணத்தில் ஒரு தனி மனிதன் அதிலும் சாதாரண மனிதன் ஒருவன் துணிந்தான். துணிவே துணையெனச் செயலில் இறங்கினான். அந்தத் துணிவு தந்த பயன்தான் ராஜா தியேட்டர். பட்ட பாட்டுக்கு சரியான அறுவடை இன்று யாழ், வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை ஐந்து நகரங்களில் ஆறு படமாளிகைகள். பரம்பரைப் பணத்தால் அல்ல பண்பான நடைமுறையால், உண்மையான ஒழுக்கத்தால் உயர்ந்தவர் S. T. R. தியாகு அண்ணா என்பதில் நான் மிக மிக மகிழ்ச்சியடைகிறேன். ராஜா தியேட்டர் ஒரு முறை இடிந்து விழுந்த போது இவனுக்கு ஏன் இந்த வேலை. சறுவத்துக்கடையே நடத்தியிருக்கலாம் என்று கேலியும் கிண்டலும் செய்தவர்கள் இன்று எங்கோ மறைந்து போனார்கள். S. T. R தியாகு அண்ணா மட்டும் இன்றும் உறுதியோடு ஒரே குறிக்கோளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதை நினைக்கும் போது எனது உள்ளம் நிறைவாகவும் மகிழ்வாகவும் இருக்கிறது. இப்படி எல்லா மனிதர்களும் உறுதியோடு அசையாத நம்பிக்கையோடு வாழ்ந்தால் எங்கள் தமிழினமே தரணியில் தலை நிமிர்ந்து வாழும்.

இப்படிக்கு,
*'கலாபூஷணம்,'*
**இ. பீதாம்பரம்**
*(பற்குணம்)*

STR FILMS
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. சி. தியாகராசா சரஸ்வதி தம்பதியினர்க்கு வாழ்த்து

ஆதியுயர் பண்பு அமைந்த குடும்பங்கள்
நிதியாய்ச் சேர்ந்தனர் பண்புயர் நன்மகள்
விதியென இறைவன் விதித்தனன் நானும்
பதிவான வளானேன் பரமனின் அருளால்.
மதிமுகம் கண்டே மகிழந்தேன் நாளும்.

சந்தித்தோம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில்
விந்தையாய்த் தொடருதே விழுமிய வாழ்வதாய்
சிந்தனை சிதறாத சிறப்பை உணர்ந்தேன்
பந்தமும் பாசமும் பற்றிடச் செய்ததே.

அன்புநிறை பெற்றோர் ஆழ்மனப் பதிவு
தம்மகள் போலென்னை தயையாய் அணைத்தனர்
இன்முகம் கண்முன் இனிதே நன்நிழலாய்
முன்செய் வினையென மூழ்க வைக்கிறதே.

இறையருள் விதித்த இல்வாழ்வு இனிதே
நறையென இனிமையாய் நண்ணி நிற்குதே
குறையேது மிலாத குதூகல வாழ்வு
நிறைவைத் தந்திட நிமலனை வணங்குவோம்.

திக்கெலாம் பெரும்புகழ் திகழ இறைவனும்
பக்குவமாய்க் கணவர்க்குப் பரிந்து ஈந்தனன்
சொக்கவைக்கும்செயல் சொன்னார் காற்றலையில்
தக்காரென இறைவன் தெரிந்தான் சேவைக்கே.

மக்கள் மருமக்கள் பேரர்மருவி மகிழ்ந்திட
சொர்க்கம் அதுதானே சுகம் தரும் வாழ்வாமே
பக்கபல மாய்ப்பெரும் பணியாற்றிட அவரும்
தக்கவ ரானார் தகைகொள் வாரிசாய்.

வாழ்த்துகிறோம் உங்கள் அறவாழ்வு வளம்பெற
வாழிய வாழியவே
போற்றுவமே உங்கள் புனித சேவைதனை
புலம்பெயர் மக்கள்நாம்
ஆற்றும் சேவையும் அறநெறி வழியாம்
ஆண்டவன் துணையாவான்
சாற்றுதற் கரிதாம் சீர்பெறு சேவையே
வாழிய வாழியவே!

திருமதி மனோன்மணி வரதராசா,
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
*(கனடாவில் இருந்து)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் நிறுவனம்
# பொன்விழா வாழ்த்து

எஸ். ரி. ஆர் எனும் நிறுவனப் பெயரையே தன் கௌரவப் பெயராகக் கொண்ட திரு. தியாகராசா அவர்கள் மிக அமைதியான அடக்கமான, ஆழமான பண்புகள் கொண்ட சான்றோனாகத் திகழ்கின்றார். தலைசிறந்த கலைஞர், கர்நாடக சங்கீத இரசிகர், ஆன்மீகத் தொண்டர், சைவசமய நிறுவனங்கள் பலவற்றின் தலைவர், பலசினிமாத் தியேட்டர்களின் உரிமையாளர் என்னும் பன்முகப் பரிணாமங்களைக் கொண்ட பெருமகன்.

இசைவிழாக்களை ஒழுங்குபடுத்துவது, இசைவிழாக்களுக்குத் தலைமைதாங்குவது மட்டுமல்ல தன்வீட்டிலேயே இசைவிழாக்களை நடத்தியும், தன் ஒய்வு நேரங்கள் எல்லாம் கர்நாடக இசை கேட்பதிலும் ஈடுகொண்டுள்ள ஒருவர் இவர்.

தன்நேரத்தையும், பொருள் வருவாயையும், கலைப்பணிக்கும், தெய்வீகப் பணிகளுக்கும் அர்ப்பணித்துள்ள இவர் 1971 முதல் யாழ்நகர் கே. கே. எஸ் வீதியிலுள்ள கதிரேசன் கோயில் தலைவராயிருந்து தளராத சமயப்பணி செய்துவருகின்றார். 1976 முதல் திருக்கேதீஸ்வர அறங்காவலர் சபை உறுப்பினராயிருந்து திருக்கேதீஸ்வர அபிவிருத்திக்கு அயராது உழைத்து வருகின்றார்.

திருகோணமலையில் சுவாமி கெங்காதரானந்தா அவர்களது சிவானந்த ஆச்சிரமத்து ஆன்மீகப் பணிகளில் பங்குபற்றி வருகின்றார். திருக்கேதீஸ்வரம் திருவாசகம் சகளரத்தின சுவாமிகளின் நினைவாலயமாக மடம் அமைக்கும் பணியில் முன்னின்று உழைத்து வருகின்றார். இதனை யாத்திரிகர்கள் தங்குவதற்கும் மற்றும் பலவித சமய ஆன்மீகப் பணிகளுக்கும் ஏற்றவகையில் அமைப்பதில் ஈடுபாடு கொண்டுள்ளார்.

கொழும்பில் திருநெறிய தமிழ் மன்றத்தின் தலைவராயிருந்து சமய குரவர்கள், சந்தான குரவர்கள் திருவடி வழிபாடு குருபூசைகள், சமய விழாக்களைக் காலந்தவறாது தொடர்ந்து நடைபெற வழிகாட்டியாயுள்ளார்.

யோகர் சுவாமிகள், முருகேசு சுவாமிகள் முதலான ஞானியர்களை வழிபடுதலும், அவர்கள் காட்டிய வழியில் வாழ்தலையும் இலட்சியமாகக் கொண்ட பெரியார் எஸ். ரி. ஆர் தியாகராசா அவர்களும் அவரது நிறுவனமும் பணிகளும் நின்று நிலைத்துப் புகழ்பெற வாழ்த்துகின்றோம்.

சு. பொ. நடராசா *அவர்கள்*
*அண்ணா தொழிலக முதல்வர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

50 ஆண்டுகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் S. T. R. films நிறுவனத்திற்கு வாழ்த்துச் செய்தி கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந் நிறுவனத்தின் தலைவர் சமூக பெரியார் கௌரவ S. தியாகராஜா அவர்கள் பொருளாதார சமூக, சமய, அரசியல், ரீதியாக எமது வடக்கு கிழக்கு தாயக பிரதேசத்தின் ஒரு மூத்த பிரஜை ஆவார். சாதாரணமாக தமிழ், சமூகத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் தங்களது முதலீடுகளை தெற்கு, மலையகம் மற்றும் பிறநாடுகளில் முதலீடுகளை செய்தவேளையில் எமது தாயக பிரதேசத்தின், பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு வடக்கு, கிழக்கு பகுதியின் முக்கிய நகரங்களில் முதலீடுகளைச் செய்து தன்னுடைய மண்ணின் மீது உள்ள பற்றை நீரூபித்துள்ளார்.

தமிழ் அரசுக்கட்சியின் மூத்த உறுப்பினராகவும், யாழ் மாநகரசபையில் கௌரவ உறுப்பினராகவும் இருந்து எம் மக்களிற்கான சரியான அரசியல் வழிநடத்தல்களை செய்தவர்.

திருக்கேதீஸ்வரம் மற்றும் அதனைப் போன்று யாழ்ப்பாணத்தின் பல கோயில்களிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் அளப்பெரிய தொண்டுகள் செய்து சிறந்த சமய தொண்டனாகவும் விளங்கினார்.

அதற்கு மேலாக **1967**ம் ஆண்டு காலப்பகுதியில் தனது நிறுவனத்தில் எமது நெடுங்கேணி தெய்வேந்திரா சினிமா தியேட்டரினை இணைத்ததோடு தமது முதல் படமான " பெண்னே நீ வாழ்க" என்னும் படத்தினை ஆரம்பித்து வைத்த பெருமையும் அவரையே சாரும்.

பொருளாதார ரீதியாக அவரது நிறுவனம் ஓங்கிச் செழிக்கவும் அதன் தலைவரான சமூகப் பெரியார் கௌரவ S. தியாகராஜா ஐயா அவர்கள் யுகங்கள் உள்ளவரை வாழட்டும் என்று என் உள்ளம் கனிந்து வாழ்த்துகிறேன்.

நன்றி

G. T. லிங்கநாதன்
*(முன்நாள் நகர பிதா வவுனியா)*

*தலைவர்*
*தாமோர் குழுமம் (Thamor Group)*
*தாமோர் நற்பணி மன்றம்*
*நெடுங்கேணி*
*வவுனியா வடக்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது சிறுபராய விளையாட்டே என் வாழ்வாதாரமாக அமைந்தது.

"எனது தாய் தந்தையர்கள் பால் மாடு வளர்த்து சீவியம் நடத்தினர். பள்ளிப் பருவத்திற் பால் விநியோகம் செய்வது எனது வேலை. இக்காலங்களில் வின்சர், வெலிங்ரன் தியேட்டர்கள் பக்கம் செல்லும்போது அவற்றில் வெட்டி வீசப்பட்டிருக்கும் திரைப்படச்சுருள் துண்டுகளை எடுப்பேன்.

இரண்டு தகரக் குடுவைகளைப் பொருத்தி இடையிலே இந்தப் படச்சுருள் துண்டுகளை வைத்து பின்புறத் துவாரம் மூலம் பற்றறி மின்சாரத்தைப் பாய்ச்சினால் படம் எனது வீட்டுச்சுவரில் விழும் இதனை எனது நண்பர்களுக்கும் காண்பித்து மகிழ்வேன். இந்த விளையாட்டுப் பின்னாளில் எனது வாழ்வாதாரமாக அமையுமென்று நினைக்கவில்லை"

இவ்வாறு கூறுகிறார் எஸ்.ரி.ஆர்.பிலிம்ஸ் தொழிலதிபரும் யாழ் ராஜாத் தியேட்டர் உரிமையாளருமான எஸ்.தியாகராஜா அவரது வாழ்க்கைப் படிகள் சுவாரஸ்யமானவை.

"நான் வைத்தீஸ்வராக் கல்லூரியில் 7 ஆம் வகுப்புக் கற்றுக் கொண்டிருந்தேன். வயது 14. என் அண்ணன் சர்பத் கடை ஒன்றை நடத்தினார். அவருக்கு உதவியாளராக இருப்பதற்கு பெற்றோர் எனது படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்தனர்.

அவர்களது விருப்பப்படி கடையில் வேலை செய்தேன். சங்கீதத்தை முறைப்படி கற்காவிடினும் நல்ல ஓர் இசைப்பிரியனாகவிருந்தேன். கடைக்கென ஒரு றேடியோவை வாங்கிவித்தேன். தினமும் பாட்டுக் கேட்டு இரசிப்பேன்" என்றார்.

தமையனுடன் சிறிது காலம் வேலை செய்த இவர் முரண்பாடு காரணமாகக் கடைக்குப் போவதை நிறுத்திக் கொண்டார். தமையனும் பெற்றோரும் வற்புறுத்திக் கேட்டும் பிடிவாதமாக மறுத்துள்ளார். இதுவே அவரது வாழ்வின் திருப்பு முனை என்கிறார்.

சுயமாக உழைத்து வாழ்வது என்ற முடிவுக்கு வந்தார். 16 வயதில் ஒரு தோடம்பழ வியாபாரியை அணுகி, தோடம்பழங்களைக் கடனாகப் பெற்று யாழ். நகரில் ஒரு வாகை நிழலில் வைத்து விற்பனை செய்யலானார். துணைக்கு ஒரு பையனையுஞ் சேர்த்துக் கொண்டார். வருமானம் அதிகரிக்கவே சிறிய கடை ஒன்றை வாங்கிக் கொண்டார். சிறிது காலத்தில் தனது சகோதரியினுடைய திருமணத்தை ஈடேற்ற அந்தக் கடையை விற்கவேண்டி ஏற்பட்டது. மீண்டும் வெறுங்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதப் பிரியனானதால் தன்னொத்த சில நண்பர்களுடன் தமிழகம் சென்று இசைவிழாக் காண முற்பட்டார். அங்கு சென்ற போது திரைப்பட மையமாக அமைந்த கோடம்பாக்கத்தைச் சென்று பார்க்க விரும்பினார். அவ்வேளையில் இரண்டு படச்சுருள்களை இலங்கைக்கு வாங்கி வந்தால் என்ன? என்று எண்ணி முயற்சித்த போது தோல்வி கண்டார்.

"நாடு திரும்பியதும் இளைஞனாகிய எனக்கிருந்த அரசியல் ஆர்வம் காரணமாக யாழ். மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தேன். பெருந்தலைவர்களோடு போட்டியிட்டுத் தோல்வி கண்டேன். தோல்வியைத் தழுவினாலும் இந்த அரசியற் பிரவேசம் எனக்குப் பெருமளவு பலத்தைக் கொடுத்தது. எனது உயர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றது. மீண்டும் ஒரு கடையை வாங்கி வியாபாரத்தில் ஈடுபட்டேன்" என்றார்.

1957இல் திருமணமாகிய கையோடு திரைப்பட அரங்கொன்றை அமைக்க முற்பட்ட தியாகராஜா "ராஜா" திரை அரங்கை கட்டி கூரை வேலைகளை முடித்திருந்த போது ஒரு இரவில் எதிர்பாராத வகையில் கூரை இடிந்து வீழ்த்தப்பட்டிருந்தமை கண்டார். சோர்வடையாது மீண்டும் அதனை நிர்மாணித்தார். திட்டமிட்டபடி திரை அரங்கு திறக்கப்பட்டது.

அப்போது திரைப்பட விநியோகஞ் செய்யும் மூன்று நிறுவனங்கள் இலங்கையில் இருந்தன. அவற்றின் எதிர்ப்பலைகளை முறியடிக்க 1962 இல் எஸ்.ரி.ஆர்.பிலிம்ஸ் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தித் தானும் திரைப்பட விநியோகஸ்தரானார்.

## காவல்காரன் ஏற்படுத்திய திருப்புமுனை

1967இல் எம்.ஜி.ஆர் நடித்த ஆர்.எம்.வீரப்பனால் தயாரிக்கப்பட்ட காவல்காரன் திரைப்படம் எனது திரைப்படத் தொழிலில் ஒரு திருப்புமுனையாகியது. இப்படத்தை ஏனைய விநியோகஸ்தர்களுடன் போட்டியிட்டு நான் பெற்றுக்கொண்டேன். படம் தயாரிக்கப்பட்ட இடை நடுவில் எம்.ஜி.ஆர் ஐ.எம்.ஆர்.ராதா சுட்டுவிட்டார் என்ற அவலச் செய்தி என் செவிக்கு எட்டியது. அச் செய்தியைக் கேட்ட உடனேயே அவர் சாவாரோ இல்லையோ நான் செத்து விடுவேன் போல் இருந்தது. நட்பின் வலிமையே அது மறுநாளே இந்தியா சென்று அவரை ஆஸ்பத்திரியிற் சந்தித்தபோது கையசைத்துத் தனக்கு ஒன்றுமே ஆகாது என்பதைச் சைகை மூலம் காட்டினார்.

இச் சம்பவத்தால் ஒரு வருடம் கழிந்தே காவல்காரன் வெளிவந்தது. என்றுமில்லாதளவிற்கு மும்மொழிப்பத்திரிகைகளிலும் அதனை விளம்பரம் செய்தேன். காவல்காரன் 100 நாட்கள் தாண்டியும் ஓடியது. அன்று முதலே எல்லாப் படத்தயாரிப்பாளர்களும் தங்கள் படங்களை எனக்கு வழங்க முண்டியடித்தார்கள். இதனை நான் சினிமாத்துறையிற் பெற்ற திருப்புமுனை என்பேன்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பிலும் ஒரு திரை அரங்கை நிறுவ முடிவு செய்து கட்டி முடித்துத் திறப்புவிழா நடத்தவிருந்தபோது இரவிரவாக தரைமட்டமாக்கப்பட்டது. ஆனால் மனஞ்சோராது மீண்டும் கட்டிமுடிப்பதில் வெற்றிகண்டார். பின்பு திருகோணமலை, வவுனியா, மன்னார் ஆகிய நகரங்களிலும் திரை அரங்குகளை நிறுவினார். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக நிலவிய போர்ச்சூழலால் இந்நகரங்களிலுள்ள பல திரையரங்குகள் மூடப்பட்ட போதும் தனது அரங்குகளைத் தக்கவைத்ததனால் இன்றுவரை சிறப்பாகச் செயற்படுவதாகக் கூறுகிறார்.

தாங்கள் திரைப்படத் தொழிலில் வெற்றி காண உதவிய காரணிகள் எவை? என்று கேட்டபோது நான் எந்த ஒரு விடயத்தையும் தீர்க்கமாகப் பத்து இருபது தடவைகள் யோசித்து நானாகவே முடிவெடுப்பேன். எடுத்த முடிவுகளைச் செயற்படுத்தும் வரை உறங்கமாட்டேன். இதுவே என் வெற்றியின் இரகசியம். மேலும் தமிழகத் திரையுலகுடன் நான் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகளும் உறவுகளும் எனது தொழில் விருத்திக்குப் பெரிதும் உதவின. எம்.ஜீ.ஆர் எனது மானசிகமான நண்பர். அவரது மூன்று எழுத்துக்கு இசைவாக எனது நிறுவனத்திற்கும் என்.ரீ.ஆர் என்று பெயரிட்டேன். கண்டவுடனேயே அவர் என்னைக் கட்டித்தழுவுமளவுக்கு உறவு இருந்தது.

அதேபோல் படத்தயாரிப்பாளர்களான ஏ.வி.எம்.மெய்யப்பச் செட்டியார், ஜெமினிவாசன் நாகிரெட்டி, ஆர்.எம்.வீரப்பன் முதலானோர் உடன்பிறவாச் சகோதரர்களாகவே செயற்பட்டனர்.

அறிஞர் அண்ணாவிடம் எனக்கு அதீத விருப்புண்டு. 1967 இல் அவர் தேர்தலில் வென்ற போது ஏதோ ஒரு உந்துதலால் தேர்தலில் தோல்வியடைந்த கர்மவீரர் காமராஜரைச் சென்று சந்தித்தேன். அனுதாபத்தை தெரிவித்தேன். அன்றிலிருந்து அவரது மனதில் ஒரு தனியான இடத்தைப் பிடித்துக் கொண்டேன்.

சமூக நோக்கில் யாழ்.கிராமோதய சபை, பிரதேச சபை என்பவற்றின் தலைவராக இருந்ததோடு யாழ் மாநகரசபை உறுப்பினராகவும் இருந்து மக்கள் சேவை ஆற்றினேன்.

எனது எனது வளர்ச்சிக்குத் தெய்வ பக்தியும் காரணம் என்பேன். 1971இல் எனக்கு ஏற்பட்ட ஒரு முக்கிய இடர்பாடிலிருந்து மீட்சி பெறத் திருச்செந்தூர் முருகனிடம் சென்று முறையிட்டேன். முருகனை எனது மனதிற் பள்ளி கொள்ளச் செய்து வந்து யாழ்.காங்கேசன்துறை வீதியிலுள்ள கதிரேசன் ஆலயத்தில் முருகனைக் குடியிருத்தினேன். இன்று வரை இவ்வாலயத்தின் தொண்டனாகச் செயற்படுகிறேன்.

என் ஆன்மீக நாட்டம் காரணமாக அருளாவர். பலருடனும் தொடர்புகள் ஏற்பட்டன. இதனால்இயன்றவரை சமயப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றேன். தற்போது திருக்கேதீஸ்வரத்தில் ஒரு யாத்திரிகர் விடுதியை நிர்மாணித்து வருகிறேன். அதேபோல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் கதிரேசன் ஆலயத்தில் நால்வர் திரு உருக்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்படவுள்ளன.

இவரது சமயப் பணிகளை விதந்து நல்லை ஆதீன மகாசந்நிதானம் 1977ல் "திருப்பணித் தவமணி" எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. பல்வேறு நிறுவனங்களும் பற்பல பட்டங்களை இவருக்கு வழங்கியிருந்தாலும் இதுவே இவருடன் ஒட்டிக்கொண்டுள்ளது. கொழும்பில் இயங்கும் பழமை வாய்ந்த ஈழத் திருநெறி தமிழ்மன்றம், திருக்கேதீஸ்சரம் சபாரட்ணசுவாமி தொண்டர்சபை போன்ற சமய நிறுவனங்களின் தலைவராக இருந்து தற்போது செயற்பட்டு வருகிறார்.

தியாகராஜா ஒரு இசைப்பிரியர் என்பதால் அவரது வீடே ஓர் இசை அரங்காக விளங்கி வருகின்றது எனலாம். தமிழக இசைக் கலைஞர்கள் இலங்கை வரும் போதெல்லாம் இவரது இல்லத்தில் கச்சேரி நடத்தத் தவறுவதில்லை. தனது பிள்ளைகளிடத்தும் இசையார்வத்தை தூண்டுவதே இதன் நோக்கம் என்கிறார்.

எஸ்.ரி.ஆர் கடந்து வந்துள்ள பாதை இன்றைய சூழலில் எமது தலைமுறையினர் அறிய வேண்டிய பாதை. "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கு இவரது பாதை ஒரு எடுத்துக்காட்டு.

வகுப்பறைக் கல்வி 7ஆம் வகுப்புவரையே எனினும் சுயமாகவே கற்று தமிழில் மட்டுமன்றி ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் புலமை பெற்றிருந்தமையே இவரது ஆளுமைத் திறமைகளுக்கு அடிநாதம் என்பதை உணர முடிந்தது.

நன்றி: யாழ். தினக்குரல் 25 ஒக்டோபர் 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்து வந்த பாதையும் கலைஞர் சங்கமங்களும்

## தொழிலதிபர் எஸ்.ரி.ஆர் (1930 - )
## வாழ்வும் பணிகளும் – ஒரு கண்ணோட்டம்.

நயினாதீவு, வேலணையெனும் ஈரூர்களின் திருமணத் தொடர்பு முறையால் உதித்தவர் திருப்பணித் தவமணி கலைக்காவலர் தொழிலதிபர் மூவெழுத்தால் எஸ்.ரி.ஆர் எனப்படும் சின்னத்தம்பி தியாகராஜா அவர்கள் அம்மாவின் பெயர் தையலம்மை. மாந்தருள் மகான் மகாத்மா காந்தி பிறந்த திகதியான 02ஆந் திகதியிலே 02.08.1930இல் இவர் பிறந்தார். கருவிலே திருவுடையராய இவரின் குணநலன்களும் இயல்புகளும், மனவோட்டங்களும், விருப்பங்களும் எண்ணங்களும் அபிலாஷைகளும் கூட சாத்விகத்தன்மையுடையனவாயும், பண்பாட்டு, கலாசார, மக்கள் நல அடிப்படைகளைக் கொண்டனவாகவுமே அமைந்தமை பெருவியப்பன்று. குலவித்தை கல்லாமற் பாகம்படுமன்றோ. இவரோடு உடன்பிறந்தோர் தங்கராசா, தனபாலசிங்கம், பத்மநாதன், தர்மராசா, பராசக்தி, நித்தியலட்சுமி என்னும் அறுவராவர். நிரம்பிய தெய்வபக்தியையுடைய தந்தையார் சின்னத்தம்பி ஆரம்பத்தில் கடைத்தொழில் நடத்தியும் பின்னர் பால்மாடுகள் வளர்த்து பால் விற்பனைசெய்தும் பிள்ளைகளைப் படிப்பித்தார். நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மாள் மீதும், முருகப் பெருமான் மீதும் அபரிமிதமான பெரு நம்பிக்கை கொண்டவர். பக்தியுடையவர், யாழ்ப்பாணத்திலே நாங்கள் வாழ்ந்த காலத்திலே ஸ்ரீ கதிர்வேலாயுத பெருமான் மீதும் ஈடுபாடுடையவர். அக்காலத்திலே எமது குடும்பம் யாழ்ப்பாணத்தில் வசித்தது. விவேகானந்த வித்தியாலயத்தில் ஆரம்பித்த எமது கல்வி வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் தொடர்ந்து அக்காலத்திலே மிகவும் பிரசித்தி வாய்ந்த – புகழ்பூத்த கல்விமான் அதிபர் ச. அம்பிகைபாகன், திரு.வைரமுத்து திரு.சீனிவாசன் சர்மா ஆகியோர் சிறந்த நல்லாசிரியர்கள். சேவையையே பெரும் பேறாகக் கருதிக் கடமையாற்றினர். எம்மீது பாசமும் பிரியமும் அன்பும் கொண்டிருந்தனர். எமது குடும்பத்தின் பொருளாதார நிலைமை காரணமாகப் படிப்பிலே கவனஞ் செல்லவில்லை. குடும்பநிலை ஏதாவது வருமானந் தேடும் தொழிலை நாடியே நின்றது. 1944 ஆம் ஆண்டு தங்கராசா அண்ணர் ராஜா கூல்பார் கடையொன்றை நடத்தினார். நான் அதில் வேலை செய்தேன்" என்று விபரிக்கும் தொழிலதிபர் தமது கடந்துவந்த பாதையையும் விளக்கிப் பேட்டி தந்துள்ளார். ஆறு வருடங்கள் உருண்டோடிவிட்டன. அண்ணரும் மணவாழ்க்கையிற் புகுந்தார். குடும்பப் பொறுப்புக்களும் என்னை வந்தடைந்தன எனக் கூறும் எஸ்.ரி.ஆர் அதனைத் தாங்கிக் கொள்வதற்குத் தனியே தொழில் செய்ய வேண்டிய நிலையேற்பட்டது என்கிறார். அத்துடன் தமக்குள்ளிருந்த கலையுணர்ச்சியின் பயனாகவும், இசைலயிப்பு விருப்ப மேலீடு காரணமாகவும் தாம் வைத்திருந்த கடையில் வானொலிப் பெட்டியொன்றை வாங்கி இசைக்கச்சேரிகளையும், பாடல்களையும் கேட்க வேண்டும் என்னும் ஆசை ஏற்படலாயிற்று என்றுங் கூறுகிறார். கர்நாடக இசைமரபில் தெலுங்கு உருப்படிகளை இயற்றிப்பாடும் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமையும் வித்துவமுங் கொண்ட சங்கீத மும்மணிகளிலே தலையானவர் தியாகராஜபாகவதர். எஸ்.ரி.ஆர் அவர்களுக்கும் தியாகராஜா என்னும் பெயர் முன் புண்ணியப் பேறாகவே இசை கேட்கும் பேரார்வம் குடிகொண்டு தமது கடைக்கு வரும் நண்பர்களுடன் பாடல் கச்சேரிகள் கேட்டு ரசிப்பதுவே பொழுது போக்காக அமைந்தது. இசை பாடத் தெரியாதவிடத்தும் ரசிக்கத் தெரியவேண்டும் என்பர். சிறிதுபணம் கைக்குக் கிடைப்பதற்கு முன்னரே கார்த்திகேசு என்பவரிடம் ஒரு மூடை தோடம்பழம் கடன் பெற்று நண்பர் சதாசிவம் என்பவரின் உதவியுடன் பாதையோரத்தில் வாகைமரத்தடியில் வைத்து விற்பனை செய்தேன். தெரு வியாபாரியாயும் முயன்றும் கஷ்டப்பட்டும் பிரயாசையுடனும் தான் பணம் உழைக்க வேண்டிய நிலை; கடும் உழைப்பு. பதின்மூன்று, பதின்நான்கு வாகை மரங்கள் நிழல் தந்து நின்றன. பின்னர் அதன்மேல் கல் போட்டு தார் ஊற்றிபட்டுவிட்டன. பின்னர் ஒரு மரம் மாத்திரம் தப்பிநின்று நிழல் தந்தது. அம்மரத்திற்குப் பக்கத்திலிருந்த கற்களையகற்றித் தினமும் தண்ணீர் ஊற்றி மரத்தைக் காப்பாற்றினேன். கோடை வெப்பம் அனல் மிகுதியான யாழ் நகரில் களைப்பாறுவோருக்கு அதுவோர் குளிரூட்டிச்சாலையாகவே இருந்தது. பாலியப்பருவத்திலே இளம் வயதிலே பல நண்பர்களின் கூட்டும் அவர்களின் சிற்சில பழக்கங்களும் ஏற்பட்டன. திரு.நாகலிங்கம் NOB எனப்படும் பஸ் கம்பனிப் பங்காளர். அவரது மைத்துனர் சி.எஸ் இரத்தினசபாபதிக்கு மகேந்திரா என்ற பெயரிலே தியேட்டர் ஒன்றிருந்தது சுண்டிக்குளியில். வசூல் பணத்தையெடுத்து ஒரு பியர் வேண்டி மணலில் இருந்து குடிப்பார். எனக்கும் பாதி தருவார். அதனால் பியர் குடிக்கும் பழக்கமும் ஏற்படலாயிற்று. யாழ்ப்பாணத்திற்குப் படிக்கவரும் நண்பர்கள் சிலருள் இரத்தினராசா, குமாரவேலு, குண்டுமணி தர்மலிங்கம் என்போரில் இரத்தினராசா சிகரட் குடிப்பார். அவருடன் சேர்ந்து சிகரட் குடிக்கவும் பழக்கப்பட்டேன். திரு இரத்தினராசா பின்னர் இலங்கைவங்கி முகாமையாளராய்க் கடமையாற்றினார். எனக்கும் அவருக்கும் ஏற்பட்ட நட்பின் காரணமாக எனது வவுனியா வசந்தித் தியேட்டரிலும் ஏனைய தொழில் நிறுவனங்களிலும் முகாமையாளராக 2011ஆம் ஆண்டு இறைவனுடன் இணையும் வரை பணியாற்றினார். இளமைக் காலம் முதல் இறக்கும் வரை ஏறத்தாழ 60 வருடங்கள் மறக்கமுடியாத நட்பும் இழப்பும் அவருடையவை.

தமது வாழ்க்கைப் படிநிலைகளை நினைவுகூரும் தொழிலதிபர் எஸ்.ரி.ஆர் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வெளிப்படுத்திய நேர்காணல்களிலே தெரிவித்த பல விடயங்கள் சம்பவங்கள் இக் கட்டுரையிலே இடம்பெறுகின்றன. தமது இருபதாவது வயதில், 1950 ஆம் ஆண்டு மாநகர சபை கட்டிய கடையொன்றை ரூபா 5000/= செலுத்தி எடுத்துக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். அக்கடைக்கான தளபாடங்களைத் திரு.பொன்னையா என்ற பெரியவரிடம் இரவலாகப் பெற்றுக் கொண்டார். தமது இம்முன்னேற்ற நிலைமைகளுக்குத் தாம் கொண்ட விடாமுயற்சி, ஊக்கம், உற்சாகம், அஞ்சாமை, துணிவு, உறுதி என்பனவும் பணிவு, பொறுமை, தெய்வ நம்பிக்கை, சகிப்புணர்வு என்பனவும் தமது வெற்றியின் தூண்கள் எனவும் கூறுவார்.

2009-10-29ஆந் திகதியன்று வெளிவந்த ஞாயிறு தினக்குரலிலே "எனது சிறுபராய விளையாட்டே என் வாழ்வாதாரமாக அமைந்தது" என்னும் மகுடத்திலே ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணலிலே தொழிலதிபர் எஸ்.ரி.ஆர் மேல்வருமாறு கூறியுள்ளமை மேற்கோளாகவே எடுத்தாளப்படுகிறது.

"எனது தாய்தந்தையர்கள் பால்மாடு வளர்த்துச் சீவியம் நடத்தினர். பள்ளிப்பருவத்திற் பால் விநியோகம் செய்வது எனது வேலை. இக்காலங்களில் வின்சர், வெலிங்டன் தியேட்டர்கள் பக்கம் செல்லும் போது அவற்றில் வெட்டி வீசப்பட்டிருக்கும் திரைப்படச்சுருள் துண்டுகளை எடுப்பேன். இரண்டு தகரக்குடுவைகளை வைத்துப் பின்புறத் துவாரம் மூலம் பற்றறி மின்சாரத்தைப் பாய்ச்சினால் படம் எனது வீட்டுச் சுவரில் விழும் இதனை எனது நண்பர்களுக்கும் காண்பித்து மகிழ்வேன். இந்த விளையாட்டுப் பின்னாளில் எனது வாழ்வாதாரமாக அமையுமென்று நினைக்கவில்லை" என்கிறார். தம்மைப்பற்றி மேலும் கூறுகையில்,

"நான் வைத்தீஸ்வராக் கல்லூரியில் 7ஆம் வகுப்புக் கற்றுக் கொண்டிருந்தேன். வயது 14. என் அண்ணன் சர்பத் கடை ஒன்றை நடத்தினார். அவருக்கு உதவியாளராக இருப்பதற்குப் பெற்றோர் எனது படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்." என்கிறார்.

முத்தமிழ் மீதும் கலைகள் மீதும் கொண்ட மோகத்தினாலும் இசைமீது கொண்ட பேரார்வத்தினாலும் இசைக்கச்சேரிகளைப் பார்ப்பதற்கும், இரசிப்பதற்குமாக இந்தியாவுக்குப் போக நேரிட்டது. 1955 ஆம் ஆண்டு டிசம்பரிலே இசைக்கச்சேரி பார்ப்பதற்கெனத் தமிழகத்திற்குச் சென்றோம். பல்வேறு திருத்தலங்களைத் தரிசித்தோம். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சாம்பமூர்த்தியின் தம்பிமக்கள் பலராமன், கிருஷ்ணன், ரவி, எடிட்டர் சேலம் ராஜன் ஆகியோரின் நட்புக் கிடைத்தது. யாழ்நகரிலே ராஜாதியேட்டர் கட்டத் தூண்டப்பட்டேன். மட்டமான எனது பொருளாதார நிலையிலும் எனது துணிவே எனக்குப் பெருந்துணையாயிற்று. "படம் இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் செய்தேன். ஆனால் ஜாபீர் ஏ. காதர், இறக்குமதி செய்ய முடியாது. எந்தத் திரையரங்குகளிலுந் திரையிடவும் முடியாது என்று கூறிவிட்டார். பெரு முதலாளிகளுடனும் தொழிலதிபர்களுடனும் போட்டிநிலை உருவாயிற்று. இந்நிலையிலே இனிமேல் யாழ்ப்பாணத்தில் 4, 5 படமாளிகைகள் கட்டியபின் தான் இந்தியாவுக்கு வருவேன் என்ற சபதத்துடன் இலங்கை திரும்பினேன்" என்கிறார்.

1956இல் நாரந்தனையைச் சேர்ந்த சரஸ்வதி என்ற பெண்ணைக் காதலித்து செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நண்பர்கள் சிலரின் முன்னிலையிலும் அன்னதானக் கந்தனின் முன்னிலையிலும் திருமணம் செய்து கொண்டேன். மனைவி சரஸ்வதி கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலையில் ஆசிரியையாகப் பணிபுரிந்தார். சாந்தி, திருபரன், வசந்தி, ராஜ்குமார், அமுதா, விஜிதா, ரமணன் என்னும் பிள்ளைகள் உள்ளனர்.

1957 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண மாநகர சபை மூலம் பல சேவைகளைக் கண்ணியமாக நிறைவேற்றி மக்கட்பணியும் சமுகசேவையுஞ் செய்தேன். யாழ். நகர மத்தியிலிருந்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. துரைராசாவின் காணியை நண்பர்கள் மூலம் அவரை அணுகிப் பெற்றுக் கொண்டேன். அதில் ராஜா திரையரங்கைக் கட்டினேன். அதற்கு அப்போதைய மாநகர முதல்வர் திரு. அல்பிரட் துரையப்பா ஆவன செய்து தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பலவிதமான போட்டிகளுக்கும் சவால்களுக்கும் மத்தியில் வவுனியாவில் வசந்தி, திருகோணமலையில் சரஸ்வதி, மட்டக்களப்பில் சாந்தி திரையரங்குகளைக் கட்டினேன்' என்கிறார். பட இறக்குமதியாளர்கள் படம் தரமுடியாதெனப்பாரிய முட்டுக்கட்டைகளையிட்டனர். படம் இறக்குமதி செய்யவும் முடியாதென்றனர். படமும் திரையிடுவதற்குத் தரமுடியாதென்றனர். நண்பர்கள் ஈ. எம். வி. நாகநாதன் தலைமையில் பாராளுமன்ற அங்கத்தவர்கள் சிலர் அப்போதைய நிதியமைச்சர் கௌரவ ஜே. ஆர். ஜயவர்தனா அவர்களுடன் வாதிட்டு, பட இறக்குமதி அனுமதியைப் பெற்றுத் தந்தனர். பல பெறுமதியான படங்களை இறக்குமதி செய்தேன். திரையிலுமிட்டேன். விநியோகமுஞ் செய்தேன், சவால்கள் முறியடிக்கப்பட்டன. ஆயினும் தமக்கு எத்தகு தீங்கு செய்தவருக்கும் தாம் தீங்கு செய்ய நினைப்பதுமில்லை இடைஞ்சலும் இடையூறு செய்தவர்களுக்கு இடையூறு செய்ய நினைத்ததுமில்லை; இது அபத்தம், வெறுக்கத்தக்கது; சால்புடைமைக்கு மாறானது.

*"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்*
*என்ன பயத்ததோ சால்பு"*

'இடுக்கண் வருங்கால் நகுக' என்பார் வள்ளுவர். தீங்குள்ளங் கொண்டோர் நாளோட்டத்தில் நாதியற்று, நிலை குலைந்து, வழியற்று, வக்கற்றுப் போனதையே யான் கண்டுள்ளேன் என்கிறார்.

முன்பு குறிப்பிட்டது போல சங்கீதப்பித்து, இசை விருப்பார்வம் காரணமாக 1955 இல் டிசம்பர் மாதம் மெட்ராசுக்கு இசைவிழாப் பார்க்கவெனப் பலாலியிலிருந்து திருச்சிக்குச் சென்றோம். அப்போது ரூபா 45/= போய் வர கொடுத்து திருச்சியிலிருந்து மெட்ராசுக்குச் சென்று கிண்டியில் படித்துக் கொண்டிருந்த நண்பர்களுடன் தங்கி, மயிலாப்பூர் மியுசிக் அகடமி, தமிழிசைச் சங்கம் போன்ற இடங்களில் நடந்தபல இசைக் கச்சேரிகளில் மாபெரும் வித்துவான்களாகிய மதுரை மணிஐயர், சித்தூர் சுப்பிரமணிப்பிள்ளை, செம்பை வைத்தியநாத பாகவதர், முசிரி சுப்பிரமணிய ஐயர், ஜி. என். பாலசுப்பிரமணியம், திருமதி. எம். எஸ். சுப்பு லக்ஷ்மி, வசந்தகோகிலம், ஆலத்தூர் பிரதர்ஸ் ஆகியோரின் கச்சேரிகளையும், தமிழ்ச்சங்கத்தில் கே. பி. சுந்தராம்பாளின் கச்சேரியுடன் இன்னும் பலரின் கச்சேரிகளையும், ராசரத்தினம்பிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரி எல்லாம் கேட்டு, ரசித்தோம். அந்நாட்களில் பேராசிரியர் சாம்பமூர்த்தி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் பணியாற்றிவந்தார். அவருடைய தம்பியின் மக்கள் பலராமன், கிருஷ்ணன், ரவி ஆகிய மூவரும் நண்பர்களாவர். அவர்களுடன் சினிமா ஆர்வத்தினால் கோடம்பாக்கம் போனோம். அங்கு வரலட்சுமியின் பிரகாஷ் ஸ்ரூடியோவிற்குப் போனோம். அங்கு சேலத்தைச் சேர்ந்த ராஜன் என்னும் அன்பர் கலைஞர் படங்களை எடிற் பண்ணிக்கொண்டிருந்தார். அவருடன் கதைத்ததில் அவருக்கு எம்மை நன்கு பிடித்துக் கொண்டது.

தெலுங்குப்படம் வெற்றிவீரன் (என். டி. ராமராவ், அஞ்சலிதேவி நடித்தது) படத்தில் இரண்டு பிரதிகளை இருபதாயிரம் ரூபாவுக்கு இலங்கையுரிமைபெற, பேசினேன். அதை யாழ்ப்பாணம் ராணி தியேட்டர் உரிமையாளருக்குக் கடிதம் மூலம் எழுதி, திரு. ஜாபீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதரிடம் கூறி வெளியிடக் கேட்கும்படி கேட்டேன். சில தினங்களில் அவரின் பதில் வந்தது. இந்த வியாபாரத்தில் எவரையும் அனுமதிக்க முடியாதென்றும் அதை விட்டுவிடும் படியும் எழுதியிருந்தார்.

1949ஆம் ஆண்டுகளில் தமிழரசுக் கட்சியின் கூட்டம் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலடியில் கூட்டப்பட்டது. அப்போது தந்தை செல்வா, டாக்டர், நாகநாதன், வன்னியசிங்கம், நாவலர் அமிர்தலிங்கம் ஆகியோர் இருந்தனர், இராஜவரோதயம் திருகோணமலையிலும், சொல்லின் செல்வர் செ. இராசதுரை மட்டக்களப்பிலும் இருந்தனர். தமிழ்க் காங்கிரஸ் கட்சியே முதலில் இருந்தது. அரசியலில் பிரவேசித்தபோது நிலவிய சூழ் நிலைகளை விவரிக்கும் தொழிலதிபர் எஸ். ரி. ஆர் கூறுவனவற்றிலிருந்து அவர் தடம்பல பதித்துக் களம் பல கண்டவர் என்பது துலக்கம் பெறுகிறது. அவர் கூறுகிறார்.

நான் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியில் இணைந்து கொண்டேன். கச்சேரி உண்ணாவிரதம், வவுனியா மாநாடு, திருமலை மாநாடு, கல்முனை மாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டேன். கல்முனை மாநாட்டிற்கு வருகை தந்த பிரதமர் டட்லி சேனாநாயக்காவை மட்டக்களப்பு கல்லடியில் எனது தியேட்டருக்கு முன்னால் நிறுத்தி மலர் மாலைகளை அணிந்தோம். கடைசியாக மன்னார் மாநாடு நடைபெற்றது. அப்பொழுது நகரமண்டபத்தில் எனது நாதன் சினிமா படமாளிகையில் படக்காட்சி நடந்தது. அதில்தான் தமிழரசுக்கட்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று அம் மாநாடு நடைபெற்றிருக்குமானால் தலைவர் அமிர்தலிங்கம் உட்படப் பல தலைவர்களும் குண்டு வெடிப்பால் உயிர் இழந்திருப்பர். வெடிகுண்டு செய்தியை அறிந்து கொண்டமையால் ஒவ்வொருவரும் வெவ்வேறு இடங்களுக்கும் விலகிப் போய் விட்டார்கள். அனர்த்தம் தவிர்க்கப்பட்டது. நானும், ஆலாலசுந்தரமும் வேறு சில நண்பர்களும் திருக்கேதீஸ்வரம் சென்று மடங்களிலே தங்கினோம். தற்போது 2012 மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி மாநாட்டிலும் கலந்து கொண்டேன். சிறி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டோம். வட்டுக்கோட்டை மாநாட்டில் கூட்டணி அமைப்பு முயற்சி நடந்தது. திருமலை மாநாடு நடைபெற்றது. இவ்வாறு தான் தமது கட்சித் தொடர்புகள் இன்று வரை நடக்கிறது'' என்கிறார் எஸ்.ரி.ஆர் தொழிலதிபர்.

1959 ஆம் ஆண்டளவிலே இசைவாணர்கள் கலைஞர்கள், திரைப்பட நட்சத்திரங்கள், பண்ணிசை ஓதுவார் மூர்த்திகள், இந்தோனேஷியா நாட்டியக் குழுக்கள் என்போர் வந்தனர் என்கிறார். வீணைபாலச்சந்தர், மதுரைசோமு, கே. பி. சுந்தராம்பாள், சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, சேதுராமன் பொன்னுச்சாமி, திருச்சி சங்கரன், எம்.எஸ் அனந்தராமையர், ஓதுவார் முத்துக் கந்தசாமி தேசிகர் பி.ஏ.எஸ்.இராஜசேகரன், இந்தோனேஷியாவிலிருந்து இராமாயண நாட்டியக் குழுவினர் என்போர் வந்தனர். பி.ஏ.எஸ்.இராஜசேகரனின் வருகைக்கு கல்வியமைச்சை சேர்ந்த சோமசேகரம் அவர்கள் அனுசரணை புரிந்தார். ஆர். அஜித் என்பவர் 2012.04.20 ஆம் திகதி இல் யாழ் ஓசை (ப.09) யில் எழுதிய ''யாழ்ப்பாணத்தில் திரை அரங்குகளின் தோற்றமும் வளர்ச்சியும் (ராஜா திரை அரங்கு – 1962 வரை) என்னும் கட்டுரையில் மேல்வருமாறு எழுதியுள்ளார். இக்கட்டுரையிலே தொழிலதிபர் எஸ்.ரி.ஆர் அவர்களின் முயற்சிகள் கூறப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"1962இல் எஸ்.ரி.ஆர் யாழ் கஸ்தூரியார் வீதியில் ராஜா திரையரங்கை அமைத்தவர். அப்போதைய நியூ ஒலிம்பியத் திரையரங்கு முகாமையாளர் அப்துல் காதர் திறந்து வைத்தார். திரைப்படக் கூட்டுத்தாபனம் ஒன்று நிறுவ வேண்டியதன் அவசியத்தை அரசுக்கு கூறி அதனை நிறுவ தூண்டுதலாக விளங்கினார். திரைப்படங்களை இறக்குமதி செய்து திரையிட்டார். ராஜா திரையில் முதன் முதலாக போர்வீரன் Gladiators போன்ற ஆங்கிலப் படங்களை 1964ஆம் ஆண்டு திரையிட்டார். முதல் தமிழ் திரைப்படமாக ஜெய்சங்கர் நடித்த "பெண்ணே நீ வாழ்க" என்னும் திரைப்படம் திரையிடப்பட்டது. எம்.ஜி.ஆர் நடித்த காவல்காரன் திரைப்படம் நூறு நாட்களைத் தாண்டி அதிக வசூலைக் குவித்து வரலாறு காணாத வெற்றியினை ஈட்டியது. காவல்காரன் திரைப்படத்திற்கான 100 கட்டவுட்டுக்கள் ஆட்டிஸ்ட் மணியத்தினால் வரையப்பட்டன. 2007இல் ராஜா 11 திரையரங்கு கட்டப்பட்டு படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. தற்போது யாழ் நகரப்பகுதியில் காணப்படும் சிறந்த திரை அரங்கம் நவீன ஒலி, ஒளி அமைப்புகளுடன் ராஜா திரை அரங்கம் திகழ்கிறது. அண்மையில் ஏழாம் அறிவு திரைப்படத்தினை நல்ல வசூலில் திரையிடப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எஸ்.ரி.ஆர் அவர்களின் யாழ் வீட்டில் எம்.என்.ராஜம், எஸ்.எஸ்.ஆர்.விஜயகுமாரி, தங்கவேலு சரோஜா, விஜேயின் தந்தை (விஜய் பரிசளித்தார்) ரி.எம்.சௌந்தர்ராஜன், பேராசிரியர் ஔவை நடராஜன் ஆர்க்காடு வீராசாமி, நாஞ்சில் மனோகரன், பாபு சண்முகம், விஜயகுமாரணதுங்க ஆகியோர் தங்கிச் சென்றுள்ளனர்.

கல்லடியில் சாந்தி திரையரங்கு திறப்புவிழாச் செய்த போது அரசாங்க அதிபர் திறந்து வைத்து 5 நிமிடம் சென்ற போது அங்குபொருத்தப்பட்டிருந்த சாதனங்கள், இயந்திரங்கள், மின்விசிறிகள் அனைத்தும் எரிந்து சாம்பலாக்கப்பட்டன. ஆயினும் புதிய சாதனங்களுடன் மீண்டும் திறக்கப்பட்டது.

1969இல் ஒளிவிளக்கு படம் வந்தபோது கொழும்புத் தியேட்டர்கள் தடை விதித்தன. இடைஞ்சல் செய்யப்பட்டது. தொழிற் போட்டியும் தமிழர் திரையுலகம் என்னும் காழ்ப்பும் பலத்த சோதனைகளைத் தந்தன. எதிர் நீச்சல் போட்டே தலைதூக்க வேண்டியதாயிற்று.

திரையரங்குகளிலே பெறப்பட்ட வசூலைக் கொண்டு வடபகுதியிலும் மத்திய மலையகத்திலும் ஆலயத் திருப்பணிகள் செய்யப்பட்டதுடன் மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் மன்னார் திருக்கேதீச்சரத்திலும் திருப்பணிகள் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கன. தமக்கும் நயினாதீவு ஸ்ரீ வீரபத்திரசுவாமி கோயிலுக்கும் உள்ள நெருங்கிய அத்யந்த உறவினை நீளநினைந்து கொள்ளும் எஸ்.ரி.ஆர் தொழிலதிபர், காவல்காரன் திரைப்படத்தின் வசூலில் பெறப்பட்ட பணம் நயினாதீவு பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி கோயில் புனருத்தாபனப் பணிகளுக்காக கொடுக்கப்பட்டது என்பது முக்கியம் பெறுகிறது. வீரபத்திர சுவாமி சைவ சமயக் கடவுள் வரலாற்றில் காவல் தெய்வம் என்பது பிரத்தியட்சமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969இல் பிறிதொரு திருப்பணியும் ஹற்றன் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது. அட்டனில் காவல்காரன் திரைப்படம் ஓடியபோது அவ்வசூலில் மாணிக்கப்பிள்ளையார் ஆலயப் படிக்கட்டுகள் கட்டப்பட்டன. 1976 இல் திருக்கேதீஸ்வரம் ஆறுமுகசுவாமி கோயில் புனரமைப்புச் செய்து கட்டப்பட்டது. 1977இல் கல்லடியில் சாந்தி திரையரங்கிற்கு முன்னுள்ள கல்லடி முருகன் கோயிலினது கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டபோது அவற்றைத் திருத்தியமைத்தவர். திருக்கோணமலையிலுள்ள விஸ்வநாதர் கோயில் மணிக் கூட்டுக் கோபுரம் கட்டப்பட்டது. பெற்றோரின் பெயரிலே சிதம்பரம் புண்ணிய நாச்சி மடத்து அறை கட்டப்பட்டது. தந்தையார் பெயரிலே நயினாதீவு அமுதசுரபி அன்னதான மடத்தில் தங்கும் அறை கட்டப்பட்டுள்ளது. பூண்டுலோயாவில் திருப்பூர்குடி ஆறுமுகம் அவர்கள் இருந்தபோது தமிழ்ப் பாடசாலை கட்டுவதற்கு முஸ்லிம் பாய் ஒருவரது உதவியுடன் நிதி உதவி செய்யப்பட்டது. விளானில் பிள்ளையார் கோயில் தேர்முட்டித் திருப்பணி நிறைவேற்றப்பட்டது. யாழ்ப்பாணம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் அன்னதான மடம் கட்டப்பட்டு அதனை திறந்து வைத்தவர். சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களாவார்.

யாழ்ப்பாணம் செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோயிலின் பரிபாலன சபையின் தற்போதைய தலைவராக எஸ்.ரி.ஆர் அவர்கள் இருந்து தொழிற்பட்டு 10.09.2010 இல் வெகு சிறப்பாக மகா கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. திருச்செந்தூர் முருகப் பெருமான் இக்கோயிலில் கோயில் கொண்டுள்ளதாக அவருக்காவே இக்கோயில் கட்டப்பட்டதாகவும் கருத்துக்கள் உள்ளன. தொழிலதிபர் எஸ்.ரி.ஆர் திருச்செந்தூர் முருகப் பெருமானை நெஞ்சிலிருத்தித் துதித்து புனரமைக்கப்பட்டது. இத் திருக்கோயில் என்பதும் இக் கோயிலின் சிறப்பு வரலாறாகும்.

2010.09.10 ஆந் திகதி யாழ் தினக்குரல் பத்திரிகையிலே வெளிவந்த மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனச் சிறப்புமலரிலே இடம்பெற்றுள்ள யாழ் ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோயிலின் வரலாறு வருமாறு.

"நாட்டுக்கோட்டை நகரத்தாரால் ஸ்தாபித்து வழிபடப்பட்ட ஸ்ரீ கதிரேசன் கோயில் யாழ் காங்கேசன்துறைப் பெருவீதியில் வலப்புறம் கடையடிப் பிள்ளையார் இடப்புறம் வண்ணார் பண்ணைச் சிவன் கோயில் மேற்கில் ஸ்ரீ வில்லூன்றிப் பிள்ளையார், கிழக்கே ஸ்ரீ வெங்கடேசப் பெருமான், ஸ்ரீ கன்னாதிட்டி காளியம்மன் என நாற்புறமும் திருக்கோயில்கள் சூழ மத்தியில் கிழக்கு நோக்கிய திருக்கோயில். சுந்தரவதனமுடைய செந்தில் ஆண்டவன் இரு மருங்கிலும் வள்ளி தேவசேனா அழகு செய்ய அமர்ந்தருள் செய்கின்ற காட்சி காண்போரைக் கையெடுத்துக் கும்பிட வைக்கும் மாட்சியுடையது. ஏறத்தாழ 130 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிலிருந்து இங்குவந்த நாட்டுக் கோட்டைச் செட்டியார்களால் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வாலயம் 90 வருடங்களாக மிகவும் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வந்தது. 1931 இல் மூலவராக வைக்கப்பட்ட வேற்பெருமானுக்குச் சிறப்பாக கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1975 இல் TR 144 வழக்கில் கோயில் நிர்வாகம் புதிய அறங்காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறங்காவலர் குழுத் தலைவர் திரு. கே. சி தங்கராசா, செயலாளர் திரு.சி.சே.சோமசுந்தரம், பொருளாளர் திரு.எஸ்.தியாகராசா, அட்வகேட் ரி.சோமசுந்தரம் மு.பாலசிங்கம், பி. எஸ். ஐயர், ஆகியோர் அறங்காவலராக நியமிக்கப்பட்டனர். முதலாவது கூட்டத்திலே சி.தியாகராசா (பொருளாளரின்) பிரேரணையை ஏற்றுக் கொண்ட சபை தற்போது கருவறையிலுள்ள திருச்செந்தூர்ப் பெருமானையும் மயிலை (மயூரம்) யும் மகாபலிபுரத்தில் கணபதி ஸ்தபதியின் கைவண்ணத்தில் இங்கு கொண்டு வந்து 15.07.1976இல் திருக்கேதீச்சரம் சிவஸ்ரீ சுப்பிரமணிய பட்டர் அவர்கள் பிரதிஷ்டா குருவாகவும் வேதாகம ஞானபாஸ்கரன் இணுவில் சிவஸ்ரீ தா மகாதேவக் குருக்கள் ஆலய ஸ்தானிகர் "கிரியா கலாமணி" சிவஸ்ரீ நாராயணக் குருக்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான குருமார்களையும் கொண்டு 1979இல் குடமுழுக்கு நடைபெற்றது. 2010.09.10 ஆந் திகதியன்று நவகுண்டபஷ கும்பாபிஷேகம் சிவஸ்ரீ கி.நாராயணக் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பெரியார் எஸ்.ரி.ஆர் அவர்கள் ஈடுபாட்டுடன் மேற்கொண்டுள்ளஆன்மீகப் பணிகள் குறிப்பிட்டுக் கூறத்தக்கவை. திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானம், கொழும்பு ஈழத்துத் திருநெறித் தமிழ்மன்றம், சபாரத்தினம் தொண்டர் சபை, என்பன குறிப்பிடத் தக்கன. மகான்கள் தொடர்பு, சித்தர்கள் அருளாளர்கள் தொடர்புகள் பிறிதொருபான்மையன. சிவயோக சுவாமிகள் சபாரத்தின சுவாமிகள், திருகோணமலை சுவாமி , கெங்காதரானந்தஜி சுவாமிகள், தந்திரதேவா காயத்திரி சித்தர் சுவாமிகள், அளவெட்டி அருட்கவி விநாசித்தம்பி, ஹவாய் சுப்பிரமணிய சுவாமிகள் ஆகியோரது தொடர்புகளும் ஆசீர்வாதமும் பெற்றவராகிறார்.

கண்ணியம் மிக்க அறநெறிச் செல்வராயும் நேர்மையாளராயும் கடமை வீரனாயும் பொன்மனச் செம்மலாயும் மிளிரும் எஸ்.ரி.ஆர் ஐயாவுக்கு 1977, 1978, 1990ஆம் ஆண்டுகளிலே கௌரவப்பட்டங்கள் வழங்கப்பட்டன. நல்லைக் குருமணி சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளால் சிபாரிசு செய்யப்பட்ட விருதுகளை அவர் நிராகரித்து விட்டார். "திருப்பணித் தவமணி " என்னும் விருது அதிபர் ச.அம்பிகைபாகன் முன்னிலையில் ஆதீனத்தால் வழங்கப்பட்டது. கலாநிதி சாம்பசிவ சரவணபவக் குருக்களால் (ஐயப்பதாசக் குருக்களால் ) 1990 இல் "கலைக்காவலர்" விருது வழங்கப்பட்டது.

நல்லை ஆதீனத்திலே சமாதிக் கோயில் கட்டும் முயற்சியில் இவர் பெரிதும் ஈடுபாடு கொண்டார்.பிரமுகர்களான, திரு ஞானசந்திரன், வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், திரு கனகரட்ணம், நல்லூர் எசமான், மழவராயர் குடும்பத்தினர், திரு அமிர்தலிங்கம், திரு சிவசிதம்பரம் திரு. துரைராசசிங்கம் ஆகியோர் முன்னின்று நல்லையாதீனத்துச் சமாதி கோயிலில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுக் கட்டப்பட்டது.1974ஆம் ஆண்டு 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நிகழ்ச்சிகளின் நிறைவு நாளன்று பல்வேறு நாடுகளிலிருந்து வந்த அறிஞர்கள், பேராசிரியர்கள், வண. தனிநாயகம் அடிகள், பேராசிரியர் சு. வித்தியானந்தன் பண்டிதர்.கா.பொ.இரத்தினம் உட்பட ஏறத்தாழ 300 பேர் வரையில் எஸ். ரி. ஆர். ஐயாவின் வீட்டில் கலந்து மதிய உணவு உண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுத்துக் கூறின், தொழிலதிபர் எஸ். ரி. ஆர் அவர்களின் வாழ்வும் பணிகளும் கலை, சமூகம், சமயம், திருப்பணிகள், விழாக்கள், மாநாடுகள், தனிப்பட்ட உதவிகள் என்று பன்முகப்பட்டிருந்தன. அவர் இனத்தையும், மொழியையும், பண்பாட்டையும் எப்பொழுதுமே நேசித்து வாழ்பவர்; பரோபகாரி. இக்கட்டுரையாசிரியர் தமது நூல்களை வெளியிட்டபோதெல்லாம் முன்வந்து மனமுவந்து, பண உதவி நல்கியும் அவ்வப்போது குருபூசைகள், திருவழிபாடுகள் நிகழும் வேளைகளிலெல்லாம் தாமே தலைமையை ஏற்றும், சிறப்புரைக்கு எம்மையும் ஏற்பாடுசெய்யுமாறு கூறியும் பல பேரறிஞர்களைக் கொண்டு, உரையாற்றுவித்தலும் உணவு வழங்குதலும் தமது கடமையென்று எண்ணித் தொழிற்படுபவர். கவனத்துடன் கருமமாற்றும், அனுபவ வெளிப்பாடுகள் அவரது முயற்சிகளை எவரும் மெச்சும்படியாக செய்வர் என்பது எம் அனுபவம்

தமது இடர்தரு தொழிலதிபர் வாழ்விலே பட்ட பேரறிவும் உறுதியான தெய்வ பக்தியும் சாத்வீக குணநல மேன்மையும் சுமூகமான வாழ்க்கை நலனை நல்கியுள்ளன.

பொன்விழா மேன்மைச் சிறப்புக்களால் உளம் பூரிப்படையவும் மேன் மேலும் வளம் பெருகவும் வாழ்வில் மாண்புறு எண்ணங்கள் நிலைக்கவும் எம் குல தெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் திருவடிகளைத் தொழுது வாழ்த்துகிறோம்.

*அருட்கலை மாமணி சித்தாந்த பண்டிதர், வாசீசகலாநிதி*
முனைவர் கனகசபாபதி - நாகேஸ்வரன் *M.A.Ph.D*
*முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை*
*சப்ரகமுவ பல்கலைக்கழகம்*
*பெலிகுல்லோயா*
*இலங்கை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜா திரையரங்கில் திரையிடப்பட்ட படங்களில் சில...

- பெண்ணே நீ வாழ்க
- என் ராசாவின் மனசிலே
- பொன்னுமணி
- முதல் மரியாதை
- பூவேலி
- நினைத்தேன் வந்தாய்
- காதலே நிம்மதி
- மறுமலர்ச்சி
- சத்ரிய வம்சம்
- கிழக்கும் மேற்கும்
- சிட்டிசன்
- தமிழன்
- வசீகரா
- அமர்க்களம்
- கஜினி
- பிதாமகன்
- பையா
- தில்லாலங்கடி
- நரசிம்மன் I.P.S
- தங்கை
- பாபு
- ஒளிவிளக்கு
- குழந்தைக்காக
- பெண்ணே நீ வாழ்க
- ஈரமான ரோஜாவே
- ஆவாரம் பூவே
- மனம் ஒரு குரங்கு
- எங்கள் தங்க ராஜா
- மாடப்புறா
- காஞ்சித் தலைவன்
- தங்கத் தம்பி
- காதல் பறவை
- மூகூர்த்தநாள்
- செல்லப்பெண்
- கற்பூரம்
- அபூர்வ பிறவிகள்
- டீச்சர் அம்மா
- ஹரிச்சந்திரா
- மனோகரா
- 67ல் என்.எஸ்.கே
- கொடுத்து வைத்தவள்
- பாசம்
- முத்து மண்டபம்
- தேனும் பாலும்
- நீரும் நெருப்பும்
- ஜெனோவா
- டில்லி மாப்பிள்ளை
- கல்லும் கனியும்
- மகனே நீ வாழ்க
- அந்தநாள்
- வீட்டுக்கு வீடு
- அன்பு வடிவம்
- விநாயகர் சதுர்த்தி
- மாவீரன் ஜெயசீலன்
- துலாபாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# STR FILMS



Estd. In 1962

Producers, Importers & Exhibitors of Cine Films

27-2/3, JEYANTHA WEERASEKARA MAWATHA,
COLOMBO-10, SRI LANKA.
Tel: 2586709 Fax: 2598982 E-mail : strfilms@yahoo.com

Half a century have we did making people happy by the grace of god
we wish to continue so ever so long

**RAJAH TALKIES (dts)**
Jaffna
Tel : 021 2227332

**RAJAH -2 (dts)**
Jaffna.
Tel : 021-2227334

**SARASWATHI TALKIES (dts)**
Trincomalee
Tel : 026-2222221

**SHANTHI CINEMA (dts)**
Batticaloa
Tel : 065-2223516

**VASHANTHI CINEMA (dts)**
Vavuniya.
Tel : 024-2221410

STR FILMS
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*


# Hotel Vasantham

**No. 40, KANDY ROAD,**
**VAVUNIYA.**
**Tel : 024 2222607**

## AVAILABLE

- **Air Conditioned, Non air conditioned economical rooms with attached bath**
- **Furnished Hall for function & celebrations.**
- **Advance bookings are entertained for conference, reception etc.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளமையில் STR...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை சரஸ்வதி டாக்கீஸ் உரிமையாளர் STR மத்தியில், இடது பக்கம் மனேஜர் தனபாலசிங்கம். வலது பக்கம் குருபரன், தனபாலசிங்கத்திற்கு பின் நிற்பவர் காலம் சென்ற குகதாசன் மற்றையோர் உத்தியோகத்தர்கள்.




வவுனியா வசந்தி திரையரங்க உத்தியோகத்தர் குழு



மட்டக்களப்பு சாந்தி படமாளிகை உத்தியோகத்தர்கள்




மட்டக்களப்பு சாந்தி படமாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50வது கல்யாண விழாவின்போது இலண்டனில் குடும்ப உறவினர்களுடன்...



50வது கல்யாணவிழாவின்போது இலண்டனில் பேரப்பிள்ளைகளுடன்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ் ராஜாதிரையரங்கை
நியு ஒலிம்பியா திரையரங்க
நிறுவனர் சுவைப் ஏ. காதர்
திறந்து வைக்கும் காட்சி
1962 - யூலை 04



யாழ் மாநகர சபை
ஆணையாளர்
திரு. முனசிங்க அவர்கள்
ராஜா திரையரங்க திறப்பு
விழாவில் உரையாற்றும்
காட்சி



ராஜாதிரையரங்க திறப்பு
விழாவில் அப்போதைய
மாநகர முதல்வர் கௌரவ
டாக்டர் தர்மலிங்கம் உரை
நிகழ்த்தும் காட்சி
1962.07.04



ராஜா திரையரங்க திறப்பு
விழாவில் உரிமையாளர்
S.தியாகராசா STR
உரையாற்றுகின்றார்.
அருகில் மைத்துனர்
க.சோமசுந்தரம்
நிற்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ராஜா திரையரங்கில் மாலினி பொன்சேகா அவர்களை மலர் மாலை அணிந்து கௌரவிக்கும் காட்சி



ராஜா திரையரங்கில் திரு. குமார ரணதுங்க அவர்களுக்கு (மாண்புமிகு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் கணவர்) கௌரவித்தல்.



இளைய தளபதி நடிகர் விஜய் அவர்கள் STR அவர்களை வாழ்த்திக் கேடயம் வழங்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் மாநகரசபை வேட்பாளராக போட்டியிடும் காட்சி
திரு. பதி (ராணி தியேட்டர்) 1953




வண்ணார் பண்ணை யாழ் மாநகரசபை
பொதுசனநூலக கிளை திறப்புவிழாவில்
STR உரையாற்றுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிருபானந்த சுவாமிகள் STRக்கு ஆசி வழங்கும் காட்சி. அருகில் இணுவில் திரு. நடராசா




பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் பத்தாவது சைவ மாநாட்டின் போது



இராமகிருஸ்ணமிஷன் ஆத்மகணாநந்த சுவாமிகளும் STR அருகில் துரைராசா. ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் குரு பூசையின் போது



ரவிசங்கர் சுவாமிகள் STR யாழ் இல்லத்தில் தங்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதி ஆலயத்தில் STR திருமணத்தில் எடுத்த காட்சி.



02.05.2008 சிங்கப்பூரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியா வசந்தி
திரையரங்கை ஆரம்பித்து
வைத்த வவுனியா நகரபிதா
திரு பொன்னையா அவர்களை
மலர் மாலை அணிந்து
கௌரவித்தல். அருகில் STR
தம்பி திரு. தனபாலசிங்கம்
நிற்கின்றார்.



திரு திருமதி இரத்தினராஜா
வீட்டில் எனது பாலிய நண்பர்
திரு இரத்தினராஜாவுடன்
நிற்கும் எமது இளமைக்
கோலம்



மட்டக்களப்பு சாந்தி
படமாளிகையை அரசாங்க
அதிபர் லுடுகின்ஸ் திறந்து
வைக்கும் போது மலர் மாலை
சூட்டி கௌரவித்தல் - 1964

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சத்யா மூவிஸ் - காவல்காரன் 100வது நாள் விழா - 1968 விஜயா வாகினி ஸ்ருடியோ - மெட்ராஸ் ஜெயலலிதா, எம்.ஜி.ஆர், எஸ்.ரி.ஆர். ஆர்.எம்.வீரப்பன், ஜெயகுமார்.




நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களை மலர் மாலை அணிந்து கௌரவித்தல்



யாழ்ப்பாணம் STR வீட்டில் தங்கியிருந்த ரி.எம்.சௌந்தரராஜன் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யுத்தத்தினால் மூடப்பட்ட
ராஜா திரையரங்கு மீண்டும்
திறந்து வைக்கப்பட்டது




ராஜாதிரையரங்கின் 41வது
ஆண்டுவிழாவின் போது
ஓவியர் மணியம்
பொன்னாடை போர்த்தி
மாலை அணிந்து பொற்கிழி
வழங்கி வணங்கி
கௌரவிக்கப்பட்டார். அருகில்
சட்டத்தரணி கு. கதிரவேலு
மற்றும் உறவினர்கள்
நண்பர்கள்.




44வது ஆண்டுவிழாவின்
போது நீண்டகால நண்பர்
பாரத் ஸ்ருடியோ
ஜயாதம்பி மாலை
அணிவித்து
கௌரவிக்கப்பட்டார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரவிசங்கர் குருஜியுடன்
எனது யாழ்ப்பாண
இல்லத்தில் தரிசனம்.



கம்பன் கழக இசைவேள்வியில் இசைமேதை சந்தான கோபாலன் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.



திருவாசகம் ஸ்ரீ சபாரெத்தின சுவாமிகளது 22வது குருபூசை சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது 23.01.10. திருப்பணித்தவமணி சி.தியாகராசா STR C. V. விக்னேஸ்வரன் அவர்களால் கௌரவிக்கப்படுகின்றார்.

மகாபலிபுரத்தில்
செதுக்கப்பட்ட
திருக்கேதீஸ்வரத்துக்கான
சிற்பங்களை தலைவர்
நமசிவாயம் சரவணமுத்து
ஆகியோருடன் நின்று
பார்வையிடும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் கதிரேசன் கோவில்
யுத்தகாலத் தோற்றம்



யாழ் செந்தில்
கதிர்வேலாயுத
சுவாமியின் யுத்தகாலத்
தோற்றம்.



செந்தில் கதிர்வேலாயுத
சுவாமி மகா கும்பாபிஷேக
காட்சி 10.09.2010



10.09.2010 மகா
கும்பாபிஷேக காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலலமைச்சர் கர்மவீரர் காமராஜருடன்
STR நிற்கும் காட்சி



தந்தை செல்வாவின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சிக்காக வருகை தந்த இந்திய தி.மு.க. தலைவர்கள் நாஞ்சில் மனோகரன், பாபு சண்முகம், ஆர்காடு வீராசாமி தலைவர் அமிர்தலிங்கம் கா.பொ.இரத்தினம் யோகேஸ்வரன் எஸ்.ரி.ஆர் வீட்டில் STR தம்பதியார் வரவேற்கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாநகராட்சி மன்ற தேர்தலில்
திரு. யோகேஸ்வரன் (பா.உ)
உரையாற்றுதல்.



STR அவர்கள் யாழ்
மாநகராட்சித் தேர்தலில்
வெற்றி பெற்ற போது
(1977) இளைஞர்கள்
மாலை அணிந்து
கௌரவிக்கும் காட்சி.



எமது மாநகராட்சி மன்ற
அங்கத்தவர் தேர்தலில்
தலைமை தாங்கி
என்னை ஆதரித்துப்
பேசும் – திருவாளர்
ஐயாத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் (கதிரேசன் கோவில்) 373 காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அன்னதான மடம் திறந்து வைத்தல்



யா/வண் கதிரேசன் கோவில் மண்டப அடிக்கல் நாட்டு வைபவம் 28.11.2001



10.09.2010 கும்பாபிஷேக காட்சி



10.09.2010 மகா கும்பாபிஷேக காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாண கிளை திறப்பு விழாவில்
முதல்கணக்கை ஆரம்பித்து காசோலையை யோகேஸ்வரன்
பாராளுமன்றஉறுப்பினரிடம் இருந்து STR பெற்றுக் கொள்ளும் காட்சி



திருச்செந்தூரில் 1988ல்
தங்கரதம் இழுக்கும்
நிகழ்ச்சியில் கலந்து
கொள்ளும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்தமகள் சாந்தி
Dr. குலேந்திரன் திருமணபதிவு.
அரச அதிபர் நேசையா நல்லூர்
பாராளுமன்ற உறுப்பினர்
மு.சிவசிதம்பரம், சட்டத்தரணி
தில்லைநாதன்




கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் எம்.ஜி.ஆர்
நினைவுதினத்தின் போது STR தம்பதியர்
அருகில் தமிழ்த் தொண்டர்
திரு.ச.இலகுப்பிள்ளை



யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ்
கல்லூரியில் கார்ணிவேல்
விழாவை STR தியாகராசா
1978ஆம் ஆண்டு திறந்து
வைப்பதையும் கல்லூரி அதிபர்
வலது பக்கம் நிற்பதையும் இடது
பக்கம் பழைய மாணவன்
திரு.குணரத்தினம், நண்பர்
கனகலிங்கம் நிற்பதையும்
காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் ராஜா தியேட்டர்
(இரண்டாவது) 14.07.2008ல்
திறந்து வைத்த டைமன் கவுஸ்
முருகமூர்த்தி தம்பதியர் மலர்
மாலை அணிந்து
கௌரவிக்கப்படும் காட்சி



யாழ்ப்பாணம் புதிய ராஜா தியேட்டர்
திறப்புவிழா 14.07.2008 படம்
தசாவதாரம் திறந்து வைத்தவர்
டைமன் கவுஸ் திரு. முருகமூர்த்தி
தம்பதியார்



2வது ராஜா திரையரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாந்தி படமாளிகையில் "சுறா" படத்திரையிடலை மட்டக்களப்பு மாநகர முதல்வர், அருட்தந்தை மேரி, நண்பர் இரத்தினராசா, மாநகர உதவி மேயர் ஆகியோர்



சென்னையில் V.G.P சந்தோசம் அவர்களுடன்.



STR தம்பதியினர் 50வது ஆண்டு திருமண விழாவின் போது பேரப்பிள்ளைகளுடன்



50வது ஆண்டு திருமண விழாவின் போது இலண்டனில் நண்பர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சத்தியபாமா இராசலிங்கத்திற்கு
பட்டமளிப்பின் போது STR
பாராட்டிப் பேசுதல்
சென்னை அடையார் சங்கீதக்
கலைக் கல்லூரியில்
சத்தியபாமா இராசலிங்கத்திற்கு
பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட
விழா. அருகில் பாலமுரளி,
ரமணி கலைஞர்கள்.



STR அவர்களை V.G.P
சந்தோசம் பொன்னாடை
போர்த்தி கௌரவித்தல்



திருக்கேதீஸ்வர ஆலயத்தின் கருங்கல்
திருப்பணிக்கு 38 கோடி ரூபா செலவில்
இடம் பெறுவதற்கான ஒப்பந்தம்
கைச்சாத்திடுவதற்கான 17.10.2011
செனமன் கிறான் ஹோட்டலுக்கு
வருகைதந்த இலங்கைக்கான இந்திய தூதர்
அசோக் கே. காந்தாவுக்கு அறங்காவலர்
திருப்பணி தவமணி சி.தியாகராசா STR
பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும்
அருகில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ
அவதானிப்பதையும் காணலாம்.



STR தம்பதியினரின் 50வது
ஆண்டு திருமண விழா,
இலண்டன் முருகன் ஆலயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

கடந்த காலம் என்பதே எதிர்காலம், எதிர் காலம் என்பது கடந்த காலம் என்றார் ஓர் ஆங்கில அறிஞர் – ஏனெனில் எமது கடந்த கால ஏற்ற இறக்கங்களை எப்போதும் நினைவிருத்தி மீட்டு மீட்டுச் சிந்திப்பதே எமது எதிர்கால வெற்றிக்கு பாதை அமைப்பதாய் அமையும் என்பதால் நாம் இந்தப் பொன்விழாவைக் கொண்டாடும் இந்தப் பொன்னான நேரத்தில் எனது இளமைக் கால நண்பர்களையும், அன்பர்களையும், உதவி ஒத்தாசை செய்தவர்களையும் நான் நினைவு கூரக் கடப்பாடுடையேன்.

அக்காலத்தில் சுண்டிக்குளியில் இருந்த மகேந்திராபட மாளிகை பங்காளராயும் NOB பஸ் கம்பனி காசாளராயும் இருந்த திரு இரத்தினசபாபதி அவர்களின் நட்பினை நான் நினைவு கூருகின்றேன். நான் அப்போது யாழ். நகரில் கடை வைத்திருந்தேன். எனது கடைக்கு பக்கத்தில் உள்ள வட்டுக்கோட்டையை சேர்ந்தவரின் காணியை அவர் குத்தகைக்கு எடுத்து ராணி படமாளிகை கட்டுவதற்கு உதவியாக இருந்தேன்.

அவர் மூலம் எனக்கு ஜாபிர் ஏ. காதரின் தொடர்பு ஏற்பட்டது.அவர் நியூ ஒலிம்பியாவுடன், லிபட்டி (Liberty) படமாளிகையையும் தொடங்கியிருந்தார்.

அவர் எனக்கு ஆங்கிலப்படம் விநியோகிக்க ஒப்புக்கொண்டார். எனவே நான் எனது படமாளிகை கட்டும் நீண்டகால கனவை நிறைவேற்ற ஆயத்த மானேன். எனவே எனக்கு ராஜா திரையரங்கை கட்டுவதற்கு குத்தகையாக நிலம் தந்த வட்டுக்கோட்டை துரைராஜா குடும்பத்தினருக்கு நன்றியுடையேன். இந் நிலத்தைப் பெறுவதற்கு எனக்கு உதவி புரிந்த பரமேஸ்வரன் மாஸ்ரர், நண்பர் சிவப்பிரகாசம் (குண்டுமணி) என்போரின் அன்பை நினைவு கொள்கின்றேன்.

நான் மாநகராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டதன் முலம், அந்நேர நகர பிதா அல்பிரட் துரையப்பா எனக்கு நண்பரானார். எனது படமாளிகையை கட்டி அங்கீகரிப்பதில் மிக அன்பு ஆதரவு காட்டி ஆதரவு நல்கினார்

படவரைஞர் திரு இராசரத்தினம் அவர்களை அன்பு கூர்கின்றேன்;

ஒரே நாளில் எனது படமாளிகை படம் வரைந்து தந்த அன்புக்குரியவர்

எனது ராஜா திரையரங்கை அழகாகக் கட்டித்தந்த வட்டுக்கோட்டை மேசன் இளையதம்பியையும், அவர் உதவியாளர் நாகேஸ் என்பவரையும் மனங்கொள்கின்றேன்.

மரவேலைகள், கேடர் வேலைகளை முன்னின்று செய்து தந்த நாச்சிமார் கோவிலடி கதிரவேலுவை நன்றி கூர்கின்றேன். மின்சார வேலைகள் செய்து தந்த முருகன் எலக்றிகல் திரு நடராசா, அவர்களை நினைக்கின்றேன்.

எனக்கு படங்கள் தரசிலர் மறுத்த நிலையிலும் எனக்கு ஆங்கிலப் படங்கள் தந்த சுவைப் ஏ. காதர் அவர்களை நினைத்துப் பார்க்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது படமாளிகை தகரக் கொட்டகையாக இருக்கலாம் என்ற நினைவில் இருந்தவர் திடீரென்று யாழ்ப்பாணத்துக்கு எனது படமாளிகை பார்க்க வந்தவர், ராஜா திரையரங்கின் கம்பீர அழகினைப் பார்த்து, அதிசயித்தார், மகிழ்ந்தார்,

அழகான மாளிகைக்கு அழகான இருக்கைகள் போட வேண்டுமென்று, மொறட்டுவையில் ஒரு கடை அறிமுகம் செய்தார். 600 குசன் கதிரைகள் வேண்டினேன், கலரிக்கு 400 மரக்கதிரைகள். இவைகள் எல்லாம் யாழ். திரையரங்கினருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தன.

எனது திரையரங்கில் முதல் ஆங்கிலப்படம் Sign of the Gladiator,, சுவைப் காதர் ஆரம்பித்து வைத்தார். மாநாகர முதல்வர் டாக்டர் தர்மலிங்கம், மாநகர ஆணையாளர் முனசிங்கா வாழ்த்துரை வழங்கினர். கௌரவ அமிர்தலிங்கம் குடும்பத்தினர் வருகை தந்தனர் நான் நன்றியுரையாற்றினேன்.

பருத்தித்துறை திரு சுப்பிரமணியம் மிகச்சிறந்த நிர்வாகஸ்தர், மனேஜர். உதவி மனேஜர் திரு மணி, ஒப்பரேற்றர்கள் சுன்னாகம் இராசரத்தினம், மகாலிங்கம், சிவானந்தம், என்போரை மிக கனிவுடன் நினைந்து கொள்கின்றேன்.

S.T.R Films கம்பனியை கொழும்பில் இருந்து இயக்கியவர் எனது அன்புத் தம்பி பத்மநாதன் அவருடன் உதவியாக இருந்து சேவை செய்த திரு சிவலிங்கம், திரு மகேந்திரன், திரு சந்திரன், திருமதி குலேந்திரன் ரதி, திரு ஜீ. குலேந்திரன், திரு கனகராசா இப்படி அன்புடன் பணியாற்றியவர்களை மனங்கொண்டு வாழ்த்துகின்றேன்.

திரு. தனபாலசிங்கம் எனது அன்புத் தம்பி அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்றபின் கடந்த 20 வருடங்களாக எனது நிறுவனத்தை மிகத்திறம்பட நடத்துவதில் மிகச் சிறந்த நிர்வாகஸ்தராக மேற்பார்வையாளராக செய்யும் பணிகள் அளப்பரியன. அவற்றை எப்படிப் பாராட்டுவதென்பது சொல்லில் அடங்காது.

எனது பெறாமகன் திரு உதயசங்கர், கணக்குப் பரீட்சகராகவும் வேறும் பல வழிகளிலும் ஆலோசகராகவும் இருந்து செய்யும் சேவைகளை நான் மனத்தில் இருத்தி நன்றி கூறுகின்றேன்.

எத்தனையோ சவால்கள், தடைகளுக்கு மத்தியில்பட இறக்குமதி அனுமதியைப் பெற்றுக்கொண்டேன். இதற்காக அப்போது கௌரவ நிதி அமைச்சர் ஜே. ஆர் ஜெயவர்த்தன அவர்களுடன் வாதிட்டு அனுமதி பெற்றுத் தந்த ஈ. எம். வி. நாகநாதன், திரு அமிர்தலிங்கம் உட்பட 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாதிட்டு இந்த உரிமையை எனக்குப் பெற்றுத் தந்தமையை என்றும் மறக்கமுடியாது.

சென்னையில் திரு சிங்காரம் என்னும் பெரியவர் T. M. U. பதி என்ற பெரியவரை எனக்கு அறிமுகம் செய்து தந்தார். சென்னையில் ரி. எம். யூ. பதி திரு. P. K. ஜெயகுமார் அவர்களை அறிமுகஞ் செய்து தந்தார். முதல் தமிழ் படம் ஜெய்சங்கரின் பெண்ணே நீ வாழ்க என்பது, மிக வெற்றி தந்த படம்.

M.G.R. நடித்த காவல்காரன்" 100 நாட்களையும் தாண்டி வெற்றி நடை போட்ட வெற்றிப்படம். அதே போல் ஒளி விளக்கு மிகுந்த வசூல் கொடுத்த வெற்றிப்படம்.

தற்போது நான் இறக்குமதி செய்யும் படங்களை திரைப்படக் கூட்டுத் தாபனத்தினூடாக விநியோகிக்கின்றேன். திரைப்படக் கூட்டுத்தாபனம் அமைக்கப் படவேண்டி நான் பங்காற்றியவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிறுவனம் வெற்றியுடன் இயங்க பாடுபட்ட கடந்தகால உத்தியோகத்தர்கள் தற்போதைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் யாபேரையும் என் அன்பு சகோதரர்களாக நினைத்து என் பேரன்பினையும், எனது குடும்பத்தார் பேரன்பினையும், தெரிவிக்கின்றேன்.

எம்மை எமது சிறுபராயத்திலிருந்து அன்புடன் வளர்த்த எனது மாமனார் மயில்வாகனம் அத்தை தவமணி, எனது அக்கா பராசக்தி இன்னும் பல அன்புள்ளங்கள் எல்லோரையும் நெஞ்சிருத்தி மனங்கொள்கின்றேன். இலங்கை, இந்தியா வாழ்த்துச் செய்திகள் தந்த அன்புக்குரிய பெரியோர்கள், பேராசிரியர்கள், நண்பர்களுக்கு எனதும், எனது குடும்பத்தினரதும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்

தொழிலதிபர் STR – வாழ்வும், பணிகளும் ஒரு கண்ணோட்டம் – என்ற தலைப்பில் இயன்றளவு முழுமையையும் உள்ளடக்கி சுருக்கமாக மிக அழகாக ஒரே நாளில் கட்டுரை எழுதித் தந்தும் பல அன்பு ஆலோசனைகளைத் தந்தும் அன்பு செய்த அன்புத் தம்பி கலாநிதி, வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களுக்கு எனதும் எனது குடும்பத்தினரதும் நன்றி வாழ்த்துக்களைத் தெரியப்படுத்துகின்றேன். மிகக் குறுகிய ஒரு சில நாட்கள் இடைவெளிக்குள் இந்த மலரை வனப்பாக அச்சிட்டுத் தரும் Unie Arts உரிமையாளர் திரு. P. விமலேந்திரன் அவர்களுக்கும், அவர் நிறுவன உத்தியோகத்தர்களுக்கும் எனதும் எனது குடும்பத்தினரதும் பேரன்பினை நன்றி கூறுகின்றேன்.

எனது ராஜா, வசந்தி, சரஸ்வதி, சாந்தி படமாளிகை உத்தியோகத்தர்களையும் வாழ்த்துகின்றேன்.

இந்த மலரை மிகக் குறுகிய சில நாட்களில் செய்து முடிப்பதற்கு ஏற்ற உதவிகள் செய்த ஓய்வு பெற்ற தபால் அதிபர் திரு க. மார்க்கண்டு அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

இதில் நான் குறிப்பிட தவறியவர்களும் என் உள்ளத்தில் உண்டு. ஆதலின் குறைகொள்ளாது மகிழ்வுடன் நிறைவு கொள்ளுமாறு அன்புடன் பணிவுடன் வேண்டுகிறேன்.

* * *

This is an occasion for celebration. A Golden Jubilee is a very rare event in any field. To have an unbroken record of success for fifty (50) years is an achievement that needs no special comment.

My sincere thanks to one and all who made this possible. To name each and everyone who gave me a helping hand is a difficult task. However I have to mention at least a few of them. I will never forget my dedicated staff of my five theatres, the Chairman and officers of the NFC without whose assistance the films would not have been released for public performance.

To complete this souvenir the messages and blessings I received from the religious dignitaries, and all other well wishers in addition to the short history of STR Films written by Professor Nageswaran were indispensible.

Last but not least, Mr. K. Markandu (retired Post Master) who daily supervised the printing of this souvenir and of course the efficient and prompt printers Unie Arts (PVT) Ltd. Deserve a special word of thanks.

The heavenly blessings I received during my entire fifty (50) years in this industry will never be forgotten by me or by my family.

My sincere thanks to the staff of my five theatres and STR films.

**S. Thiagarajah**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962 - 2012

50 STR


STR FILMS
GOLDEN JUBILEE





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD. COLOMBO - 13. +94 11 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org